E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஜனவரி 2021
விலை ரூ.15

ஓம் சக்தி

நிறுவனர் : நா. மகாலிங்கம்



ஜனவரி 12 : ஞான சூரியன் சுவாமி விவேகானந்தர் உதித்த தினம். புதிய சிந்தனைகள் பிறக்கட்டும்!

குமரகுரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புகள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube
Innovate • Incubate • Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



செக்யூலரிசம் என்ற கோட்பாடு நமது அரசியல் சட்டத்தில் இடம்பெற்றுள்ளது. நமது ஜனநாயகம் சமதர்ம, செக்யூலர், தேர்தல் ஜனநாயகம். இதில் செக்யூலரிசம் என்பதை மதச்சார்பற்றது என்று விளக்கி வருகிறார்கள்.

மதச்சார்பற்றது என்பதை அநேகர், மதத்திற்கு எதிரானது என்றே புரிந்து கொண்டனர். அதனால் நமது அரசியல் கட்சிகள், செக்யூலர் கட்சிகள் என்றும், வகுப்புவாதக் கட்சிகள் (கம்யூனல்) என்றும் இரண்டு வகையாக உள்ளன.

செக்யூலர் கட்சிகள் தங்களை முற்போக்குச் சமூகநீதிக் கட்சிகள் என்றும், வகுப்புவாதக் கட்சிகளைப் பிற்போக்கு மதவெறிக் கட்சிகள் என்றும் அவை பேசுகின்றன.

அருட்செல்வர் இதனை ஆய்வுசெய்து, செக்யூலர் கட்சிகள் என்பவை போலி (Psudo) செக்யூலரிசத்தைப் பின்பற்றுகின்றன. வகுப்புவாதக் கட்சிகளோ அதிகவேக மதப்பற்றுதலுடன் உள்ளன என்பதைத் தெளிவுபடுத்தினார்.

அதனால், செக்யூலரிசத்திற்கு அருட்செல்வர் கண்டடைந்த பொருள், அனைத்து மதங்களும் சமம் என்பதாகும். அதற்கு 'சமய சமத்துவம்' என்று பெயர்சூட்டி, அதனைப் பற்றி 1997-இல் எழுதினார். 24 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கட்டுரையை இம்மாதச் 'சுரங்கம்' பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ.ஆர்.



டாக்டர் நா. மகாலிங்கம்

செக்யூலரிசத்திற்கு ஒரு திருத்தம் தேவை

நடைமுறை அரசியலில் ஒரு காலத்தில் ஜனநாயக சக்திகள் என்றும், சர்வாதிகார சக்திகள் என்றும் இனம் பிரித்தார்கள். பின்னர் தேர்தல் காலங்களில் முற்போக்குச் சக்திகள் என்றும், பிற்போக்குச் சக்திகள் என்றும் ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டிக் கொண்டனர். இப்போது அதிகமாகப் பேசப்படுவது சமயச் சார்பற்ற சக்திகள் என்பதும், மதவாத சக்திகள் என்பதும்தான். இவற்றை Secular Forces and Religious Forces என்று பேசுகின்றனர்.

சமயச் சார்பற்ற சக்திகள் (Secular Forces) என்று அழைக்கப்படுவதற்கான காரணம் என்ன?

செக்யூலரிசம் என்பது நமது அரசியல் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது தேசம் ஒரு செக்யூலர் தேசம். ஆட்சி முறையில் நாம் நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

சமூக அமைப்பு முறையில் சமதர்மத்தைப் பின்பற்றுகிறோம். இதேபோலச் சமய நோக்கில் செக்யூலரிசத்தை அமல்படுத்தி வருகிறோம். செக்யூலரிசத்திற்குச் சரியான ஒரு வரையறையை இதுவரை நாம் வகுத்துக் கொள்ளவில்லை. எதிர்மறையாக ஒரு விளக்கத்தைச் சொல்லி வருகிறோம்.

1947–இல் இந்தியா என்ற நம் நாடு, இந்தியா – பாகிஸ்தான் என இரண்டு தனித்தனி நாடுகளாகப் பிரிந்தது. பாகிஸ்தான் தேசம் தன்னைச் சமய ரீதியில் இஸ்லாமிய தேசமாகவே அறிவித்துக் கொண்டது. இதேபோல நமது நாட்டையும் அறிவிக்க விரும்பியும், விரும்பாமலும் நமது


தலைவர்கள் இருந்ததை வெளிப்படுத்தும் வகையில் நமது அரசியல் சட்டம் 'இந்தியா என்ற பாரதம்' (India that is Bharat) என்று தொடங்குவதைக் காணலாம்.

பாரதம் என்ற இந்த வார்த்தை இந்தியா முழுமையையும் குறிக்காது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் என்ற தேசம் பிரிந்துவிட்டது. மீதி இந்தியாவை, இந்தியா என்று எப்போது அழைத்தாலும் இதற்குரிய சரியான பெயர் பாரதம்தான் என்று அர்த்தப்படுத்தும் வகையில் India that is Bharat என்று அரசியல் சட்டத்திலேயே குறிப்பிட்டுள்ளோம்.

'சிலோன்' என்று ஆங்கிலேயர் வைத்த பெயரை 'ஸ்ரீலங்கா' என்று அந்த நாடு மாற்றிக் கொண்டது. கோல்டு கோஸ்ட் என்ற ஆப்பிரிக்க நாடு தமது பெயரை 'கானா' என்று மாற்றிக் கொண்டது. பம்பாய் என்ற பெயரை 'மும்பை' என்று மகாராட்டிர அரசு மாற்றிக்கொண்டது. ஏன்? இப்போது நமது மாநில அரசும் மெட்ராஸ் என்பதை 'சென்னை' என்று அறிவித்துள்ளது. இதேபோலத்தான் இந்தியா என்ற இந்தப்பெயர், அரசியல் சட்டப்படி 'பாரதம்' என்று அழைப்பதற்கு உரிமை பெற்ற பெயர்.

பாகிஸ்தான் (PAKISTAN) என்ற பெயர் பஞ்சாப் (P), ஆப்கானிஸ்தானம் (A), காஷ்மீர் (K), சிந்துச் சமவெளி (Indus valley) (I) என்ற நிலப் பகுதிகளைக் குறித்து உருவாக்கப்பட்ட பெயர் என்பதைச் சரித்திரம் படிக்கும் மாணவர்கள் அறிவார்கள். ஆனால் 'பாரதம்' என்பது இதுபோல் உருவாக்கப்பட்ட பெயரல்ல.

இந்தியாவை பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்கள் உபகண்டம் என்று குறிப்பிடுவதற்கு முன்பாகவே, இதனை 'பரத கண்டம்' என்று நமது முன்னோர்கள், ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டுள்ளார்கள். சைவ சதமனு என்கிற வேத காலத்துப் பேரரசன், "திராவிட வர்ஷே – பரத கண்டே" என்று கூறியுள்ளதை நீத்தார் நினைவு நாளின்போது ஈமச் சடங்கில் புரோகிதர்கள் நம்மைச் சொல்லச் சொல்வதைக் கேட்டிருப்போம்.


சுவாமி விவேகானந்தர்

ஆகவேதான் நமது மகாகவி பாரதி, "பாரத நாடு பழம்பெரும் நாடு, நீரதன் புதல்வர் – இந் நினைவகற்றாதீர்" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

சிகாகோ – சர்வ சமய மாநாட்டில் பேசிய சுவாமி விவேகானந்தர், "உலகச் சமயங்கள் அனைத்தையும் சகித்துக் கொள்கிறோம் என்பது கூடச் சரியில்லை, அனைத்தையும் சமமாக மதித்து ஏற்றுக் கொள்கிறோம்" என்று பிரகடனம் செய்தார். "ஓர் இந்தியன் நடந்து செல்கையில் – தனியொரு இந்தியனாக மட்டும் அவன் செல்லவில்லை. அவன் பின்னால் 5000 ஆண்டுக் கலாச்சாரம் அணிவகுத்து வருகிறது" என்றும் அவர் கூறினார்.

சுவாமிகள் அனைத்துச் சமயங்களையும் சம நோக்கில் பார்த்தார். ஓர் இந்துச் சந்நியாசியாக இருந்தே அவ்வாறு நோக்கினார் என்பது சிந்திக்கத்தக்கது. ஆகவே, பாரதம் என்பது பழம்பெரும் பெயராக இருந்தாலும், இதனைச் சரித்திரப் பெயர் என்பதைவிட, கலாச்சாரப் பெயர் என்பதே சரி.


அப்படியானால், பாரதக் கலாச்சாரத்தின் நதி மூலம் எது?

பாகிஸ்தான் என்பதும் சரித்திரப் பெயர் என்பதைவிட – அரசியல் ரீதியில் ஆக்கப்பட்ட பெயர் என்பதைவிட – கலாச்சார ரீதியில் உருவாக்கப்பட்ட பெயர்.

கலாச்சாரம் என்றால் எந்தக் கலாச்சாரம்? இதற்கு மூலமாக உள்ளது எது? சமயம்தான். இஸ்லாமிய சமயத்தின் அடிப்படையில் பாகிஸ்தானம் என்ற தேசம் தன்னை வழிநடத்திக் கொள்ளுமாறு, உரிய கோட்பாடுகளை அது வகுத்துக் கொண்டுள்ளது.


அது Secular State அல்ல, அதற்கு மாறாக Theocratic State. அதாவது, அந்த அரசுக்கு என்று ஒரு சமயம் உள்ளது. இஸ்லாம் அதனுடைய தேசிய சமயம். உருது அதனுடைய தேசிய மொழி.

இதேபோல பாரத நாட்டிற்கென்று ஒரு தேசிய மதத்தை நாம் அறிவிக்கவில்லை. அதற்கு மாறாகத்தான் 'செக்யூலர்' என்ற வார்த்தையை உபயோகித்துள்ளோம்.


டாக்டர்
ஜாகிர் உசேன்


சர்தார்
வல்லபாய் படேல்


டாக்டர்
அம்பேத்கர்


நேருஜி

பாகிஸ்தான் பிரிவினையை காந்தியடிகள் கடைசி வரை விரும்பவில்லை. தமக்கு ஏற்பட்ட தனிப்பட்ட தோல்வியாகவே அதனைக் கருதி ஒப்புக் கொண்டார்.

பாகிஸ்தான் பிரியாமல் இருந்திருந்தால், இந்த செக்யூலர் என்ற கோட்பாட்டிற்குப் பொருள் ஏற்பட்டிருக்கும். பாகிஸ்தான் பிரிந்த பிறகும் செக்யூலர் என்ற கோட்பாட்டைப் பின்பற்றியதற்குக் காரணம், சர்தார் படேலின் அகால மரணமும், நேருஜியின் நீண்ட வாழ்வும்தான் என்பதை நூலாக வெளிவந்துள்ள சர்தார் அவர்களின் கடிதங்களைப் படித்தவர்கள் அறிவார்கள்.


பாரதியார்

ஏறக்குறைய இந்த 50 ஆண்டுகளாக நாம் செக்யூலரிசம் என்ற கோட்பாட்டைப் பின்பற்றி வந்துவிட்டோம். நடைமுறைப்படுத்தியும் வந்து கொண்டிருக்கிறோம். கல்விமான் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும் மேதகு பக்ருதீன் அலி அகமது அவர்களும் இந்தியாவின் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர்.

லண்டனில் முதல் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்ட டாக்டர் அம்பேத்கர், “இந்தியாவில் இந்து – முஸ்லீம் என்ற இரண்டு பிரிவுகள் மட்டுமல்ல, மூன்றாவது பிரிவு ஹரிஜன்கள்” என்று வாதிட்டார். இரண்டாவது, மூன்றாவது வட்ட மேஜை மாநாடுகளில், இந்துக்களுக்குள்ளேயே ஹரிஜன்களும் இருப்பதாக வாதங்கள் வைக்கப்பட்டு இந்து – முஸ்லீம் என்ற இரு பிரிவுகள் மட்டுமே பேசப்பட்டன.

செக்யூலரிசம் என்ற இந்தக் கோட்பாடு நமது நாட்டில் இப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாக இருந்தாலும் – மாநில அரசாக இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு மதத்திற்கு ஆதரவாகச் செயல்படக்கூடாது என்பதே இக்கோட்பாட்டின் நோக்கம்.

குறிப்பிட்ட ஒரு மதம் என்பது எந்த மதம்?

அது இந்து மதம்தான். நமது நாட்டைப் பொறுத்த அளவுக்கு, இந்து மதம் பெரும்பான்மை மக்களின் மதம். ஏறக்குறைய 90 கோடி மக்களில் 75 சதவிகித மக்கள் – 76 கோடிப் பேர் – இந்துக்கள். மீதியுள்ளவர்களில் 12 கோடிப்பேர் இஸ்லாமியர்கள். 3 கோடிப்பேர் கிறிஸ்தவர்கள். இதுவல்லாமல் அகாலிகள், பௌத்தர்கள், ஜைனர்கள் என்ற பல்வேறு சமயத்தார்களும் உள்ளனர்.

மதங்களைப் பின்பற்றுகிற மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மை – சிறுபான்மை என்று பார்க்காமல், எல்லா மதங்களையும் ஆட்சி செய்யும் அரசு சமமாக நடத்த வேண்டும். சிறுபான்மை மதத்தினர் அச்சமில்லாமல் இருப்பதற்கான பாதுகாப்புகளையும் சலுகைகளையும் நமது அரசியல் சட்டம் வகுத்துள்ளது. பெரும்பான்மை மதத்தாருக்குச் சமமாகச் சிறுபான்மையினரும் வாழ வேண்டும் என்ற பெருநோக்கில்தான் இந்தப் பாதுகாப்புகளும் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் நோக்கினால், செக்யூலரிசம் என்பதைச் சமய சமத்துவம் உள்ள ஆட்சி என்றுதான் அழைக்க வேண்டும். ஆனால், மதச்சார்பற்ற ஆட்சி என்று தவறுதலாக அழைக்கிறோம்.

மதச்சார்பற்ற என்கிறபோது – ஏதோ ஒரு குறிப்பிட்ட பெரும்பான்மைச் சமயத்தின் சார்பற்ற என்ற ஒரு பொருளில் இது புரிந்து கொள்ளப்பட்டு, இந்து மதத்திற்கு எதிரான கோட்பாடாகப் பயன்படுமளவுக்கு இது போய்விட்டது.

பொருளாதாரச் சமத்துவம் போல, செக்யூலரிசம் என்பது சமய சமத்துவம் – இதனைத்தான் எதிர்மறையாக “சமயச் சார்பற்ற” என்று கூறினோம். ஆனால் “சமயச் சார்பற்ற” என்பதைச் சமய எதிர்ப்பாக, இறை நம்பிக்கை இல்லாதவர்கள் உபயோகித்துக் கொள்ளுமாறு இக்கோட்பாடு ஆக்கப்பட்டு வருகிறது.

மலேசியா நாட்டின் அரசு இஸ்லாமிய அரசுதான். ஆனால், அங்குள்ள மக்கள் அனைவருமே இஸ்லாமியர்கள் அல்ல. ஆனால், மதங்களில் உள்ள மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் அங்குள்ள சமய நிறுவனங்களுக்கு நிதி உதவி கூட அரசு வழங்குகின்றது.

அங்கே 50 சதம் இஸ்லாமியர் உள்ளனர். 30 சதம் சீனர்கள் உள்ளனர். 15 சதம் தமிழர்கள் உள்ளனர். இந்த அடிப்படையில் அரசே அவர்



களுக்கு அரசு நிதியிலிருந்து மசூதிகளை, புத்த விகாரங்களை, இந்துக் கோவில்களைக் கட்டிக் கொள்வதற்கு நிதி உதவி செய்து வருகிறது.

இதுதான் செக்யூலரிசம், சமய சமத்துவம். சமயச் சார்பற்ற நிலை அல்ல இது. இதுபோல நம் நாட்டில் இல்லை. சமய நெறிப்படி வாழ விரும்புகிற மக்களுக்கு, அதேபோல வாழ்வதற்குரிய ஏற்பாடு களைச் செய்து கொடுப்பதுதான் ஒரு நல்ல அரசியல் கடமையாகும்.

நமது கல்வி நிலையங்களில் – இந்துக்கள் நடத்துகின்ற கல்வி நிலையங்களில்கூட – இந்து சமயத்தை, பக்தி இலக்கியங்களை, சைவ – வைணவ சித்தாந்தங்களை, அத்வைத – துவைதத் தத்துவங்களைச் சிறு வயதிலிருந்தே மாணவர் களுக்குப் போதிக்க முடியாது.

ஏனெனில் இது சமயக் கல்வி. அதுவும் பெரும்பான்மையாகவுள்ள இந்து சமயக் கல்வி. இதனை நமது அரசியல் சட்டம் தடுக்கிறது.

ஆனால், அதே நேரத்தில் அரபுக் கல்லூரி களில் குழந்தைகள் குரானை ஓதுமாறு, இஸ்லா மியக் கல்வி தரப்படுகிறது. கிறிஸ்தவக் கல்வி நிலையங்களில் பைபிள் பற்றிய சமயக் கல்வி தருவதற்குத் தடையில்லை. பஞ்சாபில் சீக்கிய சமயக் கல்வியை அங்குள்ள கல்வி நிலையங்கள் குழந்தைப் பருவத்திலேயே தர முடிகிறது.

செக்யூலரிசம் என்பது இங்கே இந்து சமயத் திற்கு மட்டும் விரோதமானதாக மாறிவிட்டது. இதனை மாற்றி நமது அனைத்துக் கல்வி நிலை யங்களிலும் – குறிப்பாகப் பெரும்பான்மையினரின் கல்வி நிலையங்கள் – இந்து மதத்தைப் பற்றி மட்டுமல்ல, அனைத்துச் சமயங்களைப் பற்றியும் மாணவர்களுக்குப் போதனைகள் தரப்படுமானால், அதில் தவறில்லை.

குழந்தைப் பருவத்திலிருந்தே இதுபோலச் சகல சமயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற் கான சந்தர்ப்பம் இருக்குமானால், "ஒன்று பரம் பொருள்", "ஒன்றே தேவன்", "தேரே அல்லா ஏ பகவான்" என்ற அணுகுமுறை, நமது சிந்தை அணு ஒவ்வொன்றிலும் இடம்பெற முடியும்.

ஸ்ரீலங்காவில் இந்து சமயம், பௌத்தம், கிறிஸ் தவம், இஸ்லாம் ஆகிய அனைத்துச் சமயங்களும் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் போதிக்கப் படுகின்றன.

இதேபோல் நமது அரசும் சமய, சமத்துவ அரசாக அமைய வேண்டும். நமது பாரதக் கலாச்சாரம் பிரதிபலிக்க வேண்டுமானால், ஆன் மிகத்தைப் போற்றி வளர்க்கும் அரசாக நமது அரசு அமைவது வரவேற்கத்தக்கது.

ஏனென்றால், அமெரிக்க நாட்டில் அவர் களுடைய "டாலர்" கரன்சியில்கூட "கடவுளை நாங்கள் நம்புகிறோம்" என்று அச்சடித்துள்ளனர். ஆனால், நம்முடைய ரூபாய் கரன்சியில் நமது தேசிய மொழிகளில் ரூபாய் மதிப்பைக் குறித்துள் ளோமே தவிர, அதுபோல் கடவுள் நம்பிக்கை பற்றி அச்சடிக்கவில்லை.

அமெரிக்க தேசம் கண்டுபிடிக்கப்படுவதற்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு வேதங்களையும், உபநிடதங்களையும் கொண்ட தேசம் நமது தேசம். ஓயாத ஞானத் தேடல்களில் ஈடுபட்ட ரிஷிகள் நமது ரிஷிகள். ஆனாலும் நமது ரூபாய் கரன்சி, டாலர் கரன்சி போல் இல்லை. சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்ற இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளும், மேலும் ஜைனம், பௌத்தம், சீக்கியம் முதலிய சமயங் களும் இங்கே உள்ளன.

இவற்றை முறையாகப் படித்து அந்தந்தச் சமயக் கோவில்களை நிர்வகிப்பதற்கு இன்றைய இந்தியாவில் வாய்ப்பில்லை. ஆனால் "வக்ஃப் போர்டு" என்ற சமய அமைப்பு இதுபோன்ற காரியங்களை இஸ்லாம் சமயத்திற்கு முறையாக ஆற்றி வருகிறது.

இதேபோல அகில இந்திய "ஹிந்து வாரியம்" ஒன்றை அமைத்து இந்து சமய நிறுவனங்கள் அனைத்தையும் நிர்வாகம் செய்யும் சூழ்நிலை அமைய வேண்டும். இறை நம்பிக்கை உடையவர் களே இதுபோன்ற நிர்வாகங்களில் இடம் பெற்றி ருக்க வேண்டும். இவற்றை எல்லாம் மனதில் கொண்டு அரசியல் சட்டத்தில் இதற்குத் தக்கபடி மாறுதல்கள் செய்யலாம்.

இது தொடர்பாக சர். சி.பி. இராமசாமி ஐயர் தலைமையில் ஒரு குழு திருமதி. இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை அரசு இப்போது வெளியிட வேண்டும். சமய சமத்துவம் என்பதைப் பெரும்பான்மைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டு, சமயம் இல்லாத நிலையை உருவாக் கும் இன்றைய சூழ்நிலையை மாற்றி அமைக்க, நம் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர் கள் பாடுபட முன்வர வேண்டும்.

மனோதத்துவ மேதைகளின் கூற்றுப்படி "எண் ணத்தில் எது உள்ளதோ, அதுதான் செயலாக மாறும்." எண்ணத்தில், எல்லாச் சமயங்களும் சமுத்திரத்தை நோக்கிப் பாயும் நதிகளைப் போல் தான் என்று விதைக்கப்பட்டுவிடுமானால், விதைக்கப்பட்டதே நாளை அறுவடையாகும். ●

தை மகளே வருக!

உலகிற்கே உணவளித்த ஒப்பிலாத் தமிழினத்தின்
உற்றதுயர் போக்கிடவே பொங்கலே நீ பொங்கு!
நிலவுக்கே ஒளியூட்டும் நேரிலாக் கதிரவனை
நெஞ்சார்ந்து வணங்கிடவே பொங்கலே நீ பொங்கு!

உழவின்றி அமையாது உலகென்று உழைத்த இனம்
உயர்ந்தோங்கி வாழ்ந்திடவே உற்றவழி நீ பொங்கு!
பழுதின்றி பணிசெய்து பாரெல்லாம் போற்றிடவே
பண்பாட்டுத் தமிழினத்தின் படையலாய் நீ பொங்கு!

யாராண்டால் எனக்கென்ன என்றேதான் இருந்திடாது
பாராண்ட தமிழினத்தின் பண்புகண்டு நீ பொங்கு!
போராட்ட வாழ்வினிலே புலரும் வெற்றி விரைவினிலே
புடம்போட்ட தங்கமெனப் பொலிந்திடவே நீ பொங்கு!

வான்மறையாம் வள்ளுவத்தை வாழ்மறையாய்க் கொண்டோரே
வாழ்வாங்கு வாழ்ந்திடவே வளமாக நீ பொங்கு!
தேன்மொழியாம் தமிழ்மொழியே திசையெல்லாம் ஒலித்திடவே
திண்ணமுடன் எண்ணமெல்லாம் திகழ்ந்திடவே நீ பொங்கு!

பொங்குகடல் அலைபோல போற்றித் தமிழ் பாடிடவே
புதுப்புனலாய், பொற்கதிராய் பொங்கலே நீ பொங்கு!
மங்கலமாய் மானுடத்தின் மாண்புகள் நிலைபெறவே
மங்காத தமிழென்று பொங்கு பொங்கலே!





கவிஞர்
பேளூர் கி. இரவி



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 15

திருவடி பணியும் அடியரைக் காக்கச் சிவபெருமான் மூன்று வடிவங்கள் எடுத்தார். ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாதவர் நமக்காக உருவமெடுத்தார். இந்த வடிவங்கள் போக வடிவம், வேக வடிவம், யோக வடிவம் என மூவகைப்படும். பகலுக்கும் இரவுக்கும் நடுவில் மாலைக்காலம் இருப்பதைப் போல, இறைவனுக்கும் இறைவிக்கும் நடுவில் முருகப்பெருமான் விளங்கக் காட்சி தரும் சோமாஸ்கந்தர் போகவடிவம் காட்டுபவர். தேரில் எழுந்தருளும் சிவபிரான் இவரே.

இவரை "வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய், மறைக் காட்டுறையும் மணாளன் தானே" என்று தாண்டக வேந்தர் தமிழால் பாடுவார். இவரை வழிபட்டால் உலக இன்பங்கள் கிடைக்கும். இது போக வடிவம். தீமையை அழிக்கச் சிவபிரான் எடுத்த வேக வடிவம் வயிரவக்கடவுள். வடமொழியில் இவர் பைரவர் எனப்படுவார். இவரை

"விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு
தமருகம்கை
தரித்ததோர் கோல கால பைரவன்
ஆகி வேழம்
உரித்துமை அஞ்சக்கண்டு
ஒண்திரு மணிவாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே."

என்று பாடுகிறார் திருநாவுக்கரசர். இவரை வழிபட்டால், பொல்லா வினைகள் பொடிப் பொடியாகி நல்லோர் நினைவில் இவர் நடனம் புரிவார். இது தீமைகளை எரிக்கும் வேக வடிவம்.

இனி, யோகம் காட்ட எடுத்த வடிவம் தென்முகக் கடவுளான தட்சிணா மூர்த்தி. இவர் ஆலமர் கடவுள். மோனத் தவத்தில் முழுவதும் நிலைத்தவர். மூத்த மாணவர், நால்வருக்கருளும் இளைய மூர்த்தி, எழில் வடிவானவர். சொல்ல வேண்டியதைச் சொல்லாமல் சொன்னவர். தனைத் தாங்க ஆலமரம் தவம் செய்த காரணத்தால், அனைத்துயிரும் ஈடேற அதனடியில் அமர்ந்தபிரான். இது யோக வடிவம். ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும்விட்டு விலகிய ஆன்மா, இறைவனோடு இணைந்து இன்புறும் என்பதை இவர் சின்முத்திரையால் காட்டுகிறார். இப் பெருமானை

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
புரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை
நினையாமல் நினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்."



திருமூலர்

தொடர்ச்சி : 13-ம் பக்கம்

கட்டுரை

22

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

பாலரிஷி ஸ்ரீ விஸ்வசிராஷினி

பாலரிஷி ஸ்ரீ விஸ்வசிராஷினி அவர்களை நான் முதலில் தரிசித்தது ஒரு வித்தியாசமான அனுபவம். அவரைப் பற்றி ஒரு புத்தகமும், சில பாடல்களும் எழுத வேண்டுமென்று என்னுடைய நண்பர் இசையமைப்பாளர் யானிதேஷ் மூலம் அழைப்பு வந்தது. நான் சற்று தயங்கினேன்.

சித்தர் வழிபாட்டில் நாட்டமுடைய நண்பர் யானிதேஷ் அவர்களைப் பற்றி விரிவாகச் சொன்னார். பத்து வயதில் அவருக்கு



பாலரிஷி ஸ்ரீ விஸ்வசிராஷினி



பாலரிஷியைச் சிறப்பிக்கும் அருட்செல்வர்

உள்ளிருந்து சில மந்திரங்கள் வெளிப்படத் தொடங்கின. அவை எந்த ஏட்டிலும் இல்லாதவை. அவ்வப்போது அவரிடமிருந்து தோன்றுபவை என்றார்.



மரபின் மைந்தன் முத்தையா

பல்லாயிரம் ஆண்டுகள் முன்பு ஸ்தூலமாகவும் இப்போது சூட்சுமமாக இருக்கும் ரிஷிகளின் வழிகாட்டுதலோடு, அவருடைய ஆன்மீகப் பயணம் நிகழ்வதாய்ச் சொன்னார். அவர் தொடர்ந்து வற்புறுத்தவே, சற்றே யோசனையோடு ஒப்புக் கொண்டேன்.

ஒப்புக் கொண்டேன் என்றால், அவர்களைச் சென்று தரிசிக்க ஒப்புக் கொண்டேனே தவிர, நூல் எழுதுவது பற்றியோ, பாடல்கள் எழுதுவது பற்றியோ எனக்குள் தீர்மானமாக எந்த முடிவும் இல்லை. ஆனாலும் அவர்களுடைய பீடத்திற்குள் நாங்கள் சென்ற கார்

நுழைகிறபோது, யாரோ எடுத்துக் கொடுத்தது போல மனதில் பளீரென ஒரு வரி தோன்றியது.

"மோன முனிவர்கள் ஞான பரம்பரை

மலரும் மலரல்லவா அருள் ததும்பும் நிலவல்லவா"

என்பது அந்த வரி.

பாலரிஷி அவர்களை நான் முதல் முதலாகச் சந்தித்தபோது, அவருக்கு வயது 16. அப்போது அவருக்கு ஏராள மான பக்தர்கள் உண்டு.



பாலரிஷியுடன் மரபின்மைந்தன் முத்தையா

ஆரம்பகாலச் சந்திப்புகளில் அவரைப் பற்றி அவர் தாயார் திருமதி தமிழ்ச்செல்வி மூலமும், நீண்ட கால மாக அவருடைய பீடத்தோடு தொடர் பில் இருப்பவர்கள் வழியாகவும் சில தகவல்களைத் தெரிந்து கொண்டேன்.

பத்து வயதிலிருந்தே அவரிடமிருந்து மந்திரங்கள் வெளிப்படத் தொடங்கின என்றும், அந்த வயதில் தன் பெற்றோ ரிடம் தான் சுருளிமலைக்குப் போக வேண்டும் என அழுது அடம்பிடித்ததா கவும் சொன்னார்கள்.

சுருளிமலை என்ற பெயரையே அவ ருடைய பெற்றோர்கள் அப்போதுதான் கேள்விப்படுகிறார்கள். அங்குச் சென்றவர், நீண்டநாள் பழகிய இடம் போல வனப் பகுதிகளுக்கு உள்ளே விரைவாக நடந்துபோய் விளையாடி னார் என்றும், அங்கே ஒரு குகையின் மேல் ‘வினையகி’ என எழுதப் பட்டிருக்கும் என்றும் சொன்னாராம். உடன் சென்றவர்கள் அந்தக் குகையைக் கண்டறிந்தார்கள் என்றனர்.

பின்னர் பாலரிஷி விஸ்வசிராஷினி அவரையும் பிறரையும் தனித்தனியே கண்டு உரையாடி ‘மந்திர மழை’ என்ற தலைப்பில் ஒரு சிறிய நூலை எழுதினேன். அன்றுமுதல் அந்தப் பீடத்துடனான தொடர்பு நாளுக்கு நாள் வலுவடைந்து உறுதியாகி வளர்ந்தது.

அவரைச் சந்திக்கும்போது எங்கள் கீழத் தஞ்சை மாவட்டத் தில் இருக்கிற ஆலயங்களில் உள்ள சில கடவுளர்களின் நாமங்களைச் சொல்லி மந்திரங்கள் கேட்பேன். அடுத்த நிமிடமே மந்திரங்கள் பிரவாகமாக வெளிப்படுவதைக் கண்டு வியந்திருக்கிறேன். பாலரிஷி தன்னிடம் இருந்து வெளிப்படும் மந்திரங்களைத் தன்னிடம் வரு பவர்களுக்கு அவரவர் வாழ்வின் சூழலுக்கு ஏற்ப ஜபத்துக்கான தீட்சை வழங்கத் தொடங்கினார்.

ஒரு காலகட்டத்திற்குப் பிறகு, அந்த வெளிப்பாட்டை அதன் ஒலி ஒழுங்கு களைத் தீர்க்கமாக உள்முகமாய் ஆராய்ந்து ‘நாத கிரியா’ எனும் பெயரி லான மந்திர தியான வகுப்புகளாக வடிவமைத்தார்.

நாதத்தில் அவருக்கிருக்கும் ஆழ்ந்த ஒன்றுதல் காரணமாக இசை விற்பன் னர்கள் பலருடன் கலந்து பேசி கர்நாடக இசையிலும், ஆன்மீக ரீதி யான சாதனைகளிலும் பெரும் தெளிவை அவர் அடைந்தார்.

அவரிடம் பேசிக் கொண்டிருந்த போது, ஒருமுறை அவருடைய ஆன்மீக அனுபவங்களை அவர் புத்தகமாக

எழுதலாமே என்று ஒருமுறை ஆலோசனை கூறினேன்.

அடுத்த விநாடியே "எழுதலாமே! சொல்கிறேன் எழுதுகிறீர்களா?" என்றார். நான் எழுதுகோலையும் ஏட்டையும் எடுப்பதற்கு முன்னரே சரளமாகச் சொல்லத் தொடங்கினார்.

சித்தர்கள் – சித்தர்கள் உறையும் வனப்பகுதிகள் – மூலிகைகளின் மகத்துவங்கள் – மூலிகைகளை எடுக்கும் முறை – தவம் – யோகம் – தியானம் எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்ட அவருடைய அந்த அனுபவங்களின் தொகுப்பு 'சித்தர்கள் அருளும் சிவானந்தம்' என்கிற நூலாக வெளிவந்தது.

இன்றைய நவீன விஞ்ஞான யுகத்தில் இயல்புகளோடு ஆன்மிகத்தைப் பொருத்தி விளங்க வைக்கக் கூடிய அவருடைய ஆற்றல் வியப்புக்குரியது. அந்த நூலுக்கான உரையாடல்கள் நடுவே ஒருமுறை, "வனத்துக்குள் ஒருவர் போனாலும் அதன் ரகசியப் பிரதேசங்களை, மூலிகைகளைக் கண்டறிய எல்லோராலும் முடியாது. அதற்கென்று சில சூட்சுமப் புரிதல்கள் வேண்டும்" என்றார்.

"அது எப்படி?" என்று கேட்டேன். அவர் சொன்னார், "ஒரு பெரிய கண்ணாடி மாளிகை இருக்கிறது. வாசலில் ஒரு கண்ணாடிக் கதவு இருக்கிறது. ஆனால் காவலாளி இல்லை. அதற்காக நீங்கள் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போய்விட முடியாது. அங்கிருக்கும் அடையாள அட்டையை ஒரு கருவியில் தேய்த்தால் உங்களுக்கு மட்டும் கதவு திறக்கிறது. இது விஞ்ஞானம். இதுவே ஆன்மீகத்தில் சூட்சுமமான புரிதலாகச் சித்தர்கள் மத்தியில் தென்படுகிறது" என்றார்.

ஒலியில் இருந்து பிரபஞ்சம் உருவானதாகச் சொல்லப்படுவது குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

"அப்படியானால், ஒலியிலிருந்து பிரபஞ்சம் உருவாவதற்கு முந்தைய மௌனமது இருக்குமே, அது என்ன நிலை?" என்று கேட்டேன். அடுத்த விநாடியே பதில் வந்தது, "அது படைப்புக்கு முந்தைய நிலை" என்று.

பற்பல பிறவிகளாகச் சூட்சும நிலையிலிருந்து தன்னை வெளிப்படுத்தும் தன் குருநாதர்களில் முதன்மையானவராக ஸ்ரீ காகபுஜண்டரை பாலரிஷி விஸ்வசிராஷினி குறிப்பிடுகிறார்.

உள்நிலையில் காகபுஜண்டர் உடன் அவருக்கு இருக்கும் தொடர்பை நான் அறிந்துகொள்ள ஒரு சம்பவம் துணையாக அமைந்தது.

சமய இலக்கிய உலகில் "சைவச் செங்கதிர்" என அழைக்கப்படக் கூடியவர் மறைந்த பெரும் பேராசிரியர் முனைவர் செல்வகணபதி அவர்கள். அவர் காகபுஜண்டர் பற்றி ஓர் ஆய்வு மேற்கொண்டபோது, பாலரிஷி அவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டு "அவரைச் சந்திக்க வேண்டும்" என்று என்னிடம் கேட்டார். அழைத்துப் போயிருந்தேன். அவருடன் நீண்ட உரையாடலை முனைவர் செல்வகணபதி மேற்கொண்டார்.

உரையாடலின் முடிவில், மிகுந்த பரவசத்துடன் அவரை நமஸ்கரித்து, "நான் சிரமப்பட்டு ஆய்வுசெய்து கண்டறிந்து மனதில் வைத்திருந்த சில செய்திகளை, அவை இப்படித்தான் இருக்குமா என்கிற கேள்வியோடுதான் உங்களைப் பார்க்க வந்தேன். அவற்றை நீங்கள் மிகவும் அநாயசமாகத் தெளிவுபடுத்தி விட்டீர்கள்" என்று குறிப்பிட்டார்.

காகபுஜண்டர் பற்றிய தன்னுடைய நூலிலும் முனைவர் செல்வகணபதி இந்தச் சந்திப்பைப் பதிவு செய்திருக்கிறார்.

பாலரிஷி விஸ்வசிராஷினியின் அவதாரத் திருநாள் அக்டோபர் 1. ஒருமுறை அந்த நாளில் அவரைச் சந்திக்க முடியாது என்பதால், ஓரிரு நாட்கள் முன்னதாகப் பார்த்து வரலாமென்று புறப்பட்டேன்.

பிறந்த நாளுக்கு ஏதாவது வாங்கிச் செல்ல வேண்டும் என்று தோன்றியது. கலைப் பொருட்கள் விற்பனையகம்

ஒன்றில் நுழைந்து பல்வேறு பொருட்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஓர் அழகான லிங்கம் கண்ணில் பட்டது. அதை வாங்கிக் கொண்டபோது, அதற்கான ஒரு பீடத்தையும் கடைக்காரரே, "இதையும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கொடுத்தார்.

அதை மிகவும் எச்சரிக்கையாகப் பெட்டியில் வைத்து வண்ணத் தாளில் பொதிந்து கொண்டு சென்றேன்.

பாலரிஷியிடம் சிலர் பேசிக் கொண்டிருந்ததால் காத்திருந்தேன். என்னைப் பார்த்துவிட்டு அவருடைய தாயார் அருகில் வந்து என்னிடம் பேசிக் கொண்டிருந்தார்.

கையில் ஒரு பொட்டலம் இருப்பதைக் கவனித்தாரே தவிர, அது என்ன என்று அவருக்குத் தெரியாது.

சாவதானமாகச் சொன்னார், "இந்த முறை பிறந்தநாளுக்கு யாராவது பரிசு கொடுத்தால், லிங்கம்தான் கொடுக்க வேண்டும் என்று சுவாமி சொல்லியிருக்கிறார்கள்" என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

நான் பாலரிஷியிடம் ஆசிபெற்றுக் கைகளில் இருந்த பரிசுப் பொட்டலத்தைத் தந்த வண்ணம் "இதில் லிங்கம்தான் இருக்கிறது. நீங்கள் பரிசாக லிங்கம் தான் தர வேண்டும் என்று சொன்னது எனக்குத் தெரியாது" என்றதும் குறும்புச் சிரிப்புடன் "உங்களிடம் நான் சொன்னேனே" என்றார். அந்த வாசகத்தில் ஆயிரம் அர்த்தங்கள்.

நினைக்கும் போதெல்லாம் காசிக்குக் கிளம்பிப் போய்விடுவார். மனத்தளவில் அவர் எப்போதும் காசிவாசிதான். அவருடன் காசிக்குச் சென்றது மறக்க முடியாத மகத்தான அனுபவம்.

தன் சொந்த இல்லத்தில் சுற்றித் திரிவதுபோல் விசைகொள்ளும் வேகத்தில் சலங்கை அதிர அதிர காசியின் மூலை முடுக்கெல்லாம் அவர் சுற்றித் திரிவதும், சிவ உன்மத்தத்தில் திளைப்பதும் காண்பவர்களெல்லாம் "மாதாஜி மாதாஜி" என அடையாளம் கண்டு விழுந்து வணங்குவதும் சிலிர்ப்பான காட்சிகள்.

பொள்ளாச்சியில் நா.மகாலிங்கம் பொறியியல் கல்லூரியில் பாலரிஷிக்குப் ‘பெண்கள் தின’த்தில் விருது வழங்கிய அன்று, அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள் தன் இல்லத்திற்கு அழைத்து மரியாதை செய்தார். அருட்செல்வர் இல்லத்தின் பின்புறம் உள்ள மாரியம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று, அங்கே மந்திரங்கள் சொல்லச் சொல்லிச் சிரத்தையுடன் கேட்டு மகிழ்ந்தார்.

பாலரிஷி விஸ்வசிராஷினி வழங்கும் நாதக்ரியா வகுப்புகள் லண்டன், பிரான்ஸ், இத்தாலி, போலந்து, நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, பாலி, தாய்லாந்து, மலேசியா உள்ளிட்ட பல நாடுகளில் நிகழ்கின்றன.

கோவை திருமலையம்பாளையம் மாஸ்திக்கவுண்டன் பதியில் உள்ள பாலரிஷி பீடத்தில் முன்னனுமதி பெற்று வரும் ஆன்மீக அன்பர்கள் அவர் தரிசனம் பெறலாம்.

அந்த ஆலயத்தில் குண்டலினி ஆற்றலுக்காக அமைந்திருக்கும் ஸ்ரீ குண்டலினீசுவரி அம்மன் ஆலயம், ஸ்ரீ பாலலிங்கேசர், ஸ்ரீ விஸ்வகணபதி ஆலயங்கள், சித்தர் முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்ட சக்திமிக்க சந்நிதிகளாகும். ஒவ்வோர் ஆண்டும் மஹாசித்தர்களுக்காக அவர் நடத்தும் மஹாகுருபூஜை விழா மிகவும் புகழ் பெற்றது.

ஸ்ரீ பாலரிஷி விஸ்வசிராஷினி ஒரு சந்நியாசி அல்ல. நாதயோகினி. சித்தர்கள் மற்றும் ரிஷிகள் மரபில் வந்து, புது யுகத்தின் புதிய தலைமுறைக்கு அந்த ஆன்மீக அதிர்வுகளை நாதம் வழியே நல்கும் பாலரிஷி ஸ்ரீ விஸ்வசிராஷினி தனித்தன்மை வாய்ந்த ஆன்மீக அருளாளர்.

அவரைத் தரிசிக்க விரும்பும் அன்பர்கள் 9600969066 எனும் எண்ணிலோ, ombalarishi@gmail.com எனும் மின்னஞ்சலிலோ தொடர்பு கொள்ளலாம்.

●

8-ம் பக்கத் தொடர்ச்சி

என்று பரஞ்சோதி முனிவர் பாடுகிறார்.

ஆலமரத்தின் கீழமர்ந்து யோக வடிவில் தென்முகக்கடவுள் சொல்லாமல் சொன்ன ஞானத் திருமொழிகளை, அரசமரத்தின் கீழமர்ந்து யோகவடிவில் எண்ணிலிகோடி யுகம் இருந்து பாடி உலகிற்கு வழங்கியவர் தவராஜ யோகியான திருமூலர். இவர் பாடிய திருமந்திரம் மிகச்சிறந்த யோக நுலாகும்.

"சக்கர வர்த்தி தவராஜ யோகிஎனும்

மிக்கதிரு மூலன்அருள் மேவும் நாள் எந்நாளோ?"

என்று சொல்லி ஏங்குகிறார் தாயுமானவர். திருமூலர் பாடிய யோகம் இறைவனோடு ஒன்றி இருப்பது. "ஒன்றி இருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை" என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு.

சித்தத்தைச் சிவன்பால் வைத்திருப்பது யோகம். இந்த யோகத்தைத் தியான யோகம், மந்திர யோகம், ஞான யோகம் என்று மூன்றாகப் பிரிக்கிறார் திருமூலர். தியான யோகத்தில் கேசரி யோகம், பரியங்க யோகம், சந்திர யோகம் ஆகியவை அடங்கும். மந்திர யோகத்தில் சக்கரங்களும் மந்திரங்களும் அடங்கும். ஞான யோகத்தில் ஆன்மாவின் இயல்பு, தத்துவங்கள், இறைவனை அடையும் வழி, ஐந்தெழுத்தின் சிறப்பு ஆகியவை அடங்கும். இந்த யோகங்களின் தன்மைகளை விளக்குமுன்னால் 'அட்டாங்க யோகம்' என்ற தலைப்பில் யோகத்திற்குரிய உறுப்புகளை விளக்குகிறார்.

இவற்றில் தீதகற்றலாகிய இயமம், நன்றாற்றலாகிய நியமம் இரண்டையும் சிந்தித்தோம். இப்பொழுது மூன்றாவது படியாகிய ஆதனத்தைப் பற்றிச் சிந்திக்க இருக்கிறோம்.

3) ஆதனம் – ஆசனம் என்று வழங்கப்படும் இச்சொல் இருக்கையைக் குறிக்கும். மன அமைதி பெறுவதற்கு உடம்பு அசையாமல் இருப்பது அவசியமாகும். யோக நெறிக்கு மனவோட்டமும் உடல் அசைவும் கூடாது. யோக சாதனை புரிவதற்குக் கைகால் முதலிய உடல் உறுப்புகளைத் தக்கவாறு அமைத்துக் கொள்வது ஆசனம் எனப்படும். இவற்றுள் பத்மாசனம் பத்திராசனம், கோமுகாசனம், சிங்காசனம், திராசனம், வீராசனம், சுகாசனம், சுவத்திகாசனம் ஆகிய எட்டும் மிக முக்கியம் என்றும் மொத்தம் 8+8+10+100 = 126 ஆசனங்கள் உள்ளன என்றும் திருமூலர் குறிப்பிடுகிறார்.

"பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி

சொத்திரம், வீரம், சுகாதனம் ஓரேழும்

உத்த மாம்முது ஆசனம் எட்டெட்டுப்

பத்தொடு நுறு பர ஆசனமே" (551)

என்பது திருமந்திரம். இவற்றுள் சுவத்திகாசனம் உத்தமாம்முது ஆசனம் என்று போற்றப்படுகிறது. முழங்காலுக்கும் தொடைக்கும் நடுவில் இரண்டு பாதங்களையும் வைத்து, உடல் நிமிர்ந்து சுகமாக உட்கார்ந்திருப்பது சுவத்திகாசனம் எனப்படும்.

இந்த ஆசனங்களில் பத்மாசனம், பத்திராசனம், சிங்காசனம் மூன்றையும் குறிப்பிட்டு விளக்குகிறார் திருமூலர். இவற்றுடன் குக்குடாசனமும் கூறப்படுகிறது.

*1) **பத்மாசனம்*** : பத்மம் என்றால் தாமரை. இந்த ஆசனத்தில் இருப்பது தாமரை போல் தோற்றமளிக்கும். வலது தொடையின் மேல் இடது பாதத்தையும், இடது தொடையின் மேல் வலது பாதத்தையும், உள்ளங்கால் மலர நன்றாக இழுத்துப் பொருத்தி, அதன்மேல் இரண்டு கைகளையும் மலர்த்தி வைப்பது பத்மாசனமாகும்.

"ஓரணை யப்பதம் ஊருவின் மேல்ஏறிட்டு

ஆர வலித்ததன் மேல்வைத்து அழகுறச்

சீர்திகழ் கைகள் அதனைத்தன் மேல்வைக்கப்

பார்திகழ் பத்மா சனம்என லாகுமே" (547)

என்பது திருமந்திரம். ஊரு என்பது தொடையைக் குறிக்கும். எல்லா ஆசனங்களிலும் உடலை நேரே நிமிர்த்தி, இரு கண்களாலும் மூக்கு நுனியை நோக்கி நிற்பது பொதுவான விதியாகும். (இதற்கு விலக்குகளும் உண்டு) பிராணாயாமம் செய்யும்பொழுது பத்மாசனத்தில் இருப்பது மிகவும் நல்லது. நீண்ட நேரம் அமர்ந்திருக்க இது வசதியான ஆசனமாகும்.

2) பத்திராசனம் : பத்திரம் என்றால் இதழ் என்று பொருள். இவ்வாசனத்தில் அமர்ந்துள்ள போது இதழ்போலத் தெரிவதால் இது இப்பெயர் பெற்றது. வலக் காலை இடப்பக்கத்திலுள்ள தொடையின்மேல் வைத்து, முழங்கால்களில் இரு கைகளையும் நீட்டி, உடம்பை நேராக நிமிர்த்தி நிறுத்துவது பத்திராசனம் எனப்படும்.

“துரிசல் வலக்காலைத் தோன்றவே மேல்வைத்து
அரிய முழந்தாளில் அங்கையை நீட்டி
உருசி யொடும்உடல் செவ்வே இருத்திப்
பரிசி பெறுமது பத்திரா சனமே” (548)

என்கிறார் திருமூலர். சித்தர்களில் புகழ் பெற்ற கோரக்கநாதர் இப்படி அமர்ந்திருப்பதால், இது கோரக்காசனம் என்றும் கூறப்படும்.

3) குக்குடாசனம் : குக்குடம் என்பது கோழியைக் குறிக்கும். பத்மாசனத்தில் மேல் வைக்கப்பட்ட கைகளை உள்ளே விடுத்து நிலத்தில் அழுந்த ஊன்றி, அவ்வாறே முயற்சி செய்து முழங்கை அளவாக மேலெழுந்து சுமை முழுவதும் கைகளில் நிற்க வீழாமல் கோழிபோல் நிற்பது குக்குடாசனம் ஆகும். இதை

“ஒக்க அடியினை ஊருவில் ஏறிட்டு
முக்கி உடலை முழங்கை தனில் ஏற்றித்
தொக்க அறிந்து துளங்காது இருந்திடில்
குக்குட ஆசனம் கொள்ளலு மாமே” (549)

என்கிறார் திருமூலர். இதைத் திராசனம் என்பாரும் உளர்.

4) சிங்காதனம் : இது சிங்க வடிவாய்த் தெரியும் ஆசனம் ஆகும். இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்களின் இடையே புகச்செலுத்தி, இரு பாதங்களிலும் படுமாறு நீட்டி, வாயைத் திறந்து கொண்டு இரண்டு கண்களும் மூக்கு நுனியை நோக்க இருப்பது சிங்காசனம் ஆகும்.

“பாத முழந்தாளில் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வாய் அங்காந்து அழகுறக்
கோதில் நயனம் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமெனச் செப்புமே” (550)

என்கிறார் திருமூலர்.

இந்த நான்கு ஆசனங்களையும் தனித்தனியாகப் பாடிய திருமூலர் கோமுகாதனம், வீராதனம், சுகாதனம், சுவத்திகாதனம் என்பவற்றைப் பற்றியும் பாடி இருக்க வேண்டும். அவை கிடைக்கவில்லை. இவை தவிர மச்சாசனம், கூர்மாசனம், மகராசனம், தனுராசனம், மயூராசனம், பச்சிமோத்தாசனம், மண்டூகாசனம், மற்கடாசனம், ஏகபாதாசனம், சிரசாசனம், சர்வாங்காசனம், சவாசனம், வஜ்ராசனம் எனப் பற்பல ஆசனங்களை ஹடயோக தீபிகை, பதஞ்சலி யோக சூத்திரம் ஆகிய நுற்கள் குறிப்பிடுகின்றன.

இந்த யோகாசனங்கள் நோய்களை அகற்றும் பேராற்றல் வாய்ந்தவை என்பதில் ஐயமில்லை. ஆனால் இவற்றைப் பயில நினைப்போர் தகுந்த ஆசிரியர்களின் வழிகாட்டுதலைப் பெற்றுப் பயில வேண்டும். யார் யார் எவ்வாறு அமர்ந்திருந்தால் சிரமம் இருக்காதோ, அவ்வாறு அமர்ந்திருப்பது சுகாசனம் எனப்படும். எல்லோராலும் எல்லா ஆசனங்களையும் செய்ய இயலாது. உடம்புக்கும் வயதுக்கும் ஏற்ற ஆசனங்களையே பயில வேண்டும்.

4. பிராணாயாமம் : மூச்சுக்காற்றை அடக்கி ஒழுங்குபடுத்துவது பிராணாயாமம். இது திருமந்திரத்தின் சிறப்புப் பகுதியாகும். இதுவே நூறாண்டு வாழ வழிகாட்டுவது. இந்தப் பிராணாயாமத்தைத் தமிழில் காற்றைப் பிடிக்கும் கணக்கு என்கிறார் திருமூலர்.

“ஏற்றி இறக்கி இருகாலும் புரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வார்இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே” (559)

என்பது திருமந்திரம். பிராணன் + ஆயாமம் = ஸ்ரீ பிராணாயாமம். ஆயாமம் என்றால் கட்டுப்படுத்துவது. பிராணனைக் கட்டுப்படுத்தினால் மனத்தைக் கட்டுப்படுத்தலாம். பிராணன் வசப்பட மனமும் வசப்படும். இந்தப் பிராணாயாமத்தில் தூயகாற்றை உள்ளே இழுப்பது பூரகம் எனப்படும். இழுத்த காற்றை உள்ளேயே வைத்திருப்பது கும்பகம் எனப்படும். காற்றை வெளிவிடுவது இரேசகம் எனப்படும்.

ஐம்பொறிகளும் உடம்பில் உள்ளன. அவற்றின் தலைவனாக உயிர்க்கிழவன் ஆட்சி செய்கிறான். அவன் உலாப் போவதற்குரிய குதிரைதான் மூச்சுக் காற்று. இக்குதிரையை ஒழுங்காகச் செலுத்தினால் நீண்ட காலம் வாழ லாம். இல்லையேல், உயிர்க்கிழவனைக் கீழே தள்ளிவிட்டுக் குதிரை ஓடிப் போய்விடும். மூச்சுக்காற்றை ஒழுங்கு படுத்தினால் ஐம்பொறிகளும் கட்டுப் படும். இதுதான் வாழ்க்கை ரகசியம்.

சாதாரண மனிதன் எட்டங்குல அளவுக்கு மூச்சை இழுத்துப் பன்னி ரண்டு அங்குல அளவிற்கு மூச்சை விடுகிறான். இதனால் மூச்சு நாலங்குல அளவிற்கு நட்டப்படுகிறது. மூச்சை உள்ளே இழுத்து வைத்திருந்தால் தான், உயிர்க்காற்று (ஆக்சிஜன்) உடம்பி லுள்ள நாடிகளில் எல்லாம் பரவி நிறைக்கும். இப்படிச் செய்யாமல், நாம் மூச்சை நட்டப்படுத்துகிறோம்.

காமத்தினாலும், கோபத்தினாலும் மூச்சு நட்டம் அதிகப்படும். தொழிலில் நட்டம் தொடர்ந்து வந்தால் வணிகக் கதவு தானே அடைபடும். எனவே, மூச்சுக் காற்றாகிய குதிரையை ஒழுங் காகச் செலுத்தவேண்டும். இதை ஒரு சிறுகதை போல அழகாகச் சொல்கிறார் திருமூலர்.

> "ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
> உய்யக்கொண் டேறும் குதிரைமற்று ஒன்றுண்டு
> மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாதுபோய்ப்
> பொய்யுரைத் துள்ளி விழுத்திடும் தானே" (552)

என்பது திருமந்திரம்.

இந்தப் பிராணன் எனப்படும் ஒரே குதிரை இடகலை, பிங்கலை என்ற இரண்டு நாடிகளின் வழியாக இயங்கும் போது, இரண்டு குதிரைகள் போலத் தெரியும். குருவருள் பெற்றால் இந்தக் குதிரைகள் அடங்கும். நம் உடம்பில் இடகலை நாடி, வலக்கால் பெருவிரலில் தொடங்கி, மேலேறிப் படர்ந்து செல் லும். பிங்கலை நாடி, இடக்கால் பெரு விரலில் தொடங்கி மேலேறிச் செல்லும். இரண்டும் கொப்பூழில் சந்திக்கும். அதன்பிறகு இடகலை இடப்பக்கம் மாறும். பிங்கலை வலப்பக்கம் மாறும். முதுகு, பிடரி, தலை வழியாக இரண்டும்

வாசகர்கள் கவனத்திற்கு!

சென்ற 'ஓம் சக்தி' டிசம்பர் 2020 இதழில் பக்கம் 9-இல் வெளியாகியிருக்கும் 'தீவினை மாற்றும் திருமந்திரம்' கட்டுரையின் முதல் பக்கம் 2-வது பாராவில் "தருமபுர ஆதீனம் சிவஞானப் பண்ணை. அந்த ஆதீனத்தைத் தோற்றுவித்தவர் திருஞான சம்பந்தர். இவர் எட்டு நூற்கள் எழுதினார். இதற்குத் 'திருஞானசம்பந்தர் அட்டகம்' என்று பெயர்" என வெளியாகியிருந்தது. இதில் திரு ஞானசம்பந்தர் என்பதை **குருஞானசம்பந்தர்** என்றும், திருஞானசம்பந்தர் அட்டகம் என் பதை **குருஞானசம்பந்தர் அட்டகம்** என்றும் வாசகர்கள் திருத்தி வாசிக்கவும்.

– இ.ஆர்.

சென்று இடகலை இடது மூக்கிலும், பிங்கலை வலது மூக்கிலும் முடியும். இவற்றில் வலது மூக்கில் ஓடும் காற்று சூரியகலை என்றும், இடது மூக்கில் ஓடும் காற்று சந்திரகலை எனவும் பெயர் பெறும். இதை

> "ஆரியன் அல்லன் குதிரை இரண்டுள
> வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
> சூரிய நாதன் குருவின் அருள் பெற்றால்
> வாரிப் பிடிக்க வசப்படுந் தானே." (553)

என்று குறிப்பிடுகிறார் திருமூலர். ஆரி யன் என்றால் நல்லன் என்று பொருள். நல்லன் என்றும் அல்லன் என்றும் கூறத்தக்க சூரியகலை, சந்திரகலை என்ற இரண்டு குதிரைகளையும் அடக்கிப் பிடிக்கக் குருவருள் தேவை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார் திருமூலர்.

மூச்சுக்காற்றை எவ்வளவு நேரம் இழுப்பது, எவ்வளவு நேரம் உள்ளே வைத்திருப்பது, எவ்வளவு நேரம் வெளி விடுவது என்று கேட்கிறீர்களா? அதை யெல்லாம் படித்து, அதன்படி பிராணா யாமம் செய்யத் தொடங்கி, அதைப் பாதியில்விட்டு, நான் முட்டாள் என் பதை முழுவதுமாக அறிந்து கொண் டேன். நான் முட்டாள் என்பதை நீங்களும் உறுதிப்படுத்த வேண்டுமா? ஒரு மாதம் பொறுத்திருங்கள். •

வாசகர் கடிதம்

ஆடல்வல்லானின் அற்புதத் திருக்கோலம் காட்டும் 2020–டிசம்பர் 'ஓம் சக்தி'யின் அட்டைப் படம் காண்போரை விழிமூடி, மெய்மறந்து வணங்கிட வைப்பதாகவும், நெஞ்சை நெக்குருகச் செய்வதாகவும் இருந்தது.

– **தி. வெற்றிச்செல்வன்**, மேலைச்சிவபுரி.

சுரங்கம் பகுதியில் வெளியாகியிருந்த 'இன்றையத் தேவை சிக்கனத் தேர்தல்முறை' கட்டுரையில் அருட்செல்வர் கூறியுள்ள கருத்துகள் இக்காலத் தேர்தல் முறைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். இதை மத்திய அரசு நடைமுறைப் படுத்தினால் நாட்டிற்கு மிகவும் நல்லது.

– **ஏ. பாஸ்கர்**, சேலம்.

"**மூ**த்தோரைப் பேணுதல் நன்றே'' எனும் மூதுரையைத் தாரகமந்திரமாகக் கொண்டு பேரா. இருசுப்பிள்ளை போன்ற சான்றோர்களின் அருமை பெருமைகளை வெளியுலகினரும் உணரும் வண்ணம் படைத்தளித்த மரபின்மைந்தன் முத்தையாவுக்கு நன்றிகள் பல!

– **எல்.சூரியக்கண்ணு**, மதுரை.

இசையோடு இசைபட வாழ்ந்த அன்னை ஸ்ரீசாரதா தேவியின் இறை வாழ்க்கையை பெ.சு. மணி ஆத்மார்த்தமாகத் தமது கட்டுரையில் பிரதிபலித்திருந்தார். நெஞ்சை நெகிழவைத்த கட்டுரை.

– **ஆர்.கே. லிங்கேசன்**, மேலகிருஷ்ணன்புதூர்.

பேலூர்ப் பயணக் கட்டுரையின் மூலம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அவதரித்த, வாழ்ந்த இடங்களுக்கு எங்களையும் அழைத்துச் சென்ற கார்ட்டூனிஸ்ட் எஸ். மதி அவர்களுக்கு மனமார்ந்த நன்றி!

– **தஞ்சை கந்தமாறன்**, சென்னை.

அருள்நிதி இருசுப்பிள்ளை பற்றிய கட்டுரை ஒரு முரசாய் முழங்குது 'ஓம் சக்தி' இதழில். மரபின்மைந்தன் முத்தையா இன்றமிழை அருணை அரசர் தான் அனுப்பி இங்குத் திகழ வைத்தாரோ! கோவையில் தமிழ்மணம் விஞ்சிட!

– **சிவ அ. அரிகரபுத்திரன்**, திருநெல்வேலி.

தந்தையையும், தந்தையின் நட்பையும் மதித்துப் போற்றுகிற பண்பைச் சுட்டிக்காட்டும் "நட்பு'' சிறுகதையும், மனம், பணம் சம்பந்தப்பட்ட இரண்டையும் ஒன்றோடொன்று இடம் மாற்றிப் பார்க்கக் கூடாது என்பதாகக் கூறும் "மனம்'' சிறுகதையும் நெஞ்சை நிறைத்தன.

– **மு. இராமு**, திருச்சி.

லண்டன் மியூசியத்தில் இருந்து கண்ணகி சிலை மீட்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் அமைந்த வி.வே. சுவாமிநாதன் கட்டுரை, ஆட்சியாளர்களின் கவனத்திற்குச் செல்ல வேண்டும்.

– **சீத்தலைச்சாத்தன்**, திருப்பத்தூர்.

கார்ட்டூனிஸ்ட் மதியின் பேலூர்ப் பயணக் கட்டுரையைப் படிக்கப் படிக்க மகிழ்ச்சியாக இருந்தது. படங்களும் சிறப்பாக இருந்தன. வெளியிட்ட 'ஓம் சக்தி'க்கு நன்றி!

– **எஸ்.விபுலானந்தன்**, சீர்காழி.

நள்ளிரவில் பெய்த மழையால் என்னென்ன விளைந்தது என்பதைக் கவித்துவம் மிகுந்த கற்பனை நயத்துடன் சொல்லியிருந்தார், தம் கவிதையில் பூ.அ. இரவீந்திரன்.

– **மேலை. தமிழ்க்குமரன்**, முத்தரசநல்லூர்.

புராண காலப் பிசிராந்தையார் நட்பைப் போல் இருந்தது அகரம் செ. தர்மலிங்கம் படைத்திருந்த 'நட்பு' சிறுகதை. வித்தியாசமான கருத்தமைப்புடன் படைக்கப்பட்டிருந்தது.

– **உஷாமுத்துராமன்**, திருநகர்.

அருள்நிதி இராம. இருசுப்பிள்ளையின் நினைவலைகளை 'ஓம் சக்தி'யில் படித்தபோது மனம் வருந்தியது. அருட்செல்வருடனான அவருடைய நட்பு ஆழமானது என்பதைப் பல விழாக்களில் நான் பார்த்திருக்கிறேன்.

– **லிங்கம் சின்னசாமி**, தாராபுரம்.

மதுரை கல்யாணசுந்தரத்தின் முத்திருளப்பப் பிள்ளை பற்றிய வரலாற்றுக் கட்டுரை சிறப்பாக இருந்தது.

– **அ. அழகையா**, மதுரை.

நல்வாழ்த்துக்களுடன்!




ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடட்

சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் - 641 018 போன் : 0422-2233982, 2233983







நாடாளுமன்றத்தின் மாண்பு?

இந்தியத் திருநாட்டின் பல சீர் திருத்த நடவடிக்கைகளுக்கு நாடாளுமன்றம் வித்திட்டுள்ளது. அந்தச் சீர்திருத்தத்தை முன்மொழிந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வரலாற்றில் தனித்த இடம் உண்டு.

மேலும் வரலாற்றில் இடம்பெறுவதற்கு முழு முதல் காரணமாய் அமைந்தது அன்று அவர்கள் கடைப்பிடித்த கண்ணியம், கட்டுப்பாடு மற்றும் பரிமாறிக் கொண்ட செறிவான விவாதம்.

ஆனால் அவை எல்லாம் தற்பொழுது காண முடியாமல் போய்விட்டன. அண்மையில், மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட வேளாண் மசோதாக்கள் தொடர்பான செயல்பாடு என்பது நாடாளுமன்றத்தின் மாண்பை மீண்டும் கேள்விக்குறி ஆக்கியது. அந்த மசோதாக்கள் தொடர்பாக உறுப்பினர்கள் ஆகச் சிறந்த விவாதம் புரிந்து, நாட்டு மக்களுக்கு ஒரு தெளிவான பார்வையை ஏற்படுத்தி இருந்தால், நாடாளுமன்றத்தின் மாண்பு காக்கப்பட்டிருக்கும்.

அதைவிடுத்து, எதிர்கட்சிகளின் கடும் எதிர்ப்பு, கூச்சல், குழப்பத்துக்கு இடையே அல்லவா மசோதா நிறைவேறியது. அதிலும் ஒருசில உறுப்பினர்கள் ஒரு படி மேலே போய் அவைத் தலைவரை நோக்கிப் புத்தகத்தை வீசியும், அவையின் மையப் பகுதியில் விதிமுறை நூலைக் கிழித்தும் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

சரி, இதற்கெல்லாம் காரணம் என்று அமளியில் ஈடுபட்ட சில உறுப்பினர்களை மட்டும் கைகாட்டிவிட முடியாது. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி ஒரு மசோதாவை தாக்கல் செய்கிறது என்றால், அதனின் சாதக பாதகங்களை அலசி ஆராய வேண்டியது அவையில் இருக்கும் அனைத்து உறுப்பினர்களின் கடமையாகும்.



செ.சரத்

அதையும் தாண்டித் தெளிவான பார்வை கிட்ட வேண்டுமாயின், அவையில் உள்ள உறுப்பினர்களைக் கொண்டு வாக்கெடுப்பு நடத்தி, நாடாளுமன்றத் தேர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பலாம்.

ஆனால், இங்கு நிலைமை யாதெனில், கடந்த 15–ஆவது மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட மசோதாக்களில் 68 மசோதாக்கள் பாராளுமன்ற நிலைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது என்றால், 16–ஆவது மக்களவையில் 24 மசோதாக்கள் எனக் குறைந்து, தற்போதைய மக்களவையில் எந்தவொரு மசோதாக்களும் நிலைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பும் வழக்கமே இல்லாமல் போய்விட்டது.

ஏனென்றால், தற்போதைய நடைமுறையில் நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதம் நடைபெறுவதற்கான சூழ்நிலையே இல்லாமல் போய்விட்டது. அதனினும் ஒரு சில உறுப்பினர்கள் சாக்குபோக்குக் கூறி, அவைத் தொடரில் பங்கேற்காமல் விடுப்பு எடுப்பதெல்லாம் சரியான செயல் அல்ல.

இதற்கிடையில் ஆளுங்கட்சி தாக்கல் செய்யும் மசோதாக்களை எதிர்த்தே தீர வேண்டும் என்னும் கொள்கையுடன் எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சிகளின் கேள்விக்கோ அல்லது அவர்களின் விமர்சனத்திற்கோ தகுந்த வகையில் பதில் தர வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்னும் தொனியில் ஆளுங்கட்சியும் செயல்படும் வரையில் நாடாளுமன்றத்தின் பணியும், நேரமும் வீண் தான்; கூடவே மக்களின் வரிப் பணமும் விரயம்தான்.

முன்பெல்லாம் நாடாளுமன்றம் கூடுகிறது என்றால், அனல்பறக்கும் விவாதங்களும் தங்கு தடையின்றி நடைபெறும். நாட்டின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெறுகிறது என்றால், தில்லியை விட்டு வெளியே செல்வதைத் தவிர்ப்பதுடன், அனைத்து விவாதங்களிலும் கலந்து கொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடுமையான விமர்சனத்திற்கும் பதில் அளித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து வந்தவர்களில் காங்கிரஸ் கட்சி அல்லாத பிரதமர்களில் ஒருவரான அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களைக் குறிப்பிடலாம். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் ரசிக்கும் படியான பதில் அவரிடமிருந்து கிட்டும். அப்படி நேரு வழிவந்த காங்கிரஸ் கட்சியும், வாஜ்பாய் வழியில் வளர்ந்த பாரதிய ஜனதா கட்சியும் இன்றைக்கு நாடாளுமன்றத்தை முடக்குவதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றன.

தங்கள் கட்சியின் உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய ராகுல் காந்தி பிரதமரை நோக்கி கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், ‘இன்னும் ஆறு மாதங்களில் இளைஞர்கள் உங்களைத் தடியால் அடிக்கப் போகிறார்கள்’ என்று கூறியதையும் அதற்குப் பதில் அளித்துப் பேசிய பிரதமர் மோடி, ‘டியூப் லைட்’ என்று மறைமுகமாக விமர்சித்துக் கொண்டதெல்லாம் இனிவரும் அரசியல் தலைமுறை கற்றுக்கொள்ளக் கூடாத பாடம்.

இப்படி அறிந்தோ, அறியாமலோ பேசியதற்குப் பிராயச்சித்தமாக இனி மேலாவது அவையில் நாகரீகத்தைக் கடைப்பிடித்து இருந்தால், தற்போது நடைபெற்ற மழைக்காலக் கூட்டத் தொடராவது அர்த்தம் நிறைந்த ஒன்றாக நடைபெற்று இருக்கும். ஆனால் வழக்கம்போல அமளியுடன் நடந்து முடிந்தது. கொரோனா தீநுண்மி காலம் என்பதால் பாதுகாப்புக் கருதி, தற்போது நடைபெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கேள்வி நேரம் தடை செய்யப்பட்டது. அதே தடை தாக்கல் செய்யப்படும் மசோதாக்களின் மீதும் அறிவிக்கப் படாத ஒன்றாகவே அரங்கேறியது.

ஆம், இரு அவைகளிலும் போது மான அளவு உறுப்பினர்களை வைத்திருந்தும், ஏன் ஆளும் அரசாங்கம் விவதாம் இன்றி மசோதாக்களை நிறைவேற்றுவதில் ஆர்வம் காட்டுகிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது. மேலும் நடந்துமுடிந்த கூட்டத்தொடரில் எப்படியோ குரல் வாக்கெடுப்பு மூலம் வேளாண் மசோதாக்கள் மாநிலங்களவையில் ஒரு வழியாக நிறைவேற்றிய அதே வேளையில், அதற்கு இடையூறு தரும் வகையில் சில கட்சிகளின் உறுப்பினர்கள் நடந்து கொண்டதாகக் கூறி, எட்டு உறுப்பினர்களை அந்தக் கூட்டத்தொடர் முழுவதும் பங்கேற்பதில் இருந்து இடைநீக்கம் செய்திருந்தார் மாநிலங்களவைத் தலைவர்.




ராகுல் காந்தி

அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இடைநீக்கம் செய்யப்பட்ட எட்டு உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் தர்ணாப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதை ரத்து செய்தால் மட்டுமே இன்ன பிற கட்சிகளின் உறுப்பினர்களும் அவை நடவடிக்கைகளில் கலந்து கொள்வோம் என்று கூறி அவையில் பங்கேற்பதைத் தவிர்த்த வேளையில், ஆளும் அரசாங்கம் சத்தமே இல்லாமல் ஏழு மசோதாக்களை நாடாளுமன்றத்தில் மூன்று மணி நேரத்தில் தாக்கல் செய்து நிறைவேற்றியது. அதுவும் எந்த ஒரு விவாதமும் இன்றி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்றி நிறைவேற்றியது.

இனிமேலும் இத்தகைய நடைமுறை தொடருமானால், அதற்கெதற்கு நாடாளுமன்றம் வேண்டும் அல்லது அதனை மிகச்சிறந்த ஜனநாயகம் என்றுதான் கூறிவிட முடியுமா?

அன்று நாடாளுமன்றத்தை 'ஜனநாயகத்தின் கோயில்' என்று கூறிய பிரதமர் மோடி, முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்த போது மனமுவந்து அதன் படிக்கட்டுகளைத் தொட்டு வணங்கினார். ஆனால் பின்னாளில் பெரும்பாலான நாடாளுமன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்வதில் ஏனோ அவர் போதிய கவனம் செலுத்தவில்லை என்றே தோன்றுகிறது.

முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிரதமராகப் பதவி வகித்த ஆறு வருடக் காலத்தில் 77 முறை நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் பேசி உள்ளார். அதுவே பத்து வருடம் பிரதமராகப் பதவிவகித்த மன்மோகன்சிங் 48 முறை பேசி உள்ளார். ஆனால் தற்போதைய பிரதமர் மோடி தனது ஆறு வருடக் காலத்தில் 22 முறை மட்டுமே பேசியுள்ளார்.

மேலும் மன்மோகன்சிங் ஆட்சிக் காலத்தில், ஆண்டுக்குச் சராசரியாக ஆறு அவசரச் சட்டங்கள் பிறப்பித்த நிலை மாறி, தற்போது ஆண்டுக்கு 11 அவசரச் சட்டங்கள் என்று உருமாறிப் போயுள்ளது. எனவே, இனிவரும் கால கட்டங்களிலாவது நாடாளுமன்றத்தின் மாண்பு காக்கப்பட வேண்டும். ஏனென்றால், இந்நாட்டின் நாளைய விடிவெள்ளியான இளைஞர் பட்டாளம் உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது.

அதனோடு கல்லூரிகளில் நடக்கும் மாதிரி நாடாளுமன்றங்களில் நடக்கும் விவாதங்கள்கூட, மக்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்படும் நிஜமான நாடாளுமன்றத்தில் நடைபெறாமல் போவது, நாடாளுமன்றத்தின் மாண்புக்கு என்றென்றும் அழகு சேர்க்காது என்பதை நீங்கள் உணர வேண்டிய தருணமிது. ●

சிறுகதை

வேலைக்காரியின் கணவன்

எஸ். ஸ்ரீதுரை



அமைதியான அக்கிரஹாரம்னு கதைகள்ல எழுதுவாங்கிறது தெரியும்.

அக்கிரஹாரத்துக்கு என்ன குறைச் சல், அது அமைதியாத்தான் இருக்கு. அதனால் என்ன? அதுக்குள்ள இருக்கிற ஒவ்வொன்னும் அமைதியாக இருக்கணும்னு சட்டமா என்ன? அது கொதிச்சுண்டுதான் இருக்கு.

அது அதுன்னு சொல்றேனே, அது எதுன்னு கேக்கறேள்னு புரியறது.

வேற என்ன, என்னோட மனசுதான் அந்த அது.

இவ்ளோ பேசறியே நீ யாரு? உனக்கென்ன பேரு...? இதுதானே அடுத்த கேள்வி.

நான் ஒரு பொம்மனாட்டி. எஸ்.எஸ்.எல்.சி வரைக்கும் படிச்சவளாக்கும்.

என் பேர்... ம்....

அக்கிரகாரத்திலே, அதுவும் சிவன் கோயில் இருக்கிற அக்கிரகாரத்துல குடித்தனம் வாய்ச்சிருக்கிற பொம்மனாட்டிகளுக்கு வேற என்ன பேர் இருக்கப் போறது.

பாகீரதிதான் என்னோட பேரு.

கடைசியா, எதுக்கு உன்னோட மனசு கொதிச்சுண்டிருக்குன்னு கேட்க வர்றேள்... ஆம் ஐ கரெக்ட்...?

அன்னிக்குத்தான்... அன்னிக்குத்தான் அது நடந்தது. ரஜினியோட அண்ணாமலை படம் ரிலீஸ் அன்னிக்கு நடந்தது அது.

எங்க மாமியாருக்கு ஓர் ஆச்சரியமான ஞாபகசக்தி உண்டு தெரியுமோ... நாப்பது வருஷத்துக்கு முன்னாடி நடந்த ஒரு விஷயத்தைச் சொல்லணும்னாக்கூட, ‘அன்னிக்கு ஆத்துல என்ன சமையலோ அதைச் சரியாச் சொல்லுவா. அறுவதாம் வருஷம் (1960–ன்னு நாம அதைப் புரிஞ்சுக்கணும்) மார்ச்சு மாசம் உன் புருஷனை உண்டாயிருந்தேன். இப்பவோ அப்பவோன்னு இருந்துது. ஆஸ்பத்திரியிலே சேர்ற அன்னிக்குக் காலமே சுண்டைக்காய் போட்டு வத்தக்குழம்பு, கருவேப்பிலைத் துகையல், வெள்ளரிக்காப் பச்சடி, சீரக ரசம், தொட்டுக்கிறதுக்கு நாலே நாலு எலவடாம் பொரிச்சேன்...’ இந்த மாதிரி எல்லாத்துக்கும் சமையல்தான் அடையாளம் எங்க மாமியாருக்கு. என்னவர் பொறந்து ஒரே வாரத்துல ஆருத்ரா தரிசனமாம். பிரசவத்தீட்டுப் போகாத தனால் எங்க மாமியாரால தரிசனம் செய்ய முடியாமப் போச்சாம்.



யார் யாரோ வந்து எனக்கு ஆறுதல் சொல்றா... ஒண்ணுமே புரியலை எனக்கு. தரதரன்னு இழுத்துண்டுப் போய்க் காட்டு நடுவுல விட்டா மாதிரி இருந்தது. பொட்டலமாகக் கட்டி அவரை ஆத்துல கொண்டு வந்து போட்டா. பக்கத்தூர்லேர்ந்து அவர் அண்ணா பையன் வந்து கொள்ளி போட்டான். எல்லாம் முடிஞ்சு போச்சு.

அதே மாதிரி எனக்கு நான் பார்த்த சினிமாக்கள்தான் ஞாபகச் சின்னம்.

பார்த்தேளா, மறுபடியும் பாயின்டைத் தொட்டுட்டேன்.

ஆருத்ரா தரிசனம்.

ஆமாம். நாலு வருஷம் முந்தி அந்த ஆருத்ரா தரிசனத்தன்னிக்குதான் அது நடந்தது.

எங்க ஊர் நீலமேகேசுவரர் கோயில்ல நடக்குற ஆருத்ரா தரிசனத்துக்குச் சுத்துவட்டாரத்து

ஜனங்களெல்லாம் நூத்துக்கணக்குல வருவா. திருவண்ணாமலைக் கோயில் தீபத்தன்னிக்கு அர்த்தநாரீசுவரர் ஒரேயொரு நிமிஷம் வெளீல வந்து 'ஜிங்கு ஜிங்கு'ன்னு ஆடிட்டுப் போகும் பாத்திருக்கேளா, அதேமாதிரி எங்க ஊர்க்கோயில் நடராஜாவை நாலு வீதியிலும் ஆட்டி ஆட்டியே தூக்கிண்டு வருவா. கழுத்துல சாத்தின ரோஜா மாலை வழியெல்லாம் உதிர்ந்து உதிர்ந்து கோயிலுக்குத் திரும்பறச்சே, நடராஜா கழுத்துல வெறும் நார் மட்டும்தான் இருக்கும். பின்னாலே கட்டியிருக்குற பட்டுக்குடை ஒரு பக்கமா சரிஞ்சி ருக்கும். அது என்னவோ, அவரைத் தூக்கிண்டு வர்ற இளவட்டப் பசங்களுக்குப் பக்தியே இல்லா விட்டாலும் ஒருவிதமான உற்சாகம்.

அதுவும் தாங்கள் ஓரப் பார்வைப் பார்க்கிற பொண்ணுகள் சுவாமி தரிசனம் பண்றேன் பேர் வழின்னு தெருவுக்கு வந்து வாள் கண்ணூல பட்டுட்டா ஆட்டம் ஜாஸ்தியாயிடும். இதே தூக் கிண்டு வர்றரதைப் பெருமாள் கோவிலில் ஏளப் பண்ணிண்டு வர்றதாச் சொல்லுவா.

எல்லாம் சரி... அப்படி ஆருத்ரா தரிசனத் துக்குக் காலையிலே நூத்துக்கணக்குல வர்ற ஜனங்கள்ளாம் மத்தியானத்துக்குள்ள எங்கத்தான் போகுமோ, உள்ளூர் ஜனங்க உள்பட. உச்சிக் கால பூஜை நடக்கறப்போ எல்லாம் ஓடிப் போய் ஊரே வெறிச்சோன்னு இருக்கும், படம் முடிஞ்ச டெண்ட்டு கொட்டாய் மாதிரி.

பாருங்கோ, மறுபடி மறுபடி நான் பாயிண்டுக்கே வர்றேன்.

பாழாப்போன நான் அன்னிக்குப் பார்த்து தானா பக்கத்தூர் டெண்டுக்கொட்டாய்ல அண்ணாமலை மார்னிங் ஷோ பாக்கப் போகணும். ஆருத்ரா தரிசனம் காலமே பார்த்தாச்சு. அதே சிவன் கோயில்ல குருக்களாயிருக்குற எங்க ஆத்துக்காரர் உச்சிக்கால பூஜை முடிஞ்சு, திருவா பரணம் எல்லாம் கழற்றிக் கொடுத்துக் கணக்கு ஒப்படைச்சிட்டு வர்றதுக்கு எப்படியும் மணி ரெண்டாவது ஆயிடும். (மாமியார் போய்ச் சேர்ந்து எத்தனையோ வருஷம் ஆச்சு. எனக்குப் பசங்கள், குட்டிகள் எதுவும் கிடையாது. எனிமோர் டீடெயில்ஸ் தேவையா?).

சரிதான்னு எங்காத்து வேலைக்காரி கன்னியம்மாளைத் துணைக்குக் கூட்டிண்டு அண்ணாமலைக்குக் கிளம்பிட்டேன். மதியச் சாப்பாட்டையும் பண்ணி ரெடியா வெச்சுட்டுத் தான்.

எல்லாம் என் தலைவிதி. ஒருவேளை நான் அந்தப் படத்துக்குப் போகாம இருந்திருந்தா, ஒருவேளை நல்ல புத்தி வந்து மத்தியானம் சீரியல் நானூத்தி எழுவத்தேழாவது எபிசோடு பார்க்காமெ இருந்திருந்தா, கூடவே ஒருவேளை பரஞானம் கைகூடி வந்து கோயிலுக்குப் போய் அந்தச் சர்வேஸ்வரனை இன்னொரு தரம் தரிசனம் பண்ணி நமஸ்காரம் பண்ணணும்னு கொஞ்ச மாவது நான் நினைச்சிருந்தால், அந்தக் கடங்காரன் அவரை வெட்ட வரும்போது, கூச்சல் போட்டாவது சாவித்திரி சத்தியவானை மீட்டுண்டு வந்த மாதிரி என் ஆத்துக்காரரை மீட்டுண்டு வந்திருக்கலாம்.

ஒருவேளை அந்த அரிவாள் வெட்டே கூட என் மேல பாதி, அவர் மேல பாதியாய் விழுந்து கொஞ்ச நாள் ஆஸ்பத்திரி வாசம் அனுபவிச்சுட்டு வீட்டுக்குத் திரும்ப வந்திருக்கலாம்.

அதுசரி, அப்படியெல்லாம் நடந்திருந்தால் எனக்கேன் இந்தக் கோலமெல்லாம். நான் எதுக்கு இதோ வாசல் திண்ணையில இப்படி உட்கார்ந்துண்டு ஜன்னல் கம்பி வழியா வெய்யில் வழியற இந்த அக்கிரகாரத்தெருவை வேடிக்கைப் பார்க்கப் போறேன். ஒண்ணு சமையலை முடிச்சு, நான் சாப்டுட்டு, அவருக்கும் எடுத்து வெச்சிட்டுத் தூங்கிண்டிருப்பேன். இல்லேன்னா, அதே கன்னியம்மாளைத் துணைக்கு அழைச்சிண்டு இன்றைய படம் ஏதாவது பார்க்கறதுக்கு...

இருங்கோ... இருங்கோ... கன்னியம் மாள்னதும்தான் நினைவுக்கு வர்றது.

அன்னிக்கு அவ வந்து கதறுனக் கதறு இருக்கே, இப்பவும் எங்காதுல டாண் டாண்னு நைவேத்திய கண்டாமணிச் சத்தம் மாதிரி கேட்டுண்டிருக்கு.

''மாமீ, அந்தச் சண்டாளப் பாவி, ஏம் புருசன், ஒங்க ஐயிரையே இப்படி வெட்டிப் போட்டுட்டானே மாமீ. இத்தினி நாளா அக்கம் பக்கத்து ஊருங் கள்ல சில்லறைத் திருட்டா செஞ்சிக்கிட்டிருந் தான். பாவி, ஈசுவரன் கோவில் நகை மேல எம்மாம் நாளாக் கண்ணு வெச்சிருந்தானோ, இன்னிக்கு உள்ளப் பூந்துட்டான். சனங்க இல்லாத நேரத்துல சாமி நகைங்களைக் கழட்டும்போது, மண்டபத்துலேயே அவரை மடக்கி வெட்டிப் போட்டு நகையெல்லாம் வாரீனு பூட்டானே. உன் வூட்டு சோத்தைத் தின்னிட்டு உங்களுக்கே இப்படிப் பாவம் பண்ணிட்டானே



அந்தப் படுபாவி...''ன்னு உருண்டு புரண்டு அழுதாள் கன்னியம்மாள்.

யார் யாரோ வந்து எனக்கு ஆறுதல் சொல்றா... ஒண்ணுமே புரியலை எனக்கு. தரதரன்னு இழுத்துண்டுப் போய்க் காட்டு நடுவுல விட்டா மாதிரி இருந்தது. பொட்டலமாகக் கட்டி அவரை ஆத்துல கொண்டு வந்து போட்டா. பக்கத்தூர்லேர்ந்து அவர் அண்ணா பையன் வந்து கொள்ளி போட்டான். எல்லாம் முடிஞ்சு போச்சு.

எனக்கும் படம் பார்க்கிற ஆசை அன்னிய தினத்தோடு அத்துப் போச்சு.

ஒரு வாரம் கழிச்சு எங்கேயோ ஒளிஞ்சிண்டிருந்த கன்னியம்மாள் புருஷனைக் கூட்டாளிகளோடு பிடிச்சுட்டதாகப் பேச்சு. எப்படியும் அவனுக்கு ஆயுள் கிடைக்கும்னு எல்லாரும் பேசிக்கிட்டா.

முதல்ல பத்திரிகைக்காராள், கேமரா, போலீஸ், அது இதுன்னு கொஞ்ச நாள் பரபரப்பாய்ப் போச்சு. மோப்ப நாய் வந்தபோது அதைக் கோவிலுக்குள்ள விடப்படாது. புனிதம் கெட்டுடும்னு யாரோ விவாதம் பண்ணியிருக்காள். நாயைத் திரும்பக் கூட்டிண்டு போயிட்டாள்னு கேள்வி.

தர்மகர்த்தா கொஞ்சம் நல்ல மனுஷன். அந்தச் சம்பவம் நடந்து கொஞ்ச நாள் கழிச்சு தன் சொந்தப் பணத்துலேர்ந்து அஞ்சாயிரம் ரூபாய் கொடுத்து, “எப்போ அந்த உபகாரம்னாலும் கேளும்மா, நீ என் பொண்ணு மாதிரி”ன்னு சொல்லி அனுப்பி வெச்சார். நானும் அதுக்கப்புறம் அவர்கிட்ட உதவி கேக்கற நிலைமை எதுவும் இதுவரைக்கும் ஏற்படலைன்னு வெச்சுக்குங்கோ.

இதோ வெளையாட்டுப் போல நாலு வருஷம் ஓடிப் போயிடுச்சு. பக்கத்து டவுன் கோர்ட்டுல இன்னிக்குதான் தீர்ப்புன்னு சொல்றா.

தெனமுமே அவர் நினைப்பு இல்லாமே போகுமா என்ன... இன்னிக்குத் தீர்ப்பு... அதான் கொஞ்சம் ஜாஸ்தியாப் புலம்பிண்டிருக்கேன்.

எல்லாம் சரி... நான் இப்போ என்ன வேண்டிண்டு இருப்பேன். எங்காத்துக்காரரை வெட்டினவனுக்குத் தூக்குக் கிடைக்கணும் அப்டின்னு தானே நினைக்கிறேள்.

ஐயாம் ஸாரி... யூ ஆர் ராங்...

எங்க ஆத்துக்காரார் போயிட்டார்... அது சாதாரண இழப்பில்லேதான்.

ஆனால், அவர் என்னை நடு ரோட்டுல நிறுத்திடாமல், கொஞ்சம் சௌக்கியமாத்தான் விட்டுட்டுப் போயிருக்கார். யூ ஸீ. காவேரி வடக்குக் கரையோரமா ரெண்டு ஏக்கர் நஞ்சை, சுயார்ஜிதம். இவரோட சுய சம்பாத்தியம் கிறதாலே பாகப் பிரிவினைல்லாம் இல்லே. நெல்லு விளையற பூமி. கொஞ்சம் யோக்கியமான குத்தகைக்காரன். கர்நாடகா தகராறு செய்யாம தண்ணீ விடும் போதெல்லாம் ரெண்டு போகம் நிச்சயம். என் ஒருத்திக்குத் தாராளமாப் போதும். பேங்குலயும் கொஞ்சம் பணம் வெச்சிட்டுப் போயிருக்கார். போதாக்குறைக்கு என் அண்ணா தம்பிகள்லாமும் இப்படி வந்து போகும் போதெல்லாம் வேண்டாம்னாலும் வெச்சுக்கோ பாகீன்னு கொடுத்துடுட்டுப் போகிறவாள்தான்.

அந்தக் கன்னியம்மாள்தான் பாவம். நாலு குழந்தைகளை வெச்சிண்டு அஞ்சாறு வீடுகள்ல பத்துப்பாத்திரம் தேய்ச்சு வயத்தைக் கழுவிண்டிருந்தது. கொஞ்சம் சின்னப் பொண்ணு வேற. புருஷனில்லாம அது படற பாட்டை நினைச்சா கஷ்டமாத்தான் இருக்கு. அந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஒரு சில வீட்டுல அவளை நிறுத்திட்டா. எனக்குத்தான் மனசு கேக்கலே. வீட்டுவேலை செய்ய எனக்கு ஒண்ணும் சோம்பலில்லே. பாவம், அந்தப் பொண்ணோட குடும்பத்துக்கு நம்மாலானது ஏதாவது செய்யணுமேன்னுதான் அவளை இப்பவும் வேலைக்கு வரச் சொல்லியிருக்கேன். “என்னடி பாகீ, போயும் போயும் உம் புருஷனைக் கொன்னவனோட பொண்டாட்டியை”னு சிலர் கேட்கத்தான் செய்ஞ்சா. என்ன செய்யறது. அவ புருஷன் செஞ்சதுக்கு இவள் என்ன பண்ணுவான்னுதான் எனக்கு நினைக்கத் தோணறது.

கரெக்ட்... இப்பதான் என் மனசுல என்னா இருக்குங்கியதை நீங்க சரியா கெஸ் பண்ணியிருக்கேள்.

இன்னிக்குத் தீர்ப்பு இல்லையா. எப்படியும் போனவர் திரும்பி வரப் போறதில்லே. நான் எந்த வக்கீலையும் வெச்சி வாதாடல்லே. அரசாங்க வக்கீல்தான் வாதாடறார். எப்படியோ, அந்தப் பாவப்பட்ட பொண்ணு கன்னியம்மாளுக்காகவாவது அவ புருஷன் மேல தப்பில்லைன்னோ, இல்லே தப்பிருந்தாலும் ஏற்கெனவே நாலு வருஷமா தண்டனையை அனுபவிச்சுட்டான்னோ சொல்லி ஜட்ஜ் அவனை விட்டுட்டால் போதும்னு தோணறது.

கொழந்தையில்லாதவளைக் காட்டிலும், கொழந்தைகள் இருக்கிறவளுக்கு அவள் கூடவே அவளைக் கட்டிண்ட புருஷன் இருக்கறதுதான் நல்லது. அவன் சித்தே ஏடாகூடமாய் இருந்தாலும் கூட... என்ன... நான் சொல்றது சரிதானே...?

நமக்குன்னு எதுவும் வேண்டிக்காமே, பிறத்தியாருக்குன்னு வேண்டிண்டா, எங்க நீலமேகேசுவ சுவாமி நிச்சயம் அதை நடத்திக் குடுப்பார். ஆம் ஐ கரெக்ட்...?

என்ன சொல்றேள்...?

நான் ஒரு பைத்தியக்காரின்னா சொல்றேள்...?

ஆமாம். ஐயாம் எ ஃபூல் தான். அதுக்கென்னவாம்...?


●

கட்டுரை

சுவாமி விவேகானந்தரும் காந்திஜியும்

எந்த ஒரு தலைவருக்கும் ஆதரவாளர்களும் விமர்சிப்பவர்களும் நிச்சயம் இருப்பார்கள். ஆனால், காந்திஜியை அவர் வாழும் காலத்திலேயே ஒரு 'மகாத்மா'வாக வணங்கி, பெரும் மரியாதையுடன் பின்தொடர்ந்தவர்கள் – இன்றும் அவ்வாறு கருதுபவர்கள் ஒருபுறம் இருக்க, மற்றொருபுறம், அவரை வெவ்வேறு காரணங்களுக்காக ஒரேடியாக ஒதுக்குபவர்களும் இருக்கிறார்கள்.

இப்படி அதிக அளவிற்கு வணங்கப்பட்டும், அதே அளவிற்கு விமர்சிக்கப்பட்டும் வரும் மற்றொரு தலைவரை உலகம் கண்டதில்லை. விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், "இப்படிப்



சுவாமி விமூர்த்தானந்தர்

பட்ட ஒரு மாமனிதர் ரத்தமும் சதையுடனும் வாழ்ந்தார் என்று கூறினால், வருங்கால உலகம் அதை நம்ப மறுக்கும்" என்றார்.

காந்திஜி தன் சொந்த வாழ்க்கையையே சத்தியத்துடன் தான் நடத்திய பரிசோதனையாகவே வரையறுத்தார் (The Story of My Experiment with the Truth). அவர் நடத்திய சத்திய பரிசோதனைகளில் சில வெற்றிகரமானது. சில தோல்வி அடைந்தன. அவருடைய பரிசோதனைகளின் முழுமையான மதிப்பைக் காலம்தான் தீர்மானிக்க முடியும். ஆனால், அதில் கவனிக்க வேண்டிய இரண்டு முக்கியமான விஷயங்கள் உள்ளன.

முதலாவது, காந்திஜி தனது வாழ்க்கையை வெளிப்படையாக வைத்திருந்தார். இரண்டாவது, தன் வாழ்க்கையை, தான் மேற்கொண்ட சத்திய பரிசோதனைகளைக் கவனிக்கும் யாரும் தனது தவறுகளைப் புறக்கணித்துவிட்டு, நல்லனவற்றை, ஏற்றதை மட்டும் பின்பற்ற வேண்டுமென எழுதினார்.

சிறந்த நேர்மையுடைய தலைவரால் மட்டுமே எதையும் மறைக்காமல் தனது தவறுகளையும்கூட பொதுவில் வெளிப்படுத்த முடியும். தனி மனிதராக, ஒரு மாபெரும் தலைவராக அவரது வாழ்க்கையைக் கவனிக்கும் எவருக்கும் இன்றும் அவை உத்வேகமூட்டும். இந்திய வரலாறு அவர் இல்லாமல் எழுதப்படவே முடியாது.

மூன்று வழிகளில் காந்திஜி : காந்திஜியை மூன்று வழிகளில் புரிந்துகொள்ளலாம். ஒன்று, காந்திஜி மீது பற்றுகொண்டு அவரின் கொள்கைகளைத் தங்களால் முடிந்த வகையில், முடிந்ததைப் பின்பற்றிய காந்தியர்கள் மூலமாக. ஆனால் அந்த காந்திஜி பிம்பம் அவர்களுடையது. அந்த காந்தியர்களின் புரிதலுக்கேற்பக் குறை நிறைகளுடையது.


இரண்டாவது, கடந்த காலத்தில் கூறப்பட்ட காந்திஜியின் கருத்துகள் திரண்டு காந்தியம் என்று ஓர் 'இஸமாக' இன்று இருக்கிறது. காந்தியத்தின் வாயிலாக அறியப்படும் காந்திஜியும் முழுமையானவராக இருக்க முடியுமா? இருக்காது அல்லவா!

மூன்றாவதாக, காந்திஜி வழியாகவே காந்திஜியை அறிவது. அவரின்

வாழ்க்கை மற்றும் எழுத்துக்கள் வழியாக நாமாகவே காந்திஜியை அறிவது, உணர்வது.

இவ்வாறு காந்திஜியின் பல்வேறு வாழ்க்கைச் சந்தர்ப்பங்களில், அவர் நடந்து கொண்ட விதத்திலிருந்து நாம் அறியும் காந்திஜியே நமக்கு மிக அணுக்கமானவராக இருப்பார்.

உதாரணமாக ஆரம்ப காலத்தில் ஒருமுறை, மறுநாள் வழக்காட வேண்



காந்திஜி

டிய வழக்கிற்காகத் தயார்படுத்திக் கொள்ள அவரிடம் ஒருவர் சொன்னதற்கு, "பொய் சொல்கிறவர்கள்தான் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். என் கட்சிக்காரரிடத்தில் உண்மை இருக்கிறது. நான் உண்மையின் சார்பாக வாதாடுகிறேன். இன்றும் நீதி மன்றத்தில் உண்மையைத்தான் சொன்னேன். நாளையும் உண்மையை மட்டும் தான் சொல்வேன். உண்மையைச் சொல்வதற்குப் பயிற்சி எதற்கு?" என்று கூறினார்.

இதில் நாம் கண்டடையும் காந்திஜியே நமக்கான காந்திஜி.

காந்திஜியின் ஆயுதமான அறப் போராட்டம், அஹிம்சைக் கொள்கை 'அஹிம்சையே உயர்வான அறம்' – அஹிம்ஸா பரமோ தர்ம: என்ற இந்து தர்ம வாழ்வியல் நெறியிலிருந்து அவர் அடைந்தது. ஓர் உயிரால் நமக்குத் துன்பம் வருமென்றாலும், அந்த உயிரையும் நேசித்து நன்மை செய்வதே அகிம்சை என்னும் இந்து தர்ம சாஸ்திரத்தின் சாரம் காந்திஜியின் வழியாகப் பாமர மக்களையும் சென்றடைந்தது. அஹிம்சை என்பது கோழைத்தனமல்ல, உண்மையான வீரனே அஹிம்சாவாதியாக இருக்க முடியும் என்கிறார் காந்திஜி.

'பாவத்தை வெறுக்கக் கற்றுக்கொள், பாவியை அல்ல' என்பது சுவாமி விவேகானந்தரின் வாக்கு. காந்திஜி இந்தக் கருத்தை, 'வெள்ளையர்களின் ஆட்சியை, அடக்குமுறையை, அன்னிய ஏகாதிபத்தியத்தை, அவர்களது கலாச்சாரம் நம் மக்களைக் கெடுப்பதை வெறுக்க வேண்டுமேயன்றி, வெள்ளையர்களை அல்ல' என்று வளர்த்தெடுக்கிறார்.

உலகில் அதிகம் சரியாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டியவர் காந்திஜி. அவரை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம், ஆனால் அவரை ஒதுக்க முடியாது. அனைவரும் ஏதாவது ஒருவகையில் காந்தியுஜிடன் சம்பந்தப்பட்டே இருப்பார்கள்.

தென் ஆப்பிரிக்காவின் நெல்சன் மண்டேலா உள்பட எத்தனையோ தலைவர்களுக்கு அஹிம்சைவழிப் போராட்டத்திற்கான முன்மாதிரி காந்திஜிதான். இந்தியாவிற்குப் பிறகு ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் அஹிம்சைப் போராட்ட வழியில் சுதந்திரம் அடைந்துள்ளன. அதற்கு முன்மாதிரியாக இருந்தது, இந்து மதத்தின் அஹிம்சைக் கொள்கையும், அதைத் தன் வாழ்நாளில் கடைப்பிடித்துக் காட்டிய காந்திஜியும்தான்.


சுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தர், "நர சேவையே நாராயண சேவை" என்பார். மக்கள் துயரைத் துடைப்பதே சுவாமிஜியின் ஆன்மீகம். சுவாமிஜியின் இந்தக் கொள்கையின் தாக்கத்தை காந்திஜியிடத்தும் காணலாம்.

காந்திஜி நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பவர். ஆனாலும் ஒருமுறை மாலை பிரார்த்தனைக்குத் தாமதமாக வந்தார். அதற்கு அவர், "வயதான ஒரு தாயும் மகளும் அவர்களின் கஷ்டத் திற்குத் தீர்வு கேட்டு வந்திருந்தனர். அதைச் சொல்லிவிட்டு வந்தேன்" என்றார்.

"பாபுஜி, அவர்களை இங்கே வரச் சொல்லிவிட்டு, பிரார்த்தனை முடிந்ததும், அவர்களது கஷ்டத்தைக் கேட்டு, உதவி செய்திருக்கலாமே?" என்று யாரோ கேட்டார். அப்போது காந்திஜி, "நான் பிரார்த்தனை செய்வதே நன்றாகச் சேவை செய்வதற்காகத் தானே? துயரத்தில் இருப்பவர்களுக்குச் சேவை செய்யும் வாய்ப்புக் கிடைக்கும் போது, அதைச் செய்வதுதான் உண்மை யான, சிறந்த பிரார்த்தனை" என்றார். மக்களுக்கே முக்கியத்துவம் என்பது சுவாமிஜியின் கொள்கை, அதுவே காந்திஜியின் வழியும்.

ராமகிருஷ்ண இயக்கத்துடன் : ராம கிருஷ்ண இயக்கத்திற்கும் காந்திஜிக்கும் உள்ள தொடர்பு முக்கியமானது. 1901–ஆம் ஆண்டு, அப்போது அவ்வள வாகப் பிரபலமாகாத காந்திஜி, ராமகிருஷ்ண மடத்தின் தலைமையகமான பேலூர் மடத்திற்கு சுவாமி விவே கானந்தரை நேரில் தரிசிக்கச் சென்றார். ஆனால் துரதிர்ஷ்டவச மாக காந்திஜி – சுவாமிஜி சந்திப்பு நிகழவில்லை.

ஸ்ரீராமகிருஷ்ண மடத் தின் துறவிகள் காந்திஜி மீது நல்ல மதிப்பு கொண்டிருந்தார்கள். சுதந்திரப் போராட்டக் காலங்களில் சுவாமி துரியானந்தர் காந்திஜியின் செயல்பாடு களைப் பாராட்டினார். சுவாமி விஞ் ஞானானந்தர் நேரில் சென்று காந்திஜி யைப் பார்த்தார்.


ஸ்ரீ ராமகிருஷ்ணர்

1921–இல் பேலூர் ராமகிருஷ்ண மடத்திற்குச் சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் பெரிய தலைவராக காந்திஜி மீண்டும் சென்றார்.

அங்கே சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தி விழாவில் காந்திஜி பேசும் போது, "நான் சுவாமி விவேகானந்தரின் கருத்துகள் முழுவதையும் ஆழ்ந்து படித் துள்ளேன். அதன்பின் எனது தேசபக்தி ஆயிரம் மடங்கு அதிகரித்தது. ஆகவே இளைஞர்களே, சுவாமி விவேகானந்தர் வாழ்ந்து, முக்தியடைந்த இந்த மண்ணிலிருந்து சுவாமிஜியின் ஆன்மீகப் பேராற்றலில் சிறியதையா வது உள்வாங்கிக் கொள் ளாமல் வெறுங்கையுடன் திரும்பாதீர்கள்" என்று தேசத்திற்கே அறிவுறுத் தினார்.

நேதாஜி சுபாஷ்

சந்திரபோஸோ, பகத்சிங்கோ, காந்திஜியோ – சுவாமி விவேகானந்தரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அமைந்திருந்தால், இந்திய சுதந்திரப் போராட்டம் இன்னும் அதிக வீரியத்துடன், ஆன்மீகப் பலத்துடன், சீரியதாக, முறையானதாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. அது உண்மைதான்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் கடவுளை நேரில் கண்டவர். எப்போதும் கடவுளுடன் உரையாடிய மகான். அவரின் வரலாற்றை காந்திஜி ஊன்றிப் படித்திருந்தார். 'பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர்' என்ற அவரது வரலாற்று நூலுக்கு காந்திஜி வழங்கிய அணிந்துரையானது அற்புதம். ஸ்ரீராம கிருஷ்ணரை அவர் தரிசித்த விதம் மிக அலாதியானது.

“பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை வரலாறு பரம்பொருளை நேராகக் காண்பதற்குரிய பயிற்சியின் வரலாறு. அது நம்மையும் கடவுளை நேருக்கு நேராகக் காணச் செய்கிறது. அவருடைய வரலாற்றைப் படிக்கும் எவருக்கும் கடவுள் மட்டுமே உண்மை. மற்றவை எல்லாம் அநித்தியம் என்னும் நம்பிக்கை ஏற்படாமல் போகாது. அவருடைய உபதேசங்கள் வெறும் சாஸ்திரங்களைப் படித்தவர்களின் உபதேசங்கள் அல்ல. அவை அனுபவம் என்னும் புத்தகத்தின் ஏடுகள். அவருடைய சொந்த வாழ்க்கையின் அனுபவங்கள்.

“எனவே அவை படிப்பவரின் மனதில் அழியாத முத்திரையைப் பதிக்கின்றன. எதையும் சந்தேகக்கண் கொண்டு பார்க்கும் இந்தக் காலத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒளிமயமான, உயிரோட்டம் ததும்பும், கடவுள் நம்பிக்கைக்கு உதாரணமாக விளங்குகிறார். ஸ்ரீராமகிருஷ்ணர் இல்லையென்றால் ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் ஆன்மீக ஒளியின்றி வேதனையில் வாடிக் கிடப்பார்கள். ஸ்ரீராமகிருஷ்ணரின் வாழ்க்கை அஹிம்சை வாழ்க்கையின் சிறந்த எடுத்துக்காட்டு” என்று நவம்பர் 12, 1924–இல் தனது கருத்தைப் பதிவு செய்தார். தன்னை நன்கு புரிந்து கொண்டவர்களாலேயே மாமனிதர்களையும், மகான்களையும் சரியாகப் புரிந்துகொள்ள முடியுமோ!

காந்திஜியிடம் மரணத்தைப் பற்றிய பயம் இருந்ததில்லை. போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்கிற அச்சமும் இல்லை. “ஸ்ரீராமன் எத்தனை காலம் நான் வாழ வேண்டும் என்று நினைக்கிறாரோ, அத்தனை காலம்தான் நான் வாழ்வேன்” என்றார்.

யார் சரியான வாழ்க்கையை வாழ்ந்தார்களோ, அவர்களே மரணத்தைத் துச்சமாக மதிப்பார்கள். எப்பொழுதும் ஆயிரக்கணக்கான மக்கள் சூழ இருந்தாலும், இடைவிடாத ராம நாம ஜபம் செய்த காந்திஜி, ஒரு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

“ஸ்ரீராமனின் சேவகன் நான். ராமர் விரும்புகிறவரை, அவருக்கான பணியை நிறைவேற்றுவேன். சத்தியம் மற்றும் அஹிம்சையின் வலிமையை உலகிற்கு உணர்த்தக் கூடிய ஒரு மரணத்தை ராமர் எனக்கு அருளினால், நான் எனது வாழ்க்கை லட்சியத்தில் வெற்றி பெற்றவனாவேன். நான் கடவுளை மனப்பூர்வமாகப் பின்தொடர்ந்திருந்தால், கடவுளைச் சாட்சியாகக் கொண்டு நான் செயல்பட்டிருந்தால், அத்தகைய மரணத்தைக் கட்டாயம் எனக்குக் கடவுள் அருளுவான்.

“யாராவது ஒருவன் என்னைக் கொல்வானானால், அந்தக் கொலையாளியின் மீது எத்தகைய கோபமும் எனக்கு ஏற்படக் கூடாது. நான் ராம நாமத்தை உச்சரித்துக் கொண்டே மரணமடைய வேண்டும். இப்படிப்பட்ட எனது விருப்பத்தைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் நான் இன்று வெளிப்படுத்துகின்றேன்.” ஆதாரம் : காந்திஜியின் 200 இறுதி நாட்கள், ஆசிரியர்: வி. ராமமூர்த்தி, பக்கம் 839.

காந்திஜியின் இந்த விருப்பம் அவ்வாறே நடந்தது என்பது வரலாறு. சாமானியர்கள் கர்மத்தின் வசப்பட்டுப் பிறக்கிறார்கள். மகான்கள், அருளாளர்கள் எல்லாம் செயற்கரிய செயல்களைச் செய்வதற்காக, காலத்தின் தேவைக்கேற்ப ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்காகவே பிறவி எடுக்கிறார்கள்.

காந்திஜியின் கடமை நிறைவேறியதும் ஸ்ரீராமன் அவரை அழைத்துக் கொண்டான். ●

கட்டுரை

ஜனநாயகம் முதலாளித்துவ நாடுகளிலும், பொதுவுடைமை நாடுகளிலும் உள்ளது. ஆனால் இரண்டும் ஒன்றல்ல. முதலாளித்துவ நாடுகள், பொதுவுடைமை நாடுகளிலுள்ள ஜனநாயகத்தை ஒப்புக் கொள்வதில்லை. அதனைச் சர்வாதிகாரம் என்றே கூறுவார்கள்.

இதேபோல, பொதுவுடைமை நாடுகள், முதலாளித்துவ ஜனநாயகத்தை ஒப்புக் கொள்வதில்லை.

உண்மையில், ஜனநாயகம் என்பது மக்களின் ஆட்சி. சர்வாதிகாரம் என்பது மன்னரின் ஆட்சி. ஜனநாயகத்தை முதலாளித்துவ ராஜதந்திரம் என்கிற சோசலிச நாடுகள், அதனை முதலாளித் துவத்தின் முகமூடி என்றே சொல்வார்கள். அந்த ஜனநாயகத்தையும் சோசலிச நாடுகள் உப யோகித்து முதலாளித்துவத்தையே முறியடிக்கத் திட்டமிடுவார்கள்.

மார்க்சும், ஏங்கெல்சும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்று பேசியபோது, பாட்டாளி வர்க்கம் 95 சதவிகிதமும், சுரண்டும் முதலாளி வர்க்கம் 5 சதவிகிதமும் என வரையறுத்தார்கள். 95 சதவிகித மக்களின் ஆட்சி 5 சதவிகித முதலாளிகளின் மீது சர்வாதிகாரத்தைச் செலுத்துவது, சர்வாதிகாரமல்ல. அதுதான் மெய்யான ஜனநாயகம் என்கிறது மார்க்சியம்.

இந்தக் கட்டுரையில் மார்க்சும், ஏங்கெல்சும் ஜனநாயக வாக்குரிமையை எவ்வாறெல்லாம் சிந்தித்தார்கள் என்று நவம்பர், 2020 ‘Amity’ ஆங்கிலப் பத்திரிகையில் அனில் ராஜிம்வாலே எழுதி வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை வாசகர்கள் படித்து விமர்சிக்கலாம்.

– இ.ஆர்.

மார்க்சும் ஏங்கெல்சும் ஜனநாயகவாதிகளே!

இந்த ஆண்டு பிரடரிக் ஏங்கெல்ஸ் பிறந்த 200–வது ஆண்டு. பிரடரிக் ஏங்கெல்ஸ் பற்றி நினைத்தால், காரல் மார்க்சையும் இணைத்தேதான் சிந்திக்க வேண்டும். ஒருவர் இல்லாமல் மற்றொருவர் இல்லை. காரல் மார்க்ஸ் ஜெர்மானியர். பிரடரிக் ஏங்கெல்சும் ஜெர்மானியர்.


ஏங்கெல்ஸ் திருமணம் செய்து கொள்ளாதவர். அவருடைய தகப் பனார் லண்டனில் ஒரு தொழிற்சாலை முதலாளி. அதில்தான் ஏங்கெல்ஸ் பணி செய்தார். ஆனால், முதலாளிக்கு எதி ரான சிந்தனை கொண்டவர். காரல் மார்க்சைவிட இரண்டாண்டுகள் வயதில் இளையவர்.

சமீப காலமாகத்தான் பிரடரிக் ஏங்கெல்சின் சிந்தனைப் பங்களிப்புகள் உரிய முக்கியத்துவம் பெற்று வரு கின்றன. மார்க்சின் மகத்தான புகழ் ஏங்கெல்ஸ் மீது நிழலாகப் படிந்து, ஏங்கெல்ஸ் பெயரை மங்கலாக்கி விட்டது என்றே கூறலாம்.

ஏங்கெல்சும் பிரகாச வெளிச்சத்தில் இருக்க விரும்பியதில்லை. எப்போதுமே பின்புலத்தில்தான் அவர் செயல்பட விரும்பினார். அதற்குக் காரணம், காரல் மார்க்சைத்தான் எப்போதும், அவர் முன்னிலைப்படுத்த விரும்பினார். அத னால் வெளியார் யாரும் ஏங்கெல்சை இருட்டடிப்புச் செய்துவிடவில்லை.

உண்மையாகச் சொல்லப்போனால், மார்க்ஸ் எழுதிய படைப்புகள் அனைத்தும் ஏங்கெல்சின் படைப்புகளாகக் கூறினாலும் தவறில்லை. அவர்கள் இருவரும் இணைந்து செய்த சிந்தனைகள்தான் அப்படைப்புகள். இன்றைய சூழ்நிலைக்கும் அவை பொருத்தப் பாடுடையனவாகவே காணப்படுகின்றன.

அதற்கு உதாரணமாக, இன்றைய தினம் உலகம் முழுவதிலும் இந்தியா



காரல் மார்க்ஸ்

விலும் அதிகமாகப் பேசப்படுகின்ற, தேர்தலில் வாக்களிக்கும் ஜனநாயகம் பற்றி அவர்கள் இருவரும் அன்றைக்கே அதிகமாகப் பேசியவர்கள், எழுதியவர்கள்.

ஏங்கெல்சின் படைப்புகளில் அவருடைய அதிகமானப் பங்களிப்புகள் ஜனநாயகத் தளத்தில்தான் உள்ளன. அதுமட்டுமல்ல. அவை அனைத்தும் ஜனநாயக முறையில் நாடாளுமன்ற நிறுவனங்களின் மூலம், மாபெரும் மாற்றங்களைச் சந்தடியில்லாமல் செய்ய வேண்டும் என்பதுதான்.

ஆனால், நமது துரதிருஷ்டம் அவருடைய படைப்புகள் இத்தகைய பரிமாணம் உள்ளவை என்பதைப் பற்றி வெளிஉலகிற்கு அதிகமாகத் தெரியாமல் போய்விட்டது. அதுமட்டுமல்ல. இதுவரை அதிக கவனமும் அவற்றின் மீது செலுத்தப்படவில்லை. ஆனாலும் அவருடைய இந்த வகைப் படைப்புகள் அசாதாரணமானவை.

ஏங்கெல்ஸ் நமக்குப் போதித்தவை இன்றைக்கும் மிகவும் பொருத்தமுள்ளவையாக விளங்குகின்றன என்பதே உண்மை. உலகம் முழுவதும் ஜனநாயக நிறுவனங்களான நாடாளுமன்றம், சட்டமன்றம், நகரமன்றம், பஞ்சாயத்துகள் முதலியவை உள்ளன.

இந்த நிறுவனங்கள் எல்லாமே ஜனநாயக ரீதியில் செயல்பட வேண்டும் என்பதுதான் ஏங்கெல்ஸ் கொள்கை. அதனால், ஜனநாயக நிறுவனங்களை மக்கள் நலனுக்கு எப்படி உரியதாக்க வேண்டுமென்று புரட்சியாளர்களே கற்றுக் கொண்டார்கள்.

ஆனால், மக்கள் மத்தியிலுள்ள புரிதல் என்னவென்றால், மார்க்சும் ஏங்கெல்சும் ஜனநாயகப் போராட்டங்களுக்கு முக்கியத்துவம் தரவில்லை என்பதுதான். இது, மார்க்சையும் ஏங்கெல்சையும் பற்றிய தவறான புரிதல். இது முழுக்க முழுக்கத் தவறானது என்பதை நிறுவத்தான் வேண்டும்.

ஜனநாயக ரீதியானப் போராட்டங்களுக்கு மார்க்சும் ஏங்கெல்சும் அதிக அழுத்தம் தந்தவர்கள். அதுவும் குறிப்பாக வாக்கெடுப்புக்கு முக்கியத்துவம் தந்தவர்கள். அதிலும் குறிப்பாக, அனைவருக்குமான வாக்கெடுப்பு (Universal Suffrage) என்று பேசியவர்கள்.

ஏங்கெல்சின் சிந்தனையின்படி, கம்யூனிஸ்ட் அறிக்கை அனைவருக்குமான வாக்குரிமையைப் பிரகடனம் செய்தது எனப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஜனநாயக ரீதியான முறையில் அது நிகழ வேண்டும் என்றது.

கம்யூனிஸ்ட் அறிக்கை கூறுகிற தொழிலாளர் வர்க்கம் (Proletariat), ஜன நாயகத்திற்கு முதலிடம் தர வேண்டும் என்கிற அறிக்கையாகும். அதனால் ஏங்கெல்சும் மார்க்சும் இணைந்து அனைவருக்குமான வாக்குரிமையைத் தொழிலாளி வர்க்கத்திற்கும் அவர் களின் கட்சிகளுக்கும் உரியது என்றார்கள்.

அதுமட்டுமல்ல, அதை மேலும் விளக்கிக் கூறுகையில், கம்யூனிஸ்டு களின் மனப்பான்மை இதனை நோக் கியதாகத்தான் இருக்க வேண்டும் என் றார்கள். ஜனநாயக உரிமைகளுக்கானப் போராட்டங்களை மார்க்சும் ஏங்கெல் சும் வரவேற்றவர்கள்.

ஆனால், இதற்குமாறாக அதிகமான மக்களின் தவறானப் புரிதல் என்ன வென்றால், இவர்கள் இருவரும் ஆயுதப் போராட்டங்களின் ஆதரவாளர்கள் (Advocates of Armed Struggle) என்பது தான்.

அது உண்மை அல்ல. இவர்கள் இருவரின் நூல்களில் ஓர் இடத்தில்கூட இவர்கள் ஆயுதப் போராட்டங்களை ஆதரித்தவர்கள் என்பதைக் காண முடியாது.

1830 – 40–களில் இங்கிலாந்தில் வர லாற்றுச் சிறப்புமிக்க சாசன இயக்கம் தோன்றியபோது, இவர்கள் இருவரும் அதை வரவேற்றவர்கள். சாசன இயக் கம் இரண்டு அரசியல் கோரிக்கைகளை முன்வைத்தது. முதல் கோரிக்கை, நாளொன்றுக்கு 10 மணிநேர உழைப்பு. இரண்டாவது கோரிக்கை, பாட் டாளிகள் அனைவருக்கும் வாக்குரிமை.

மார்க்சும், ஏங்கெல்சும் இந்த இரண்டு கோரிக்கைகளையும் ஜன நாயகத்திற்கு மிகவும் முக்கியமானவை என்று மதிப்பீடு செய்தார்கள்.

ஏங்கெல்ஸ் எழுதிய ஒரு சிறந்த நூல் ‘இங்கிலாந்தில் 1845–இல் பாட்டாளி வர்க்கத்தின் நிலவரம்’ என்பதாகும். அதில் ஏங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்:– 1838–இல் மக்கள் சாசனம் உருவாக்கப் பட்டது. அதில் 6 கோரிக்கைகள் பட்டி யலிடப்பட்டன. அதில் ஒன்று, 21 வய துள்ள அனைத்துப் பாட்டாளிகளுக்கும் வாக்குரிமை. அதுவும் ரகசிய வாக்குரிமை.

அதன்படி எம்.பி. ஆவதற்குச் சொத்துத் தகுதி இருக்க வேண்டிய தில்லை. இதன்மூலம் சாசன இயக்கம் என்பது சமதர்மப் பாட்டாளி வர்க்கத் தின் இயக்கம் என்றே குறிப்பிட் டுள்ளார்.

அந்தச் சாசனத்திலுள்ள 6 கோரிக் கைகளும் அரசியல் சட்ட சீர்திருத்தங் களுக்கான முன்னோடிகளாகும். மார்க்சும் ஏங்கெல்சும் பாட்டாளி வர்க் கத்திற்கு இந்த ஜனநாயக நெறிமுறை களைத்தான் பகிரங்கமாக வலியுறுத் தினர். தொழிலாளிகளின் அமைப்பு கள் ரகசியமாகச் செயல்படுவதை அவர் கள் இருவருமே எதிர்த்தார்கள்.


பிரடரிக் ஏங்கெல்ஸ்

1836 முதல் 1844 வரை பரவிய அந்த இயக்கத்தின் போராட்டம் நீடித்தது. வேலைநிறுத்தங்கள், அடையாளப்

போராட்டங்கள் இங்கிலாந்து முழுவதும் நடந்தன. அவை அனைத்தும் பாட்டாளிகளுக்கு வாக்குரிமை வேண்டும் என்பதற்காகத்தான்.

உண்மையில், கையெழுத்து இயக்கம் கூட இதற்காகச் சில ஆண்டுகள் நடந்தது. அதனுடைய வரலாற்றுப் பதிவு என்னவென்றால், வாக்குரிமையை ஆதரித்து வாங்கப்பட்ட கையெழுத்து மனுக்களை, வண்டி வண்டியாக ஏற்றி லண்டன் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு சென்றார்களாம்.

1839–இல் இவ்வாறு கையெழுத்துப் போட்டவர்களின் எண்ணிக்கை 13 லட்சம். 1842–இல் 33 லட்சம். 1848–இல் 60 லட்சம். இதற்கான ஆதரவு தொடர்ந்து வளர்ந்தது. சுருக்கமாகச் சொன்னால், இங்கிலாந்து ஜனத் தொகையில் 20 சதவிகித மக்கள் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இதைப் பற்றி நீண்ட விவாதங்கள் நடந்தன. அவற்றில் ஜூலியன் ஹார்னே (Julian Harney), ஓ'கூனார் (O'Connor) முதலிய தலைவர்கள் இவற்றில் கலந்து கொண்டு பேசியுள்ளார்கள்.

1847–இல் ஏங்கெல்ஸ் தமது அறிக்கையில், சாசன இயக்கத்தை வரவேற்றுக் குறிப்பிட்டுள்ளார்.

மார்க்சும், ஏங்கெல்சும் இணைந்து பாட்டாளி வர்க்க அமைப்புகள் ரகசியமாகச் செயல்படுவதைக் கைவிட வேண்டும் என்றனர். 1836–இல் நியாய சங்கம் என்பது (League of the Just) இவ்வாறு ரகசியமாகத்தான் செயல்பட்டது. அதனுடைய ரகசியச் செயல்பாட்டைத்தான் இவர்கள் இருவரும் கைவிடக் கோரினார்கள். அந்த லீக்–தான் 1847–இல் கம்யூனிஸ்ட் லீக்–ஆக மாறியது.

அதிலுள்ள பல தலைவர்கள் – குறிப்பாக அரசுத் தலையீட்டை எதிர்ப்பவர்கள் (Anarchists) – ரகசியமாகப் பணி செய்வதற்குத் தலைமறைவு ஆகலாம் (Underground) எனவும் கருதினார்கள்.

தலைமறைவுக்கான தேவையே அப்போது இல்லை. அப்படியிருந்தாலும் கம்யூனிஸ்ட் லீக் அதைக் கடைப்பிடித்தது. இதைத்தான் மார்க்சும் ஏங்கெல்சும் மிகக் கடுமையாக விமர்சித்தார்கள். குறிப்பாக, ஜெர்மனியில் பாட்டாளி வர்க்கத்தின் சமூக ஜனநாயகக் கட்சியில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்பதைப் பற்றி ஏங்கெல்ஸ் ஆய்வு செய்தார்.

மார்க்சின் 'பிரான்சில் வர்க்கப் போராட்டம்' நூலுக்கான அறிமுக உரையில் இதைப் பற்றி ஏங்கெல்ஸ் குறிப்பிட்டுள்ளார். வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை என்பது, பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணம் என்று ஏங்கெல்ஸ் கருதினார். பாட்டாளி வர்க்கம் இதன்மூலமும் ஆட்சி அதிகாரத்திற்கு வர முடியும் என்பதோடு, சமதர்மக் கோட்பாட்டின் ஆட்சியை அமைக்க முடியும் என்று நம்பினார்.

அவர் மேலும் கூறுகையில், ஜெர்மன் பாட்டாளிகள் அனைத்து நாடுகளிலும் உள்ள தங்களின் சக பாட்டாளிகளுக்கும் இந்த வாக்குரிமை என்ற கூர்மையான ஆயுதத்தை வழங்கவும், அதைப் பயன்படுத்தவும் வழி காட்டியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏங்கெல்ஸ் மேலும் கூறுகையில், இந்த வாக்குரிமை ஆயுதம் ஜெர்மன் ஜனநாயக சமதர்மக் கட்சிக்கு ஆச்சரியப்படத்தக்க வளர்ச்சியை அளித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அதற்கான தரவுகளையும் தந்துள்ளார் : 1871–இல் 1 லட்சத்து 2 ஆயிரம் பாட்டாளிகள் வாக்களித்துள்ளனர். 1874–இல் 3 லட்சத்து 52 ஆயிரம் பேர். 1877–இல் 4 லட்சத்து 93 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளனர்.


இத்தருணத்தில், ஜெர்மனியில் 1878–இல் சமதர்மச் சட்டத்திற்கான எதிர்ப்புச் சட்டம் இடம்பெறத் தொடங்கியது. பாட்டாளிகளின் சமதர்ம ஜனநாயகக் கட்சி தடைசெய்யப்பட்டது. அதேபோல சமதர்மச் சிந்தனைகளைக் கொண்ட நூல்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

(அடுத்த இதழில் முடியும்)

– **ந.நி.**

கட்டுரை

புதிய அரசியலை நோக்கி...






டாக்டர் க. பழனித்துரை

நான் ஜெர்மனியில் இருந்த காலத்தில் அங்குள்ள ஜெர்மானியப் பேராசிரியர் ஒருவரைச் சந்தித்துப் பேசும் போதெல்லாம் அடிக்கடி அவர் என்னிடம் கூறும் சில கருத்துக்கள் என்னைப் பல நாள் யோசிக்க வைத்திருக்கிறது. அந்தக் கருத்துக்களை இங்குப் பகிர்வது பொது விவாதத்திற்கு உதவிடும் என்பதால், இங்கு இந்தக் கட்டுரையில் பதிவு செய்கிறேன்.

“இந்தியா ஒரு விதத்தில் மிகச் சிறந்த நாடு. அப்படி ஒரு நாடு உலகத்தில் இல்லை. அங்கு இல்லாததே இல்லை. ஆனால் அங்கு என்ன இருக்கிறது என்பதை வெளியில் இருக்கும் எங்களைப் போன்றவர்களுக்குத் தெரிகின்ற அளவுக்கு அங்கு வாழும் பெரும்பான்மை மக்களுக்குத் தெரிவதில்லை.



இந்தியாவின் சிறப்பு என்ன என்பது மட்டும் இந்தியர்களுக்குத் தெரிந்து விட்டால் அமெரிக்கக் கண்டமும், ஐரோப்பியக் கண்டமும் அவர்களுக்குக் கால் தூசுக்குச் சமமாகிவிடும்.

உங்கள் தேசத்திற்குச் சுதந்திரப் போராட்டத்தின்போது நல்ல தியாகத் தலைவர்கள் கிடைத்தார்கள். அவர்களின் எண்ணிக்கை எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு அதிக எண்ணிக்கையில் இருந்தது. அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் வாழ்க்கை விழுமியங்கள் (Values) என்பது உலகுக்கு வழிகாட்டும் தன்மை கொண்டவை.

எனவேதான் உங்கள் நாட்டை வெள்ளையர்களிடமிருந்து விடுதலை செய்ய முடிந்தது. ஆனால், அந்தத் தியாகத்தை புரிந்து போற்றி வாழத் தெரியவில்லை. அது மட்டுமல்ல,

அந்தத் தியாகங்களுக்கு வாரிசு கொண்டாடுகிறார்களே தவிர, தியாகத்தின் புனிதத் தன்மையைக் கடைப்பிடிக்க முடியவில்லை.

சுதந்திரம் பெற்ற உங்களுக்குப் பொருளாதாரத்தில் முன்னேற முடிந்தது. அதுவும் உலகமயப் பொருளாதாரம் வந்தபோது, உலகம் வியக்கும் வண்ணம் பொருளாதார வளர்ச்சி அடைந்தது.

ஆனால் எல்லா மக்களுக்குமான வாழ்க்கைக்கான அடிப்படை வசதிகளையும், மேம்பாட்டையும் கொண்டு வர முடியவில்லை. அதற்கு மிக முக்கியக் காரணம், மேற்கத்திய வளர்ச்சி முறைதான் உலகத்தில் சிறந்தது என்று கருதிப் பின்பற்றியதுதான். இதில் இந்தியா பொருளாதாரத்தை வளர்க்க முடிந்ததே தவிர, மக்களுக்கான மேம்பாட்டைக் கொண்டுவர இயலவில்லை.

அதன் விளைவுதான் – வாழ்விடத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க முடியவில்லை. அவர்கள் உருவாக்குகின்ற குப்பைகளை என்ன செய்வதென்றே தெரியாமல், குப்பைக்குள் வாழப் பழகிக் கொண்ட மக்களுக்குக் குப்பை மேலாண்மையைக் கற்றுக் கொடுக்கவில்லை.

ஆரோக்கியமான, மதிப்புமிக்க குழந்தையை எப்படிப் பெற்றெடுப்பது என்பதற்கான கல்வியை அவர்களுக்குத் தரவில்லை. குடி தண்ணீரை எப்படிப் பாதுகாத்து உபயோகப்படுத்துவது என்பதைக் கற்றுக் கொடுக்கவில்லை. உடலுக்கு ஆரோக்கியமான உணவை எப்படி எடுப்பது என்பதற்குப் பதிலாக, குடலுக்கும் நாவிற்கும்தான் உணவு என்பதாகப் புரிந்து வாழ அவர்கள் பழக்கப்படுத்தப்பட்டு விட்டார்கள். தன் உடல் பற்றிய பார்வை இல்லாமல், தன் உடல், தன் பொறுப்பு என்கின்ற பார்வையற்று வாழப் பழக்கப்படுத்தப்பட்டுவிட்டனர்.

இதன் விளைவுதான் இந்தியா பொருளாதார வளர்ச்சியில் 7.5, 8 மற்றும் 9 சதவிகிதத்தைத் தொட்ட போதும் மானுட மேம்பாட்டில் ஆப்பிரிக்கத் தேசங்களைவிட, மோசமான நிலையில் இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்பதை இந்தியாவைப் பற்றிப் படித்தவன், சுற்றியவன் என்ற முறையில் நான் கூறுவது என்னவென்றால், உங்கள் அரசியல்வாதிகளுக்கு வாக்குஅரசியல் தெரிந்த அளவிற்கு நாட்டின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு அரசியல் தெரியவில்லை.

உங்கள் அரசியல்வாதிகள் பிரச்சனை இல்லாதவற்றைப் பிரச்சனை ஆக்கி, மக்களைத் திசை திருப்பும் ஆற்றல் பெற்றவர்கள். இதில் அவர்களை வெல்ல உலகத்தில் யாராலும் முடியாது. எண்ணற்ற யுத்திகளைப் பயன்படுத்தி, வாக்குகள் பெற்று, ஆட்சிக்கு வந்தவர்கள் முன்னேற்றப் பாதையில் ஆளுகையை, ஆட்சியை, அரசியலைக் கொண்டு செலுத்த முடியவில்லை.

அன்றாடம் வருகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவர்களாகவே செயல்பட்டு வருகின்றனர். இந்த நிலையில்தான், வெள்ளைக்காரர்கள் உருவாக்கிய நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றே உங்களுக்குக் கை கொடுக்கிறது, உங்கள் நாட்டை ஒற்றுமையாக வைத்துக் கொள்வதற்கு.

அடுத்து, எளிதாக வாக்குகளைப் பெற மக்களின் பொறுப்புக்களை அரசின் பொறுப்புக்களாகவே கூறி, பொதுமக்களைப் பார்வையாளர்களாகவே வைத்துவிட்டனர். மக்களின் முன்னேற்றம் என்பது மக்கள் கையில் இருப்பதாக அவர்களிடம் கூறவில்லை. மாறாக அரசிடம் மட்டுமே இருக்கிறது என்று கூறி, மக்களை அரசிடமிருந்து தூரத்திற்குக் கொண்டு சென்றுவிட்டனர். அரசியல்வாதிகள்,

மக்களுக்கும் அரசுக்கும் இடையில் தரகர்கள் போல் செயல்பட்டனர். மக்கள் எந்த அரசையும் கண்காணிக்கப் பழக்கப்படுத்தவில்லை. கண்காணிக்கப்படாத எந்த அரசும் மக்களுக்காகச் செயல்படாது.

அரசை யார் பின் தொடர்கிறார்களோ, அவர்கள்தான் பெரும் பயன் அடைவார்கள். அப்படித்தான் உங்கள் நாட்டிலும் நடைபெறுகிறது. இதன் விளைவாக, அடிப்படையில் குடிமக்களாகத் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளைக்கூட என்வென்று தெரியாத அளவுக்கு மக்களை மழுங்கடித்து விட்டார்கள்.

இதைவிட முக்கியமானது, இந்தியாவின் முகம் எது? மூலம் எது? என்று கூடப் புரியவைக்காமல் மேற்கில் இருப்பதும் (ஐரோப்பா), வடக்கில் (அமெரிக்கா) இருப்பதும்தான் வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம், வாழ்க்கை, மக்களாட்சி என்று நாங்கள் உங்களை மூளைச்சலவை செய்வதைவிட, நீங்களே உங்கள் மக்களைச் செய்துவிட்டீர்கள்.

இந்தியாவுக்கென்று ஒரு வளர்ச்சி, வரலாறு உண்டு. நாகரீகப் பண்பாடு, இலக்கிய வரலாறு உண்டு. அவற்றின் மேன்மை எங்களுக்குப் புரியும்போது, ஏன் உங்களுக்குப் புரியவில்லை. எங்களைப் போன்றவர்களுக்கு இந்தியா ஒரு பிரமிப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும்.

கலாச்சாரம், உணவு, உடை, கலை, ஆன்மீகம், மொழி என எல்லாவற்றிலும் வித்தியாசங்களைக் கொண்ட சிறப்புமிக்க நாடு இந்தியா. இவ்வளவு வித்தியாசங்களுடன், வேறுபாடுகளுடன், ஏற்றத்தாழ்வுகளுடன் ஒரே நாடாக மக்களாட்சியுடன் விளங்குவது மிகப்பெரிய ஆச்சரியம்.

இந்தியாவின் மூலத்தை நாங்கள் புரிந்து கொண்டு பார்க்கும்போது, இந்தியர்களுக்கு இது ஏன் புரியவில்லை? புரிய வைக்கவில்லை? காரணம், எல்லா நிறுவன மற்றும் கொள்கைக் கட்டமைப்புக்களும் இந்தியாவில் மேற்கத்திய மயத்தைத் தழுவி வாழும் முறைமையைத்தான் வியாபிக்க வைத்திருக்கின்றன.

மக்கள் விழிப்புடன் செயல்படும் வரை மேற்கத்திய அமைப்பு முறைகள் மக்களுக்குச் சேவை செய்யும். மேற்கத்திய நாடுகளில் மத்திய தர வர்க்கம் அதிகம் வாழ்வதால், அவர்கள் அரசைக் கண்காணிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவார்கள்.

ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் பெருமளவில் ஏழைகள் இருப்பதால், அரசாங்கத்தைக் கண்காணிப்பது என்பது இயலாத காரியம். இந்தச் சூழலில், மேற்கத்திய முறை வளர்ச்சி என்பது மக்களைச் சுரண்டிட உதவுமேயன்றி மேம்படுத்திட உதவாது. குறிப்பாக ஏழைகளை அரசு மதிக்காது. மாற்றாக ஏமாற்றும்.

இந்தியாவில், தொலைபேசியைக் கண்டுபிடித்தவர் பெயர் பாமர மக்களுக்குத் தெரியுமா? மின்சாரத்தைக் கண்டுபிடித்தவரைத் தெரியுமா? தெரியாது. ஆனால், சாதாரண மக்கள் அவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

வள்ளுவரைத் தெரியுமா? காந்தியைத் தெரியுமா? பாரதியைத் தெரியுமா? அனைவரையும் தெரியும். ஆனால் அவர்கள் கூறிய கருத்துக்கள்

கொடிய மிருகம்?

“கொடிய மிருகம் எது?” என்று தன்னுடைய குரு அரிஸ்டாட்டிலிடம் கேட்டார் அவரது சீடர்.

அதற்கு அரிஸ்டாட்டில், “நாக்குதான்! ஒருமுறை அதை அவிழ்த்துவிட்டால், திரும்பக் கட்டுவது கடினம்!” என்றாராம்.

– நெ. இராமன்

மக்களின் வாழ்க்கைக்குள் செல்லாது. இந்த முரண்பாட்டை இந்தியாவில் அதிகமாகப் பார்க்க முடிகிறது. இதன் விளைவுதான் – நீங்கள் உங்கள் முறையில் வாழாமல் எங்கள் முறையில் வாழ்கின்றீர்கள்.

நாங்கள் கண்டுபிடிக்கும் அத்தனையையும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான அனைத்து முறைமைகளையும் நடைமுறைப்படுத்தி விடுவோம். அவைதான் எங்கள் பொருளாதாரம் வளர்வதற்குக் காரணம். அதனால் எங்கள் மக்கள் அடிப்படை வசதிகள் அனைத்தும் கிடைக்கப் பெற்று, பொறுப்புணர்ந்த குடிமக்கள் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

ஆனால் எங்கள் மேற்கத்திய மயத்தை, நவீனமயத்தை பின்பற்றிய நீங்கள், இன்னும் ஏன் வளர்ச்சியடைய முடியவில்லை என்பதற்குத்தான் விடைகாண முடியவில்லை. அதை உற்று நோக்கியவர்கள், இது ஆளுகையின் தோல்வி என்று காரணம் கற்பிக்கின்றனர்.

தற்போது மேற்கு உலகில் மானுட வளர்ச்சி, மனித மேம்பாடு என்பதில் தான் சிந்தனைப் போக்கு இருக்கின்றது. ஆனால் இந்தியாவில்தான் பொருளாதார வளர்ச்சி என்பதில் எல்லையற்ற அளவுக்குச் சிந்தனை செலுத்தப்படுகிறது.

இந்தியா இந்தியத்துவத்துக்குள் நுழைந்தால், உலகுக்கு வழிகாட்டும் ஒரு வாழ்க்கை முறையை, இந்திய அறிவின் அடிப்படையில் உருவாக்கி வாழ்ந்து சாதிக்க முடியும். ஆனால் அந்தத் திசையை நோக்கி நகர்வதற்கான சூழல் தெரியவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்து 73 ஆண்டுகளில் மக்கள் தொகை 130 கோடியாக உயர்ந்துள்ளது. இந்த 130 கோடியில் 80 கோடி மக்கள் ஏழைகளாக, அரசின் உதவியை நாடி நிற்கும் மக்களாக வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாரம் என்பது அரசின் தோள்களில் ஏற்றப்பட்டுள்ளது. உலக வங்கி கூறியதுபோல் 2000–க்கும் மேற்பட்ட வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தியதின் விளைவு 50 கோடி மக்களைத்தான் தொட முடிந்ததா?" என்பதுதான் அந்த ஜெர்மன் நண்பரின் கேள்வி.

இதற்கு விடைகாண வேண்டுமானால், இந்தியா முதலில் மக்களைத் தயார் செய்ய வேண்டும். அதற்கு ஒட்டுமொத்தத் தேர்தல் அரசியலிலிருந்து மேம்பாட்டு அரசியலுக்கு மாற வேண்டும்.

மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு மானுட மேம்பாடு, சூழலியல், பல்லுயிர்ப் பெருக்கம், உயிர்ச் சூழல், வாழ்வியல், கல்வி, திறன் வளர்ப்பு, கிராமப்புறத் தொழில் முனைவு முதலியவற்றை அரசியல் விவாதப் பொருளாக மாற்றி, மேம்பாட்டு அரசியல் செய்திட அரசியல்வாதிகள் முன்வர வேண்டும்.

மக்களாட்சி, மக்கள் அரசியலில் பக்குவம் பெற உதவிடும் ஒரு கருவி மற்றும் முறைமை. அதைப் பயன்படுத்தி மக்களைக் குடிமக்களாக மாற்ற முனைந்திட ஒரு புதுமை அரசியல் கட்சி, அரசியலைத் தாண்டி உருவாக வேண்டும். அரசியல் களத்தில் புதுமைகளை உருவாக்க அறிவு ஜீவிகளின் துணை வேண்டும். இன்று அரசியல் சந்தைச் செயல்பாட்டாளர்கள் துணை கொண்டு கட்சிகளைச் சந்தைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. அதன் விளைவுதான் வாக்குகளும் சந்தைப்படுத்தப்பட்டு விற்பனைக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தச் சூழலை மாற்றுவதற்கான ஒரு பொது விவாதத்தை நம் அறிவு ஜீவிகளும், அரசியலில் புதுத் திசை வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசியல் கட்சிகளும், நடுநிலைப் பேணும் ஊடகங்களும், பொதுக் கருத்தாளர்களும் இணைந்து செய்திட வேண்டும். அதுதான் இன்றைய தேவையாக இருக்கிறது.

●

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 38 ஜனவரி 2021 இதழ் : 12

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும்,
சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ
ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள்
அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர,
பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

தினை இனிப்புப் பொங்கல்

தேவையானவை : *தினை அரிசி : 100 கிராம், பாசிப் பருப்பு : 25 கிராம், வெல்லம் : 200 கிராம், முந்திரி : 20 கிராம், உலர்ந்த திராட்சை : 20 கிராம், ஏலக்காய் : 5, நெய் : 50 கிராம், உப்பு : ஒரு சிட்டிகை.*

செய்முறை :

1. ஏலக்காயைத் தோல் நீக்கித் தூளாக்கவும். முந்திரிப் பருப்பு, திராட்சையைச் சிறிதளவு நெய்விட்டுப் பொன்னிறமாக வறுக்கவும்.
2. தினை அரிசி, பாசிப் பருப்பு இரண்டையும் தனித்தனியே வறுத்து, நன்றாக ஊற வைக்கவும்.
3. அடிக்கனமான பாத்திரத்தில் வெல்லத்தைப் போட்டு, தண்ணீர்விட்டுப் பாகாகக் காய்ச்சவும்.
4. தினை மற்றும் பாசிப் பருப்பைத் தண்ணீர் விட்டு வேக வைக்கவும். நன்றாக வெந்ததும், அதில் வெல்லப் பாகை ஊற்றிக் கிளறி, பொங்கல் பதம் வந்ததும் முந்திரி, திராட்சை, ஏலக்காய், உப்பு சேர்த்து நன்றாகக் கிளறி, அடுப்பிலிருந்து இறக்கவும்.

சுவையான, சத்தான 'தினை இனிப்புப் பொங்கல்' தயார்.

– எஸ். கார்த்திகா,
காஞ்சிபுரம்.

ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு இரண்டு அம்சங்கள் முக்கியமானவை. ஒன்று, மின்சாரம். இன்னொன்று எஃகு.

ரஷ்ய நாட்டின் தந்தை லெனினிடம் ஒரு நிருபர் ரஷ்யாவைப் பற்றிக் கேள்வி கேட்டார். அப்போது நேருஜிக்குத் தெரிந்திருக்கலாம். ஏனெனில், இந்தியாவில் அவர் உருவாக்கிய ஐந்தாண்டுத் திட்டம் என்பது ரஷ்யாவில் லெனின் அமல்படுத்திய ஏழாண்டுத் திட்டங்களைப் போன்றது.

ஆனால் பிரதமர் மோடிஜிக்கு லெனின் சொன்ன செய்தி தெரி

உலகத்தில் முதலிடம் பெற்ற சூரிய மின்சக்தி




லெனின் கூறினார், “இனிமேல் ரஷ்யா என்று கேட்காதீர்கள். ஏனெனில், மின்சாரம் + எஃகு இரண்டையும் சேர்த்தால் வருகிற விடைதான் ரஷ்யா (Steel + Power = Russia)” என்றார்.

இந்தச் செய்தி ஒருவேளை யாமல் போயிருக்கலாம். ஆனாலும் லெனினைப் புரிந்துகொண்ட நேரு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் எப்படிப் பொருளாதாரத்தை வளர்க்க முயற்சி செய்தாரோ, அதேபோல லெனின் செய்தியைத் தெரிந்தோ, தெரியாமலோ பிரதமர் மோடி சூரிய

மின்சார உற்பத்தியில் புரட்சி செய்திருக்கிறார். அதுவும் சுற்றுச்சூழலுக்குக் கேடு வராத மரபுசாரா மின்சார உற்பத்தி செய்ய அடிக்கல் நாட்டியிருக் கிறார்.







மேலும் அதிகமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இந்த மின்சார உற்பத்தியைக் குஜராத் எல்லையிலுள்ள கட்ச் பிரதேசத்தைத் தொட்டுக் கொண்டிருக்கிற பாகிஸ்தானுக்குத் தனது பலத்தைக் காட்டும் வகையில், பிரதமர் மோடி சூரிய மின்சக்தி நிலையத்தை அங்கே உருவாக்க 2020 டிசம்பர் 15 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்த மின்சார உற்பத்தியின் அளவு என்ன தெரியுமா? 30 ஆயிரம் மெகாவாட். இதில் 1 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் பரப்பில் காற்றாலை மின்சார நிலையங்களையும் உருவாக்க அடிக்கல் நாட்டியுள்ளார்.

இது முழுக்க முழுக்கக் குஜராத் மாநில அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை. அரசுக்கு ஆதரவளிக்க அதானி தொழில் நிறுவனமும், காற்றாலையில் புகழ்பெற்ற சுஜ்லான் (Suzlon) *நிறுவனமும் முன்வந்துள்ளன.*

30 ஆயிரம் மெகாவாட் என்பதை தமிழ் வாசகர்கள் எளிதாகப் புரிந்து கொள்ள ஒன்றைக் கவனிக்கலாம். கடலூருக்கு அருகிலுள்ள நெய்வேலி அனல் மின்சாரத்தின் (Thermal Power) *உற்பத்தி அளவு நாள் ஒன்றுக்கு 2500 மெகாவாட். அப்படியானால் 12 நெய்வேலி மின் உற்பத்தி நிலையங்களுக்குச் சமமாகும் இது.*

உலகத்திலேயே அதிகச் சூரிய மின்சார உற்பத்தி நிலையமாக இது திகழப் போகிறது. கட்ச் மாவட்டம் உலகம் முழுவதும் இனிப் பேசப்படும். அதுமட்டுமல்லாது, கட்ச் மாவட்டம் கடற்கரையில் உள்ளது. கடல் நிறைய உப்புத் தண்ணீர். உப்புத் தண்ணீரைக் குடிநீராக மாற்ற வேண்டுமானால், அந்த உப்பின் அளவை பூஜ்யமாக்க வேண்டும். அதற்கான ஆலை அங்கே அமைக்கப்பட வேண்டும்.


உப்பின் அளவை நீக்கும் முறைக்கு (Desalination) *அதுவும் தானியங்கி இயந்திரத்தின் மூலமாகச் செய்வதற்கு, அதற்கான அடிக்கல்லை பிரதமர் மோடி நாட்டியுள்ளார். இதன் மூலம் நாளொன்றுக்கு 10 கோடி லிட்டர் கடல்நீர் சுத்தமான குடி தண்ணீராக மாற்றப்படும்.*

சூரிய மின்சக்திக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டியிருக்கிறார். அவருடைய ஆட்சி இன்னும் நிச்சயமாக நான்கு ஆண்டுகளுக்கு நீடிக்கும். அதற்குள் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஒவ்வொரு மாநிலமும் இது போலச் செயல்பட்டால், இந்தியாவுக்கு ராணுவ பலம் பொருளாதாரத்தின் மூலம் சித்திக்கும் என்பதில் சந்தேகமில்லை.

– ந.நி

கட்டுரை



அத்வைதமும் அருள்தந்தையும்

அருள்நிதி எஸ்.கே.எம். மயிலானந்தன்
தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்

உலகில் வாழும் மக்கள் பெரும்பாலானோருக்கு இறை நம்பிக்கை இருக்கிறது. பலரும் அந்தந்த மதம் சார்ந்த ஆலயங்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்து வருகிறார்கள். நம்பிக்கையோடு அவ்வாறு வழிபாடு செய்பவர்களில் பெரும்பான்மையினருக்கு ஆன்மிக ஞானம் குறைவுதான்.

அத்வைத ஞானம் பாரத தேசத்தில்தான் தோன்றியது. வேதத்தின் அங்கமான உபநிடதங்கள் ஆன்மிக ஞானத்தைப் பல்வேறு வகைகளில் விளக்கினாலும், மக்களிடையே அது பரவலாகச் சென்று சேரவில்லை.

பெரும்பாலும் மதத்தைச் சார்ந்து இந்த விளக்கம் கொடுப்பதினால், மதஉணர்வே மக்களிடையே படிப்படியாகப் பரவி வருகிறது. அதனால் இறைநம்பிக்கை உடையவர்கள்கூட, மதத்தின் காரணமாகச் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் தமிழகத்தில் நம் காலத்தில் அவதரித்தவர். உலக சமுதாய சேவா சங்கத்தை நிறுவியவர். அத்வைதத் தத்துவத்தை எவ்வித மதக்கலப்பு இல்லாமலும், சடங்கு சம்பிரதாயங்கள் இல்லாமலும் விஞ்ஞான ரீதியாக விளக்கியுள்ளார்.

அதுமட்டுமில்லை. மனவளக்கலை வழியாக இறை உணர்வுபெற்று நிறை வாழ்வுக் கல்வியையும் பயிற்சியையும் கொடுத்துள்ளார்கள். அருட்தந்தையின் கல்விப் பயிற்சியைப் பரப்பியதால், அவர் மறைவிற்குப்




ஆதிசங்கரர்

பிறகு, இச்சங்கம் சுமார் 500 மடங்கு வளர்ச்சி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அவர் விளக்கிய அத்வைதத் தத்துவத்தை நான் விளங்கிக் கொண்டவாறு, அதனை அருட்செல்வரின் 'ஓம் சக்தி' பத்திரிகையில் எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆன்மிகம் என்றாலே 'ஆன்மா' பற்றியது என்று ஞானிகள் விளக்கியுள்ளார்கள். தத்துவ ஞானம் என்பதற்கு 'உண்மை அறிவு' என்றே பொருள்.

ஆன்மீகக் கல்வியில், 'நான் யார்' என்ற தத்துவமே முதலில் விளக்கப்படுகிறது. நான் என்பது உடலோ, மனமோ அல்ல. உடலையும் மனதையும் கருவிகளாகக் கொண்டு இயங்குகின்ற ஆன்மாதான் இந்த "நான்." இதே ஆன்மாதான் பேராற்றலாக இந்தப் பிரபஞ்சத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறது.

அருள்தந்தை, இருப்பாக இறைநிலையையும் இயக்கமாகப் பேராற்றலையும் விஞ்ஞான ரீதியாக நன்கு விளக்கிச் சொல்கிறார்.

பிரபஞ்சம் ஒழுங்காக இயங்கிக் கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தை அவ்வாறு இயக்கிக் கொண்டிருக்கும் ஆற்றல் எது? அந்த ஆற்றலை அளிக்கக் கூடியது பிரம்மம் அல்லது ஆத்மா. அது நானாகவே இருக்கிறேன்.

அப்படியென்றால், இந்த நான் யார்? மகான்களால் அதற்குக் கொடுக்கப்பட்ட பதில்களைத் தொகுத்துப் புரிந்துகொள்வதே, 'தத்துவ அறிவு' என்பார் அருட்தந்தை.

இறைநிலையே அனைத்துமாக இருக்கிறது. அந்த அனைத்தில் மனிதனும் அடக்கம். இந்த இறைநிலையை அறிவு புரிந்து கொண்டதற்குள் எத்தனையோ மாற்றங்கள் நிலவுலகில் நிகழ்ந்துவிட்டன. முடிவில் கண்ட தெளிவு, இந்த 'இறைவெளியே தெய்வம்' என்பதாகும்.

அது அரூபமானது. அது எங்கும் நிறைந்தது. அதிலிருந்துதான் விண் முதல் அனைத்தும் தோன்றின. இறைவெளியிலேயே அவை மிதந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. உலகில் வாழும் எல்லோரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள்தான் என்ற கருத்து இதன்மூலம்தான் பரவியது.

வேதாந்தம் : ஆதிகாலத்தில் மனிதர்கள் தங்கள் வாழ்வில் எவற்றையெல்லாம் இறைவன் என்று மதித்தார்களோ, அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாய் ஆராய்ந்தனர். முடிவில், 'வெட்டவெளியே இறைவன்' என முடிவு கண்டார்கள். அவ்வாறு அவர்கள் கண்டு உரைத்தவைகளின் தொகுப்பே வேதாந்தமாகும்.

சுருக்கமாகச் சொன்னால், பிரம்மத்தை மையமாக வைத்துக் கொண்டு, பிரபஞ்ச இயக்கத்தை விளக்க முயலும் ஒரு தரிசனமே வேதாந்தம்.

வேதம் என்பது முன்பகுதி. அது தர்மத்தைப் பற்றியது. வேத அந்தம்

பின் பகுதி. அது பிரம்மத்தைப் பற்றியது. வேதத்தின் இறுதிப் பகுதியான உபநிடதங்கள் இந்த இறைத் தத்துவத்தைப் பல்வேறு கோணங்களில் விளக்கியுள்ளன.

தத்துவம், வேதாந்தம், விஞ்ஞானம் என்ற மூன்று பிரிவுகளில், தத்துவம் இயற்கையின் உண்மைகளைப் பல்வேறு தரமாகப் பிரித்துப் பேசுகிறது. தத்துவத்தைத் தெளிவாக்குவதில் வேதாந்தம் முதலிடத்தை வகிக்கிறது.

“விண்ணோட்டம் வரை ஆர்வம் மீறிக் கண்ட
விளக்கமே வேதாந்தம். சுக துக்கத்தை
உண்ணோட்டத்தால் ஆய்ந்தோன் ஒடுங்கி, மோனம்
உணர்ந்தநிலை சித்தாந்தம்”

என்பார் அருள்தந்தை.

இந்திய மதங்கள் எல்லாவற்றிலும் வேதாந்தத்தின் தாக்கம் மிக ஆழமாக உள்ளது. எந்த ஒரு மத வழிபாட்டு மரபையும் அதன் சடங்கு முறைகளையும், நம்பிக்கைகளையும் தாண்டி உட்புகுந்தால், வேதாந்தமே வெளிப்படும்.

உலகம் பொய். அனைத்துக்கும் மூலப்பொருள் ஒன்றே. அதுவே பிரம்மம் என்பது வேதாந்தம். பிரம்மத்தை ‘சத்’ என்றும், மற்ற அனைத்தையும் ‘அசத்’ என்றும் பிரம்மம் கூறுகிறது. வேதாந்தத்தில் உயிரற்றவை எனப்படுவதில் நித்தியத்துவம் கிடையாது. உண்மையான நித்தியப் பொருள் ‘ஆன்மா’ மட்டுமே என்கிறது வேதாந்தம்.

உள்ளது ஒரே ஓர் ஆத்மாதான். அது பரமாத்மா மட்டுமே ஆகும். பரமாத்மாவே பல ஆத்மாக்களாகத் தோன்றுகிறது. இந்த ஒன்றைப் பலவாய்க் காண்பது அஞ்ஞானம். யாவும் ஒன்று எனக் காண்பது ‘ஞானம்’ என்கிறது வேதாந்தம்.

ஆன்மா வேறு; அறிவு வேறு அல்ல. ஆன்மாவின் வடிவமே அறிவு.



ஸ்ரீ ராமானுஜர்

அறிவே ஆன்மா. ஆன்மாவே அறிவு. அறிவுக்கு வெளியே வேறொரு பொருள் கிடையாது. படைப்பை, வேதாந்திகள் உண்மை எனக் கருதுவதில்லை. வேதாந்தம், உலகம் உண்மையல்ல என்கிறது. அது ஒரு தோற்றம் மட்டுமே. எல்லாமே மாயை என்கிறது.

பிரம்மமே உலகமாகத் தோன்றுகிறது. பிரம்மமே சீவன்களாகவும் ஆனது. இருந்தபோதிலும் சீவனுக்கு அறியாமை என்பது உண்டு. பிரம்மமே சீவன்களாக ஆனதற்குக் காரணம் மாயைதான்.

ஏகமான பிரம்மத்தோடு சேர்வதே மோட்சம். அதற்கான வழி ஞானமே ஆகும். ஞானத்திற்கு நல்லொழுக்கமும், கடவுள் வழிபாடும் அவசியம்.

வேதாந்தத்தின் மூன்று பிரிவுகள் உள்ளன. அவை அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம்.

அத்வைதம் – ஒருமை : இந்தியத் தத்துவ மரபில் வேதகால முனிவர்களும், ரிஷிகளும் உலகப் பொருட்கள் அனைத்தும் மாற்றத்திற்கு உட்பட்டவை என்பதை அறிந்தனர். அவற்றில், மாறாமல் நிற்கின்ற பொருள்

ஏதேனும் இருக்கிறதா என்றும் ஆராய்ந்தனர். அகத்தவத்தாலும் (Intuition), ஆழ்ந்த ஆராய்ச்சியாலும் அத்தகைய பொருள் ஒன்று இருத்தல் வேண்டும் என்றும் உணர்ந்தனர். 'இறைநிலை' என்று அப்பொருளை அழைத்தனர்.

உலகம், புலன்களுக்கு எட்டுகிறது. இறைநிலை புலன்களுக்கு எட்டாது. இவ்விரண்டுக்கும் உள்ள தொடர்பு யாது?

இதுபற்றிய இந்திய தத்துவத் தளத்தில்தான் அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.



அத்வைதம் என்றால் இரண்டு இல்லை. ஒன்று என்று பொருள். இறைநிலை என்பது ஒன்றே என்பதுதான் அக்கருத்து.

வேதாந்தத்தை விளக்கும்போது, கடவுளின் இருமை இன்மையை வலியுறுத்துகிற கொள்கைக்கு அத்வைதம் எனப் பெயர். அத்வைதத்தின் உயிர் நாடியான கொள்கை பிரம்மம்தான். அது ஆன்மாதான். இருப்பது அது ஒன்றே. உலகம், உண்மையில் இல்லை. அது வெறும் தோற்ற மயக்கம் மட்டுமே.

பிரம்மசூத்திரத்திற்கு விளக்கம் அளிக்கத் தலைப்பட்ட அறிஞருள் தலைசிறந்தவர், கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர். கேரள மாநிலத்தில் காலடியில் பிறந்த அவர், 32 ஆண்டுக் காலமே வாழ்ந்தவர். சங்கரர் எழுதிய "சங்கர பாஷ்யம்" மிக முக்கியமான நூலாகும்.

சங்கரர்தான் உபநிடதத்தின் மூலக் கொள்கையாக அத்வைதத்தை நிறுவியவர். அத்வைதம் என்னும் சொல்லை அ+த்வைதம் எனப் பிரித்துப் பொருள் உணரலாம். "அ" என்றால் "இல்லை." த்வைதம் என்றால் இரண்டு. இரண்டு இல்லை. ஒன்று என்பதே இதன் பொருள். பிரம்மம் என்பது ஒன்றே. சீவன்களும் பிரம்மம் ஆகும். அதுவே உண்மையானது. நிலையானது.


"பரமாத்மா எனும் ஒரு பொருளைத் தவிர, வேறு எதுவுமே இல்லை. நம் பார்வைக்குப் புலப்படும் இந்த உலகமும், உயிர்களும் உண்மையில் இல்லை. அவை பரமாத்மாவின் தோற்ற மயக்கங்களே ஆகும்.

உள்ளது ஒன்றே. அதுவே முதற் பொருளாகிய பிரம்மம். அதனை "இது அன்று, அது அன்று" என்று அனைத்தையும் மறுத்துக் கொண்டே போகலாம். பிரம்மத்தைத் தவிர வேறு ஒன்றும் உண்மை இல்லை. புலன்களால் உணரப்படுகின்ற, அறிவால் அறியப்படுகின்ற எல்லாமே பிரம்மமேயாகும். அது எங்கும் நிறைந்திருப்பதாகும். தூய அறிவாய் இருப்பது அதுவே" என்பது சங்கரருடைய கருத்து.

த்வைதம் – இருமை : த்வைதம் என்றால் இரண்டு.

ஆன்மாவும், இறைவனுமே அந்த இரண்டு எனக் குறிப்பிடப்படுகின்றன. ஆன்மா வேறு, இறைவன் வேறுதான். இரண்டென்கிற நிலையை நீங்கி, ஒன்றெனும் நிலையை இவை ஒருபோதும் அடைவதில்லை. இதனை வலியுறுத்தியவர் மத்வர். மத்வர் விளக்கிய பிரம்ம மெய்ப்பொருள் "த்வைதம்" எனப் பலராலும் வழங்கப் பெறுகிறது.

இருமை இன்மை – விசிஷ்டாத்வைதம் : தன்னுணர்வு இல்லாத உயிரற்றவை, தன்னுணர்வு கொண்ட உயிருள்ளவை என்ற இரண்டு உள்ளன. அந்த இரண்டுடன் மூன்றாவதாகத் தன்னை விட்டுப் பிரியாத, எப்போதும் ஒன்றாகவே உள்ள பிரம்மம் உள்ளது. இதுவே விசிஷ்டாத்வைதம் எனப்படுகிறது.


பாரதியார்

‘சித்து’ உயிர்ப்பொருள். ‘அசித்து’ உயிரில்லாத பொருள். இவ்விரண்டினையும் உடலாகக் கொண்ட, உயிரான பரம்பொருள், இரண்டில்லை – ஒன்றே என்கிறது விசிஷ்டாத்வைதம்.

அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் – மகரிஷியின் கருத்து : தேங்காய்க்குள் தண்ணீர் இருக்கிறது. எலுமிச்சம் பழத்திற்குள் நீர் இருக்கிறது. அதைச் சாறு (Juice) என்கிறோம். சில இலைகளில்கூட நீர் இருக்கிறது. ஒவ்வொன்றிலிருந்து கிடைக்கும் நீருக்குத் தனித்தனிப் பெயர்களை இட்டுள்ளோம்.

நீரின் மூலம் என்ன? தேங்காய்க்குள் எப்படித் தண்ணீர் வந்தது? பூமியிலிருந்து தானே. அப்படியானால், பூமிக்கு எப்படி நீர் வந்தது? கடல்நீர் ஆவியாகி மேகமாக மாறி மழையாகப் பெய்ததால், நிலத்திற்கு நீர் வந்தது.

இதே தத்துவம்தான் எலுமிச்சம் பழத்திலுள்ள நீருக்கும் இலைகளில் உள்ள நீருக்கும் பொருந்தும். தேங்காய்க்குள்ளும், எலுமிச்சம் பழத்திற்குள்ளும், இலைகளுக்குள்ளும் எல்லாவற்றிலும் உள்ளது கடல் நீர்தான். அதுபோல் அனைத்திற்கும் மூலம் ஒன்றே எனக் காண்பதுதான் அத்வைதம்.

பரிணாம வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை எல்லாம் மறந்துவிடாமல், மூலத்தை மட்டுமே பார்க்க வேண்டும் என வேதாத்திரி மகரிஷி குறிப்பிட்டிருக்கிறார்.

“கற்கண்டு என்ற ஒரு வார்த்தை
சொன்னால்
கரும்பு ரசப் பக்குவத்தின் சரித்திரமாகும்
கற்கண்டைக் கரும்புரசம் என்றால் அஃது
கருத்துக்கு அத்வைத தத்துவம்
போல்
கற்கண்டு கரும்புரசம் வேறு வேறாய்க்
காட்டுவது துவிதநிலை விளக்கம் ஒக்கும்
கற்கண்டு கரும்புரசம் இரண்டும் போலாம்
கடவுளும் மற்றனைத்துருவும் கருத்துணர்ந்தால்”

(ஞா.கள.1392)

அந்தந்த நேரத்தில் அந்தந்த இடத்திற்கு ஏற்றார்போல, நீர் நிலைபெற்றிருக்கும் தன்மைக்கேற்ப அதற்குப் பெயரிட்டு அழைக்கிறோம். எல்லா நீரும் சூரியனின் வெப்பத்தால் ஆவியாக மாறுவதைப் பார்க்கிறோம். நீர் ஆவியாகி, பின்னர் மழையாகப் பொழிகிறது. ஒன்றே பலவாக மாற்றம் பெற்றுள்ளது என்பதைக் குறிப்பதே அத்வைதம் ஆகும்.

எலுமிச்சம் பழச்சாறு என்று குறிப்பிட்டுக் காட்டி, இது இளநீரிலிருந்து மாறுபட்டது என்றும் சொல்கிறோம். இரண்டும் நீர்தான். ஆனால் இடத்திற்கேற்ப வெவ்வேறாக உள்ளது. **ஒரே பொருள் வெவ்வேறாக இருக்கும் நிலைக்குத் த்வைதம் என்று பெயர்.**

எல்லா வகையான நீரும் சூரிய வெப்பத்தால் ஆவியாக மாறுகிறதல்லவா? அது எதற்காக? தனது மூலத்தை நோக்கி அவை செல்லும் நிகழ்ச்சி அது. மூலத்திலிருந்து பிறந்தது மூலத்தை நோக்கிச் செல்வதே “விசிஷ்டாத்வைதம்.”

இருப்பு என்பது நிலையானது. அது சிவம். அது, சக்தியெனும் விண்ணாகிறது. அவை இரண்டும் இணைந்து அண்ட பிண்டங்களாகின்றன. அது அடைந்துள்ள பரிணாமச் சிறப்புக்கேற்ப எத்தனையோ

மாறுபாடுகளை ஒன்றுக்கொன்று பெற்றிருந்தாலும், இறுதியில் ஒரே நிலையை அவை அடைகின்றன. இந்த இயக்க நியதியைத்தான் அதாவது செயல் ஒழுங்கைத்தான் விசிஷ்டாத் வைதம் என்கிறோம்.

மூலத்தில் எல்லாமே ஒன்று. ஆனால், இயக்கத்தில் அவை ஒன்றல்ல பல. பின்னர் ஏற்படும் முடிவோ, புறப்பட்ட இடத்திற்கே அது செல்லும். இதனை மகாகவி ஷேக்ஸ்பியர் The wheel is come full circle என்பார். அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம் எனும் மூன்றும் இவற்றையே கூறுகின்றன.

ஒவ்வொரு பொருளுக்கும் நிகழ்ச் சிக்கும் மூன்று அடிப்படைக் கொள் கைகள் (Principles) உண்டு. "எல்லாம் ஒன்று" என்பது அத்வைதம். "ஒவ் வொன்றும் அதனதன் தனித் தன்மைக்கும் குணாதிசயங்களுக்கும் ஏற்ப ஒன்றுக்கொன்று மாறுபடு கிறது" என்பது த்வைதம்.

"எல்லாமே பகுத்துக் கொண்டே வரப்படும்பொழுது (While Disintegrating) கடைசியில் அணுவாகி, பின்னர் அது பரம் ஆகிறது என்பது விசிஷ்டாத்வைதம். இதுவே வேதாத்திரி மகரிஷியின் கருத்து மாகும்.

நீங்கள் வெளியூருக்குச் செல் கிறீர்கள். அங்குப் பகல்உணவு கிடைக் காது என்பதால், உணவுப் பெட்டியில் (Tiffin Box) உணவை எடுத்துச் செல்கிறீர்கள். இப்போது நீங்கள் வேறு, உணவு வேறு. பிறகு பகல் ஒரு மணி அளவில் அந்த உணவை உண்ணுகிறீர்கள். இப்போது அந்த உணவு, பெட்டியில் இல்லை. உங்கள் வயிற்றுக்குள் சென்றுவிட்டது. இவ்வளவு நேரமும் அந்த உணவும் நீங்களும் தனித்தனியே இருந்தாலும், இப்போது ஒன்றாகி விட்டீர்கள். இப் போது நீங்கள் யார்? இதுவரையில் நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள மொத்த உணவின் சாரம்தானே?

சிவம் என்ற இருப்புநிலையி லிருந்து சக்தி எனும் விண் மலர்ந்தது. சில விண்கள் உடலாயின. சில விண்கள் உணவாயின. இதனால் உடலும் உணவும் தோன்றுவதற்கான மூலப்பொருள் அணுவே.

இங்கு அத்வைதம் துவைதம் ஆயிற்று. மதியம் ஒரு மணிக்கு நீங்கள் வேறு. அந்த உணவு வேறு. ஐந்து மணிக்கு நீங்களும் அந்த உணவும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டீர்கள். ஒரு மணியிலிருந்து ஐந்து மணி வரை நடைபெற்ற வேலைக் கிரமமே (Process) விசிஷ்டாத்வைதம்.

அத்வைதம் என்பதையும் த்வைதம் என்பதையும் உணர்ந்து கொள்கிற மனிதன், த்வைதம் என்ற நிலையி லிருந்து அத்வைதம் என்ற நிலைக்கு உயர்ந்து விடுகிறான். இப்படி வினைப்படுத்துவதுதான் (Process) விசிஷ்டாத்வைதம்.

இவ்வாறான உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளாமல், "த்வைதம் ஒன்றுதான் கடவுளை அடைய வழி" என்றும், "அத்வைதம் ஒன்றுதான் கடவுளை அடைய வழி" என்றும் குழம்பிப்போய் மக்கள் சண்டையிட்டுக் கொள்கின்றனர்.

பேரியக்க மண்டலத்தில் காணும் எல்லாத் தோற்றங்களுக்கும், இயக்கங்களுக்கும், விளைவுகளுக்கும் மூலமான ஆற்றலே மெய்ப்பொருள். அம்மெய்ப்பொருளே அறிவாக இருக் கிறது. அம்மெய்ப்பொருள் பற்றி அறி யும் இயலை "மெய்யியல்" என்றும் அறிவியல் என்றும் கூற வேண்டும்.

பொருள் ஒன்றே; அது அழி வற்றது; அசைவற்றது; ஆதியானது; அதற்குமேல் எதுவும் இல்லை எனக் கண்டவரே மெய்யுணர்வாளர்கள். மெய்ப்பொருளின் ஒரு பகுதி அசைவே – பரமாணு; அதன் விரிவே உலகம்.

பரமாணு முதலான அனைத்தும் அலைகள் என்றால், அவை யாவும் தோன்றி மறைவனவேயாகும். மெய்ப் பொருளுக்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள தொடர்பு கடலுக்கும் அலைக்கும் உள்ள தொடர்பு போன்றதே! கடலும் அலையும் வேறு வேறு அல்ல; மெய்ப்பொருளும் தோற் றங்களும் ஒன்றே.


மெய்ப்பொருள், இறைநிலை, உண்மை, பூரணம், செம்பொருள் என்பன இறைநிலையைப் பற்றிக் கூறும் பல்வேறு சொற்களாகும். எதை அறிந்தால் எல்லாம் அறிந்த நிலை வருமோ, அதை அறிவதுதான் ஞானம்.

மெய்ப்பொருளை அறிய வேண்டு மானால், அதன் இயக்க நிலையாக இருக்கும் உயிரை அறிய வேண்டும். உயிரை அறிய வேண்டுமானால், அதன் படர்க்கை நிலையான மனதை அறிய வேண்டும். மனதை அறிய வேண்டுமானால், மனதால்தான் மனதை அறிய முடியும். மனம் தனது மூலமாகிய உயிரில் ஒன்றி நிற்க, அது அமைதி பெறுகிறது.

அமைதியான மனதில் உயிர் பற்றிய உண்மையும், மெய்ப்பொருள் பற்றிய உண்மையும் விளங்கும். ஆதியான மெய்ப்பொருளே தெய்வம் எனப்படுகிறது. அது வெட்டவெளி, பூரணம், அநாதி என்று வழங்கப் பெறுகின்றன.

மெய்ப்பொருளின் இயக்க ஆற்றலே பரமாணு. இது ஆகாசம் எனவும், விண் எனவும் பேசப்படு கின்றது. இதுவே பேரியக்கத் தொடர் களத்தின் இயக்க மூலக்கூறு. மெய்ப் பொருளைப் பற்றிய அறிவே முழு மையான அறிவாகும். எல்லாம்வல்ல மெய்ப்பொருளை ஆராய்ந்து அறி வதற்கு ஆறாவது அறிவால் மட்டுமே முடியும்.

கூர்ந்தும் ஆழ்ந்தும் சிந்தித்தும் ஆராய்ச்சி செய்கின்றபோது, இந்த



ஷேக்ஸ்பியர்

உண்மைகளை எல்லாம் புரிந்து கொள்ள முடியும். அதுவே அறிவின் நுண்மையான ஆற்றல். அதுவே ஆறா வது அறிவாகும். இந்த ஆறாவது அறிவின் திறத்தால் சிந்தித்தால், இறை நிலையே அறிவாக இயங்குகின்ற உண்மையினை மனிதன் உணர்வான். அதன்மூலம் எந்தப் பொருளிலும் எந்த உயிரினங்களிலும் அதனதன் சிறப்பையும் மதிப்பையும் உணர்ந்து கொள்ள முடியும். மெய்ப்பொருள் உணர்வும் பெற இயலும்.

இறைநிலையின் தன்மைகளைப் புலன்களால் உணர முடியாது. அதனால், அதை ஏற்றுக்கொள்ளவும் முடிவதில்லை. ஏற்றுக்கொள்ள முடியு மேயானால், 'மெய்ப்பொருள் ஒன்றே' என்ற தெளிவு பிறக்கும். மெய்ப் பொருளை உணர்ந்து கொள்ளும் போது ஒரே பொருள் எல்லாமாக இருக்கிறது என்ற அத்வைதத் தத்துவம் விளங்கிவிடும். இதைத்தான் "அறிவிலே தெளிவு" என்பார் மகாகவி பாரதியார்.

இது நமக்குச் சித்தித்துவிட்டால், பார்க்கும் பொருட்களில் எல்லாம் இறைவனையும் அவனுடைய இயக்க நியதிகளையும் மனிதன் அறிந்து உணர்ந்துகொள்ள முடியும். அதன் மூலம் "அத்வைதியாக" மிளிர முடியும்.

●



டாக்டர்
நல்ல ஜி. பழனிசாமி

கொரோனாவை வென்ற
கோவையின் தவம்

கோவையின் அடையாளமாகச் சிறுவாணி குடிநீர் அணைக்கட்டுச் சிறப்பாகச் சொல்லப்படும். அதன்பிறகு? பரம்பிக்குளம் – ஆழியாறு அணைக்கட்டுப் பேசப்பட்டது. மருதமலை முருகன் கோவிலை மக்கள் கோவையின் அடையாளமாக்கினார்கள். தமிழ்நாட்டுக்கே உணவு தரும் தஞ்சையில் இல்லாத தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தைக் கோவையின் அடையாளம் என்றார்கள்.

கோவை மாநகரத்தை லண்டன் மான்செஸ்டர் நகரமாகச் செய்த நூற்றுக்கும் அதிகமான நூற்பாலைகள் ஒரு காலத்தில் கோவையின் அடையாளம். கிண்டி தொழில்நுட்பக் கல்லூரிக்கு இணையான பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியையும் கோவையின் அடையாளம் என்றார்கள்.

இவையனைத்தும் கோவையில் கடந்த 40 ஆண்டுகளுக்கு முந்தைய அடையாளங்கள் (Landmarks).

K.M.C.H. என்ற மருத்துவமனை தோன்றிய பிறகு, அந்த நான்கு எழுத்துகளும் கோவை

மாநகரத்தின் அடையாளமாகியது. கோவையின் சிகரமாகியது என்றால், அது மிகையல்ல.

அமெரிக்காவில் கைநிறைய டாலர்களில் சம்பாதித்த டாக்டர் நல்ல ஜி. பழனிசாமி – திருமதி தவமணி தேவி பழனிசாமி தம்பதிகளும், அவர்களுடைய அருமை நண்பர்கள் சிலரும் இணைந்து கோவைக்கு வந்தனர். கே.எம்.சி.எச். என்ற இந்தப் புகழ்பெற்ற மருத்துவமனையை நிறுவினர்.

மருத்துவமனையை நிறுவிய பிறகு, நல்ல ஜி. பழனிசாமி – திருமதி தவமணி தேவி தம்பதியரின் அரவணைப்பால், கே.எம்.சி.எச். என்ற அந்த அபூர்வக் குழந்தை, கோவை மாநகரத்தையே தாயன்போடு அரவணைத்தது. அதனால் கோவையின் ஆரோக்கியம் உறுதிப்படுத்தப்பட்டது.



திருமதி தவமணி – நல்ல ஜி. பழனிசாமி

குறைந்த செலவில் விரைந்து குணமாகியவர்கள் கோவை முழுவதும் நிறைந்தார்கள். நகர எல்லையைக் கடந்து கே.எம்.சி.எச். பிரபலமடைந்தது. தமிழ்நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்தது. ஏன் இந்திய தேசப்படத்தில் கோவையின் மாற்றுப் பெயராக கே.எம்.சி.எச். கொடிகட்டியது.

இதன் நிறுவனர், தோற்றத்தில் ஆண்டநாள் ஆண்ட பாண்டிய நெடுஞ்செழியனைப் போன்றவர். அவருடைய அர்ப்பணிப்பு, உழைப்பு, நிபுணத்துவம், எல்லாம் சேர்ந்து சாதனைகளாகி கோவையின் மருத்துவச் சரித்திரமாகியது.

அதில் இன்னும் எழுதப்படாதப் பக்கங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பக்கங்களில் அவருடைய வாரிசுகள் மை எழுத்துக்களை அல்ல, வைர எழுத்துக்களைப் பதிப்பார்கள்.

இந்தப் பின்புலம்கொண்ட மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் நல்ல ஜி. பழனிசாமி அவர்கள், கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டார். படுக்கையானார். நடமாட முடியவில்லை. நம்மால் பார்க்கவே முடியவில்லை.

அவரை நேசித்த அநேகருக்கும் அதிகமான நலம்விரும்பிகள், சோகத்தில் சோர்ந்தார்கள். அவரவர் மனதுக்குள் ஒரு யாகத்தை வளர்த்தார்கள். தங்கள் உயிரையே தியாகம் செய்துகூட அவரை மீட்பதற்கும் விருப்பமானார்கள்.

கொரோனா என்ற அந்த ராட்சஸ நோய், வசந்த் & கோ. வசந்தகுமார் எம்.பி., போன்ற தொழிலதிபர்களைக் களவாடிச் சென்றது. எஸ்.பி. பாலசுப்ரமணியம் போன்ற கலைஞர்களைக் கொள்ளையடித்துச் சென்றது.

இந்தக் கொரோனாவில் அமைச்சர்கள், உயரதிகாரிகள், தேசத் தலைவர்கள், ஏன்? பல மருத்துவர்களும்கூட மரணமடைந்தனர்.

கொரோனாவால் மரணமடைந்த பல பேருடைய பிரதேங்கள் உறவினர்களால் அல்ல, துப்புரவு தொழிலாளர்களால் மட்டுமே மயானத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டன. உலகமே கொரோனாவைக் கண்டு நடு நடுங்கியது. பீதியில் ஊமையானார்கள்.

இந்தப் பின்புலத்தில் மாபெரும் மருத்துவமனையின் நிறுவனரான மருத்துவ நிபுணர் டாக்டர் நல்ல ஜி. பழனிசாமியைத் தாக்கிய கொரோனா, அவரைத் தனது பசிக்கு அது இரையாக்கி விடுமோ என்று பயந்தவர்கள் கடந்த ஏழு மாதங்களாகப் பதைபதைத்துப் போயிருந்தார்கள்.

ஆனால் ஆச்சரியம்! அதிசயம்! அற்புதம்! ஆனந்தம்! அவரோ 17.12.2020–இல் தனது 80–வது பிறந்த நாளை குடும்பத்தோடு கொண்டாடிய மங்கல நிகழ்ச்சி வாட்ஸ்ஆப் மூலமாக ஊரெல்லாம் ஒளிபரப்பானது. அதைப் பார்த்தோர் பரவசமடைந்தனர். அவருடைய தழுதழுத்தத் தாயன்புக் குரலையும் கேட்டவர்கள் மெய்மறந்து போனார்கள்.

அருட்செல்வர் கே.எம்.சி.எச். மருத்துவமனைக்கு ஏதோ கோவிலுக்குச் செல்வதைப் போலச் சென்று அங்கு பலமுறை சிகிச்சை பெற்றவர். 'ஓம் சக்தி' நிறுவனர் அருட்செல்வரை, டாக்டர் நல்ல பழனிசாமி தனது மூத்த சகோதரரைப் போலக் கவனித்து, கண்காணித்து கைம்மாறு கருதாத மருத்துவச் சிகிச்சைகளைச் செய்தவர்.

அத்தகைய டாக்டர் நல்ல ஜி. பழனிசாமி முழு ஆரோக்கியத்தோடு தமது அன்பு அகலா மனைவி டாக்டர் தவமணி தேவியின் அரவணைப்போடு, வாட்ஸ்ஆப் செயலியில் தோன்றிய காட்சியை, பேசிய வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவர் ஆயிரக்கணக்கானவர்கள். அவருடைய ஆரோக்கியத்தின் மீட்டெடுப்பு, அவரை இருமடங்கு அர்ப்பணிப்போடு இச்சமுதாயத்திற்குத் தொடர்ந்து பணி செய்வதற்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் நிச்சயமாகத் தூண்டியிருப்பார் என்பதில் சந்தேகமேயில்லை.

– பெ. சிதம்பரநாதன்

அஞ்சலிக் கட்டுரை

புகழுக்கே தெரியாமல் மறைந்தவர்



திரு. பி. சுப்பிரமணியம்

புகழோடு வாழ்வதற்குத்தான் அனைவரும் ஆசைப்படுவார்கள். அதற்காகத் தாம் ஈட்டிய செல்வத்தை வாரி வழங்குவார்கள். பிறருக்கு உதவிகள் செய்வார்கள். உயிரையேகூடத் தியாகம் செய்வார்கள்.

அத்தகையவர்களுடைய பெயரை மக்கள் தமது அன்றாடப் பேச்சு வழக்கில் உயர்வாகப் பேசுபவர்கள். இப்படித்தான் புகழ் பற்றி நாம் புரிந்து கொண்டிருக்கிறோம்.

பல பேர் புகழைத் தேடிச் செல்வார்கள். சில பேரைப் புகழ் தேடி வரும். இந்த இரு வகையிலும் இல்லாமல், புகழே தேடித் தேடி ஒருவரைக் கண்டுபிடிக்க அலைந்தாலும், அந்த நபரை – நல்லவரை – நாயகரை புகழால் கண்டுபிடிக்கவே முடியாமல், களைத்துப் போய், தேடுகிற முயற்சியைப் புகழே கைவிட்டு ஓடிப் போய், கால் நூற்றாண்டுக் காலமாகப் படுத்து கொண்டுவிட்டது. புகழே தேடித் தேடி அலைந்த அந்தப் புருஷ உத்தமன் யார்?

புகழே கண்டுபிடிக்க முடியாதபோது, நம்மால் மட்டும் என்ன கண்டுபிடித்துவிட முடியுமா? இது என்ன அதிசயம்! இப்படியொருவர் வாழ்ந்தாரா? ஆமாம். வாழ்ந்தார், யார் அவர்?

புகழ்பெற்ற பி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியில் சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்து, அதன்பிறகு அதனைவிட்டு விலகி, 1970–இல் தனது அன்புஅகலா மனைவியின் அருமைப் பெயரைச்சூட்டி 'சாந்தி கியர்ஸ்' (Shanthi Gears) என்ற தொழிற்சாலையைக் கோவையில் தொடங்கினவர் அவர்.



திடீரென மனைவியை இழந்தார். திசை தெரியாத தனது அருமை மகள்களை எண்ணி எண்ணி, அவர்களுக்காகத் தனது தொழிலை மேம்படச் செய்தார். ஏராளமாகச் சம்பாதித்தார். ஆனாலும் விரக்தி அவரை விடாமல் விரட்டியது. இனம்புரியாத சோகம் அவரைச் சோதனை செய்துகொண்டே இருந்தது.

தமது தொழில் நிறுவனத்தை முருகப்பா தொழில் நிறுவனத்திற்கு விற்றுக் கிடைத்த பெருந்தொகையை வைத்து, சாந்தி சமூக சேவை மையத்தைத் தொடங்கினார்.

பொதுவாக சேவை மையங்கள் (Social Services), அறக்கட்டளைகள் (Trust), தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் வரவு – செலவுக் கணக்குகளை ஆடிட்டர்களை வைத்து, இரண்டாம் கணக்கை எழுதுவது ஒன்றும் ஆச்சரியமில்லை. அவர்களில் சிலர் விதிவிலக்காக வீட்டு – விளக்காக அல்லாமல் – வீதி விளக்கானார்கள்.

அந்தச் சிலர் அகால மரணமடைந்துவிடுவாரானால், அந்தத் துயரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நமக்குப் பங்குதாரர்கள் கிடைக்கமாட்டார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தக் கோவையில் அப்படிப்பட்ட வெகு சிலரிலும் ஒரு சிலராகிப்போன, ஏன் ஒருவராகிப் போன ஒருவர்தான் இன்ஜினியர் பி. சுப்பிரமணியம்.

இவர் வாழ்ந்தது 79 ஆண்டுகள். இந்தப் பூமியைப் போல அவரும் பாரம் சுமந்து கொண்டே இருந்தார். என்ன பாரம்? சொந்தக் குடும்பத்தின் பாரத்தை அல்ல. பிற குடும்பங்களின் பாரங்களை – பசியை – பரிதாபங்களைச் சுமந்தார். அப்படி இவர் சுமந்தவற்றின் பட்டியலைப் பாருங்கள் :

1. சாந்தி உணவு விடுதி (ரூ. 20–க்கு). 2. முதியோருக்கானத் தனி உணவு விடுதி (ரூ. 15–க்கு. காபி, டீ ரூ.10–க்கு). 3. கல்விச் சேவை, 4. பெட்ரோல், டீசல் விற்பனைப் பிரிவுகள். 5. பார்மஸிப் பிரிவு (மருந்துகளுக்கு 25% விலை

தள்ளுபடி). 6. டயாலிசிஸ் சேவை. 7. இரத்த வங்கி. 8. மூக்குக் கண்ணாடி சேவை. 9. ரேடியாலஜி சேவை. 10. இரத்தம் மற்றும் பரிசோதனை ஆய்வு மையம். 11. எரிவாயு எரியூட்டும் மையம் (சடலத்தைப் பாதுகாக்கக் குளிர் சாதனப் பெட்டி இலவசம், வாகனம் இலவசம், எரியூட்டுக் கட்டணம் ரூ.1000 மட்டுமே). 12. ஸ்கேன், எக்ஸ்ரே மையம். 13. நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு காலை 6 மணிமுதல் கம்பங்கூழ், அருகம்புல், கீரை, மணத்தக்காளி ஜூஸ், மாதுளை, முருங்கை, கேரட் பானங்கள் (ரூ.5–க்கு). 14. களி, சுண்டல், முளை கட்டிய பயறு விற்பனை மையம். 15. குழந்தைகள் விளையாட்டு மைதானம். 16. 5 கி.மீ. சுற்றளவில் Pre-K.G., L.K.G., U.K.G. இலவசப் பள்ளிகள் (அந்தக் குழந்தைகளுக்கான காலைச் சிற்றுண்டி, இடைவேளையில் பால், சுண்டல், மதிய உணவு எல்லாம் இலவசம்).



இன்னும் இப்பட்டியலில் விடு பட்டுப்போனவற்றைப் பற்றி வாசகர்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இந்த நாயகரை 40 கி.மீ.–க்கு அப்பா லுள்ள பொள்ளாச்சி நகரத்திலோ, 45 கி.மீ. அப்பாலுள்ள மேட்டுப்பாளையத் திலோ, ஏன் திருப்பூரில் உள்ளவர்கள் கூட நேரில் பார்த்திருக்க மாட்டார்கள்.

ஏராளமான வசதிகளைக் கொண்ட சாந்தி வளாகம், சர்வதேசப் புகழுக்கு உரியதாக இருந்தாலும், இதன் சார்பில் ஓர் ஆண்டுவிழாவோ, ஒரு சிறப்பு நிகழ்ச்சியோ, பாராட்டு விழாவோ, விருது விழாவோ, விருந்தோ சென்ற கால்நூற்றாண்டாக நடந்ததே இல்லை.

சாந்தி உணவு விடுதிக்கான அடை யாள அட்டையை ரூ. 20 செலுத்திப் பெற்ற பிறகு வரிசையில் அமர்ந்தால், இரண்டு நிமிடங்களில் நேரடியாக உணவுக் கூடத்திற்குச் செல்லலாம். சாப்பிட அமரலாம். சுத்தம், சுவை, சுறு சுறுப்போடு பணியாற்றுகிறவர்களிட மிருந்து உணவு விநியோகமாகும்.

பல ஊர்களில் பெற்ற பிள்ளைகளே தாய், தகப்பனாரைச் சரிவரக் கவனிக் காமல் இருப்பார்களானால், அவர்கள் தங்களுடைய ஊரைவிட்டு வெளியேறி சாந்தி அறக்கட்டளை செயல்படும் ஒண்டிப்புதூர் கிராமத்தில் வாடகைக்கு வீடு எடுத்துத் தங்கிக் கொண்டுள்ளனர். சாந்தி உணவகத்தில் வருடம் முழுவதும் மூன்று வேளையும் சாப்பிடுவார்கள்.

சாப்பிடுவதற்காகவே சொந்த ஊரைவிட்டு வேறு ஊரில் தங்கிக் கொண்டிருப்பவர்களை எங்காவது கேள்விப்பட்டிருக்கிறோமா?

மாநில அரசும், மத்திய அரசும் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர் களுக்கு 20 கிலோ அரிசி இலவசம், பருப்பு இலவசம், சமையல் காஸ் இல வசம் எனத் தந்து கொண்டிருக்கிறார் கள். ஆனால், சாந்தி அறக்கட்ட ளையோ, அதைச் சாப்பாடாகவே தயா ரித்து இலவசத்திற்கும் மேலானதாகவே தந்து கொண்டிருக்கிறது.

மதியச் சாப்பாடு மட்டும் 5 ஆயிரம் பேருக்குக் குறையாமல் தினசரி சாப் பிடுகிறார்கள். இதுவல்லாமல், காலைச் சிற்றுண்டி, இரவுச் சிற்றுண்டி. இது சாப்பாட்டிற்கு மட்டுமே. இதுவல்லாமல் மருந்து, ஸ்கேன், இத்யாதி, இத்யாதி...

சாந்தி கியர்ஸ் அறக்கட்டளை நிறு வனர் பி. சுப்பிரமணியத்திற்கு அவரு டைய 79–வது வயது வரைக்கும் ஒரு விருதோ, பாராட்டுக் கூட்டமோ நடந்தது இல்லை. மத்திய அரசின் பத்மஸ்ரீக்கு அல்ல, பாரத ரத்னாவுக்கே தகுதியானவர். காரணம், பலன் கருதி இந்தப் பணிகளை அவர் செய்ய வில்லை. தமிழக அரசு ‘கலைமாமணி’ போன்ற விருதுகளை இவருக்கு இவர் சாகும்வரை வழங்கவில்லை. காரணம், தமிழக அரசுக்கே இவரைத் தெரியாது.

ஒருவேளை அரசு துப்பறிந்து தெரிந்து கொண்டாலும், இவர் அந்த விருதை மறுக்கத்தான் செய்திருப்பாரே தவிர, மனமார ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களே சாந்தி வளாகத்திற்குச் சென்று பார்வை யிட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தி

இல்லை. வழக்கமான வருமான வரித் துறையினருக்கோ, அமலாக்கத் துறையினருக்கோ அங்கு வேலை இருந்ததாகத் தெரியவில்லை.

பிரதமர் மோடி அவர்கள் யாரோ ஓர் ஆதிவாசி வனத்தில் தங்கிக் கொண்டு சேவை செய்வதை அறிந்து, 2009–இல் அந்த நபரை ஓர் அமைச்சராகவே பிரதமர் நியமித்தார். நியமிக்கப்பட்டவருக்கே அந்தச் செய்தி தெரியாது. அப்படி நிகழ்ந்தது அது.

மதுரையில் சின்னப்பிள்ளை என்ற பெயர் தாங்கிய ஒரு பெண்மணி, ஏழைகளுக்குச் செய்த சேவையை எவரோ சொல்லித் தெரிந்துகொண்ட அன்றைய பாரதப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய், தமிழகம் வந்திருந்தபோது, அந்தச் சின்னப்பிள்ளையின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

பி. சுப்பிரமணியம் என்ற இந்தச் சூரியன் எப்படி இருட்டுக்குள்ளேயே இத்தனைக் காலம் இருந்தார் என்பது தான் ஆச்சரியம். இவர், முதலமைச்சர்களாலும், பிரதமர்களாலும் வணங்கப்படத் தக்கவர். குடியரசுத் தலைவராலேயே கும்பிடப்படத்தக்கவர் என்றால், அதில் அட்சரம்கூடப் பிழையில்லை.

சுப்பிரமணியத்தின் சுபாவம் வித்தியாசமானது. ‘உங்களைப் பார்க்க வேண்டும்’ என்றால், ‘அவசியமில்லை’ என்பார். அவரை உதாசீனப்படுத்திப் பேசினால் அவரே பிறகு விசாரிப்பாராம்.



தன்னை உதாசீனப்படுத்துகிறவர் நிச்சயமாகத் தன்னிடம் உதவி கேட்பவர் அல்ல என்ற முடிவுக்கே வந்தபின் தான், உரையாட முயற்சிப்பாராம். எனக்கு அந்த அனுபவம் உண்டு.

உதாசீனப்படுத்தியதால் அடுத்த முறை அவருடைய தொலைபேசியில் அவர் அழைப்பார் எனக் கட்டுரையாளர் காத்திருந்தார். அவரோ, தொடர்பு எல்லைக்கே அப்பால் போய் விட்டார். நாம் வருந்துவோம் என்பது கூட அவருக்குத் தெரியாது. ஆனால், அவர் வாழ்ந்த வாழ்க்கை நம்மை மீளாத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவரால் சுயநலமாக வாழ முடியாது. அதுவே அவருடைய சுபாவம். அதனை அவர் விளம்பரப் படுத்திக் கொண்டதே இல்லை.

தவமிருக்கும் ஞானிகளைத் தேடி காடு வனங்களில் அலைந்துத் திரியும் புகழோ, அந்த ஞானிகளைக் கண்டு பிடிக்க முடியாமல் அழுது அழுது விட்டக் கண்ணீர்தான் காட்டாறுகளாகப் பாய்ந்து ஓடுகின்றனவோ?

சுப்பிரமணியத்திற்காகக் கோவை மக்கள் சிந்தியக் கண்ணீர் நொய்யலில் கொட்டி அது பெருக்கெடுத்திருக்குமா? காவிரியில் கலந்து சங்கமித்திருக்குமா? என்ற மகத்தான அந்த மர்மம் காலத்திற்குத்தான் தெரியும்.

– ந.நி.

கண்ணீர்க் கவிதாஞ்சலி !



யாருக் கென்று இல்லாமல்
ஊருக்கே சோறு போட்ட
மணியரே சுப்பிர மணியரே !

சோகமே சூழ்ந்தது எம்மை
சொர்க்கமே சூழ்ந்தது உம்மை !

காந்தியின் மூத்தமகன் நீயே
சாந்தியை காத்துவந் தாயே !

– கவிஞர் இருக்கன்குடி மாரிமுத்து

ஆயுர்வேத மருத்துவர்களை எதிர்க்கும் அலோபதி மருத்துவர்கள்

நோய் என்பதையும் ஆரோக்கியம் என்பதையும் சமமாகவே பரிசீலிக்க வேண்டும். உடம்பு உருவான நொடியிலிருந்து இயக்கத்திலேயே இருக்கிறது. இந்த இயக்கத்தைத்தான் உயிர் என்கிறோம். இயக்கம் நின்றுபோனால் உயிர் நின்றுவிட்டது என்றே கூறுகிறோம்.

உடம்பு உள்ளவரை நோயும் இருக்கும். வஞ்சக சிநேகிதத்தை நமது முன்னோர்கள் வியாதிக்குத்தான் ஒப்பிட்டார்கள். "கூட இருந்தே கொல்லும் வியாதி" என்றனர். அது நமது கண்களுக்கு முன்பாகத் துஷ்ட மிருகம் போல நிற்காது. நிற்குமானால், அதனை அழித்துவிட முடியும். ஆனால் அதுவோ நுண்கிருமி. நமது உடம்புக்கு



உள்ளே நமக்குத் தெரியாமல் போய்விடும். நமது ஆரோக்கியம் முழுவதையும் அது அழித்துவிடும். அப்போது நோய் முற்றிவிட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். ஆரோக்கியமும், நோயும் சம பலமுள்ள சத்துருக்கள்.

அதனால்தான் தவஞானிகள்கூட நோயைப் பற்றி நிறைய சிந்தித்துள்ளனர். "நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டும்" என்பார் அருளாளர் வள்ளற்பெருமான்.

நோய் பற்றிய ஞானம் உலகத்தின் சகல பகுதி மக்களுக்கும் உள்ளது. அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு உரிய உணவுபோல, உரிய மருத்துவமும் உள்ளது. உண்மையான மருந்து எதுவென்றால் நமது உணவேதான்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்பார் ஞானி வள்ளுவர். அருந்தியது என்றால் அருந்தத் தக்கது. அற்றது என்றால் அருந்தத் தகாதது.

வல்லாரை, கரிசலாங்கண்ணி, கொத்தமல்லி, கீழாநெல்லி, மா, பலா, வாழைப் பழங்கள், நெல்லிக்காய், சீரகம், மிளகு, திப்பிலி, பூண்டு, சோம்பு முதலிய பலவும் நமது சித்த மருத்துவத்து உணவுகளில் இடம்பெற்றுள்ளன.

இந்த உணவுகள் வயிற்றுப் பசியைப் போக்கும். அதேசமயம் நோய்க் கிருமிகளையும், வைரஸ்களையும், கெட்ட பாக்டீரியாக்களையும் அழிக்கவும் செய்யும்.

ஆயுர்வேத மருத்துவத்தில் கஷாயமும், லேகியமும், மருந்துகளாக உள்ளன. இவை எல்லாவற்றையும் வாய் வழியாகச் சாப்பிட்டு உடல் உபாதைகளை ஒழித்து வந்தோம்.

தமிழ்நாட்டின் சித்தமருத்துவம்,



சீனாவின் அக்குப்பஞ்சர் வைத்தியம், அரபு நாடுகளின் யுனானி சிகிச்சை, ஜெர்மனியின் ஹோமியோபதி சிகிச்சை, கேரளாவின் ஆயுர்வேத சிகிச்சை எனப் பல்வேறு மருத்துவச் சிகிச்சை முறைகள் உள்ளன.

இவை எல்லாமே மருந்துகள், மாத் திரைகள், குளிகைகள், சாறுகள் (சிரப்), கஷாயம், லேகியம் ஆகியனவாகும். கை, கால் முறிந்துவிட்டால், பாதிக்கப்பட்ட வருக்கு எலும்புமுறிவைச் சரிசெய்ய அறுவைச் சிகிச்சை (சர்ஜரி) அவசியப் பட்டது.

இங்கிலாந்தில் அலோபதி சிகிச்சை யில் முக்கியப் பாத்திரம் வகிப்பது மருந்து மாத்திரை மட்டுமல்ல; சர்ஜரி (Surgery) எனப்படுகிற அறுவைச் சிகிச்சை முறைதான்.

அலோபதி மருத்துவக் கல்வியில் இந்த அறுவைச் சிகிச்சையைப் பயின்று கையாள்வதற்கு 6 வருடங்கள் படிக்க வேண்டும். செய்தும் பழக வேண்டும். அவர்களுக்கு M.B.B.S., பட்டம் தரப்படு கிறது. இந்த B.S., என்பது Bachelor of Surgery. இந்த இளங்கலை டாக்டர்கள் பலரும் சர்ஜரி செய்வதில்லை. முது கலை M.S., (Master of Surgery) படித்த டாக்டர்களுக்கே இதற்கு அனுமதி கிடைத்தது.

கடந்த பல ஆண்டுகளாக அலோ பதி டாக்டர்கள் மட்டுமே சர்ஜரி எனப் படுகிற அறுவைச் சிகிச்சை முறையைச் செய்யத் தகுதியானவர்களாகக் கருதப் பட்டனர்.

இந்தியக் கலாச்சாரத்தை மீட்டுரு வாக்க விரும்பியுள்ள மாண்புமிகு பிரதமர் மோடி தலைமையில் உள்ள மத்திய அரசு, சென்ற நவம்பர் 19–ஆம் தேதி ஓர் அறிவிப்பைச் செய்தது. அலோபதி மருத்துவர்கள் செய்கிற அறு வைச் சிகிச்சையை இனி ஆயுர்வேத முதுகலை மருத்துவர்களும் செய்யலாம் என அறிவித்தது.

அலோபதி டாக்டர்கள் இதனை எதிர்த்துப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ப்பாட்டங்களைச் செய்து வருகின்றனர்.

அவர்களின் வாதம், அறுவைச் சிகிச்சை (சர்ஜரி) நவீன மருத்துவத்தைச் சார்ந்தது. எம்.பி.பி.எஸ். படிப்பை 6 வருடம் படித்தாலும், எம்.டி. படித்தவர் களுக்குத்தான் அதனைச் செய்வதற் கான அனுமதி உண்டு.

ஆயுர்வேத மருத்துவத்தில் முது கலை படித்த மருத்துவர்கள் 7 ஆண்டு கள் படித்த பிறகே, ஆயுர்வேத மருத் துவம் செய்கின்றனர். ஆனாலும் ஆயுர் வேதப் பாடத் திட்டத்தில் அறுவைச் சிகிச்சைப் பிரிவு இல்லை.

இந்த மருத்துவர்களுக்கும் சர்ஜரி ஞானத்தைக் கற்பித்துப் பயிற்சியும் தந்து விட்டால், அந்த ஆயுர்வேத மருத்துவர் கள் அலோபதி அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர்களாகவும் உருவாக முடியும். ஆயுர்வேத மருத்துவப் படிப் பில் சர்ஜரியையும் இணைப்பது ஆயுர் வேத மருத்துவத்துக்குப் பெருமையை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும்.

மத்திய அரசின் அறிவிப்பின்படி, 58 வகையான சர்ஜரிகளை ஆயுர்வேத முதுகலை மருத்துவர்கள் செய்யலாம். இந்த 58 வகை சர்ஜரிகளில், இருதய அறுவைச் சிகிச்சை மட்டும் சேர்க்கப் படவில்லை.

கண், காது, மூக்கு, தொண்டை, எலும்புமுறிவு, பல் முதலிய உயிருக்கு ஆபத்தில்லாத சிகிச்சைகளை அளிப் பதற்கே இப்போது அனுமதி வழங்கப் பட்டுள்ளது. இதனை ஆயுர்வேத முது கலை படிக்கும் மாணவர்களும் இப் போதுள்ள மருத்துவர்களும் கற்றுக் கொள்ளலாம்.

அலோபதி டாக்டர்கள் இதனைப் பற்றிக் கூறுகிறபோது, இந்த அனுமதி தவறானது. அலோபதிக்கே இது உரியது என்கிறார்கள். போராட்டத்திலும் ஈடு பட்டு வருகின்றனர். இந்தச் சிகிச்சை முறையைக் 'கலப்பட சிகிச்சை' (Mixopathy) எனத் தரக்குறைவானதா கவும் கூறி வருகிறார்கள்.

அவர்களுடைய அச்சம், இந்த அனுமதி மூலம் அறுவைச் சிகிச்சை செய்ய ஆயுர்வேத மருத்துவர்களும் உருவாகிவிட்டால், அலோபதி மருத்து வர்களுக்குப் போட்டியாக வந்து விடுவார்களோ என்பதாகப்படுகிறது.

உரிய படிப்புக்கும் பயிற்சிக்கும் பிறகுதான் – அதுவும் ஏற்கனவே மருத் துவர்களாக உள்ள ஆயுர்வேத இளங் கலைப் பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு முதுகலைப் படிப்பில் இந்த வாய்ப்பு தரப்படுகிறது. இதில் என்ன தவறு நிகழ்ந்துவிடும் என அலோபதியர்கள் அஞ்சுகிறார்கள் என்பது புரியவில்லை.

அலோபதி மருத்துவர்கள் பிசியோ தெரப்பிஸ்ட்களை (Physiotherapist) டாக் டர்கள் என அழைக்கக் கூடாது எனப் போராட்டம் நடத்தியவர்கள். 10 ஆண்டு அனுபவமுள்ள சீனியர் நர்சு களையும் டாக்டர்களாக அங்கீகரிக்க லாம் என்ற கருத்தையும் ஏற்காதவர்கள். தொழில் போட்டி ஏற்பட்டுவிடுமோ என்பதைத் தவிர, இதில் வேறு அம்சம் இல்லை. நமது நாட்டில் டாக்டர்கள் பற்றாக்குறை நீடிக்கிறது. கிராமங் களுக்குச் சென்று டாக்டர்கள் பணி புரிய விரும்புவதில்லை. மருத்துவச் செலவும் அதிகமாகிறது.

இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டால், அதிகமான மருத்துவர் கள் இருந்தால் நோயாளிகளின் மீது அதிகக் கவனம் செலுத்த முடியும். குறைந்த டாக்டர்கள் என்றால், அதிக மான நோயாளிகளுக்கு அவசியமான சிகிச்சை கிடைக்காத நிலைமையே நீடிக்கும். இது நாட்டுக்கு நல்லதல்ல.

ஆயுர்வேத டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்யத் தகுதிபெற, அவர் களை உரிய தேர்வு எழுதுமாறும் கூற லாம். அது தவறல்ல.

லண்டனில், இந்தியாவிலிருந்து செல்கிற டாக்டர்கள், இங்கிலாந்து அரசு நடத்தும் மருத்துவத் தேர்வில் வெற்றி பெற்றால்தான் அங்கு மருத் துவத் தொழில் செய்ய முடியும்.

நோய் எதிர்ப்பு சக்திக்கான நாட்டு மருந்துகளான நிலவேம்பு, கபசுரக் குடிநீர் கொரோனாவைக் கட்டுப்படுத்த அருந்தி வருகிறோம். இவையென்ன அலோபதி மருந்துகளா?

நோயை ஒழிக்கச் சிகிச்சைதான் முக் கியமே தவிர, சிகிச்சையைப் பற்றியே தற்பெருமை கொள்வது சரியல்ல.

சட்டம் படித்தவர்கள் எல்லாம் வக்கீல்களாகிவிட முடியாது. அதற்கு உரிய தேர்வு எழுதி, அதில் தேர்வு பெற்றால்தான் வக்கீல் தொழில் செய்ய முடியும். ஆசிரியர்களுக்கும் இப்போது தகுதித் தேர்வு வந்துவிட்டது.

அதுபோல, ஆயுர்வேத முதுகலை மருத்துவர்களுக்கும் அறுவைச் சிகிச்சை பற்றிப் படித்த பிறகு, அவசியப்பட்டால் தகுதித் தேர்வு வைக்கலாம்.

இவ்வாறு அலோபதி டாக்டர்கள் வாதித்தால் அதிலுள்ள நியாயத்தைப் புரிந்துகொள்ள முடியும். அப்படி இல் லாமல், ஆயுர்வேதம் படிப்பே அவர்கள் அலோபதி டாக்டர்களாவதற்கான தகுதியை இழந்துவிடச் செய்கிறது என்பது அநியாயம்!

இதைப் பற்றியெல்லாம் வாசகர் களாகிய நீங்கள் என்ன எண்ணுகிறீர் களோ, அதை எழுதுங்கள் ஜனவரி 15–க்குள்.

– பி.சி.

ஆன்மிகம்

ஆண்டாளின் சங்கத்தமிழ்

பேரா. எஸ் கோகுலாச்சாரி

ஆண்டாளின் அழகுத் தமிழுக்குச் சங்கத்தமிழ் என்றொரு பெயருண்டு. கோதை ஆண்டாள்; தமிழை ஆண்டாள்; தமிழால் இறைவனை ஆண்டாள். ஆண்டாளின் பிரபந்தங்கள் இரண்டு. முதலாவது திருப்பாவை. இரண்டாவது நாச்சியார் திருமொழி.

திருப்பாவையிலே ஒருவிதமான கம்பீரம் தொனிக்கும் பாட்டு இருபத்து மூன்றாம் பாட்டு. அந்த அற்புதமான பாசுர வரிகளை இனிக் கீழே காண்போம்.



"மாரி மலை முழைஞ்சில் மன்னிக்
கிடந்துறங்கும்
சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க வெப்பாடும்
போர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாப் போலே நீ பூவைப்பூ
வண்ணாவுன்
கோயில் நின் றிங்ஙனே போந்தருளிக்
கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம் வந்த
காரிய மாராய்ந்து அருளேலோ ரெம்பாவாய்!"



இனி, வார்த்தைக்கு வார்த்தை வர்ண மயமான விரிவுரைகளை வாரி வழங்கிய வைணவப் பேருரையாளர்களின் வாக்கினை அனுபவிப்போம்.

"மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்" மழைக்காலத்தில் மலைக் குகையில் என்று இந்த வார்த்தைக்குப் பொருள்.

மழைக் காலத்திலே எந்தச் செயல்களும் நடக்காது. வெளியே மழை கொட்ட, எங்கும் வெள்ளப் பெருக்காடாய் இருக்க, யார் நடமாடப் போகிறார்கள்? எல்லோரும் வீட்டிலே அடைந்து கிடப்பார்கள். அரசர்களும் அரண்மனையை விட்டு வெளியே வர மாட்டாத காலம் மாரிக்காலம்.

சீதையைத் தேடிக் கண்டுப்பிடிக்க சுக்ரீவன் உதவியை நாடினான் இராமன். அதற்குள் மாரிக்காலம் வந்துவிட்டது. சுக்ரீவன் கொடுத்த வாக்கை மறந்து அரண்மனையின் உல்லாசத்தில் இருந்து விட்டான். காரணம், அவனல்ல. அப்படி அவனைச் செய்து விட்ட காலம் மாரிக் காலம்.

இராமனே சொல்கிறான்.

"இது மழைக்காலம். உன்னால் வெளியே சென்று தேட முடியாது. மனைவியைப் பிரிந்த நீ, மழைக் காலம் முடியும்வரை அரண்மனையில் மகிழ்ச்சியாக இரு. மாரிக்காலம் முடிந்த பிறகு வா." மிருகங்கள்கூட வெளியே நடமாடுவதில்லை. மிருகங்களுக்கு ராஜா சிங்கம். அதுவும் ஒரு குகைக்குள்ளே ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறது.

இப்படி இராமாயண நிகழ்ச்சியைச் சொல்லிவிட்டு, "சுக்கிரீவன் மகிழ்ச்சிக்காக அரண்மனைக்குச் சென்றுவிட்டான். உன்னைப் பிரிந்த நாங்கள் உன்னைத் தேடி வந்திருக்கிறோம். பிரிந்தவர்கள்

கூடுவதும், கூடியவர்கள் அனுபவிப்பது மான காலத்திலே, கண்ணா! நாங்கள் வந்து உன் தலைவாசலிலே படாதபாடு படுகிறோமே! பார்த்தாயா!" என்ற பாவம் வெளிப்படுகிறது இந்த முதல் வாக்கியத்தில்.

"மன்னிக்கிடந்து" என்ற வரியின் அழுத்தத்தைப் பாருங்கள். மலைக் குகையிலே எத்தனையோ பெரிய பாறைகள் இருக்கின்றன. அதிலே ஒரு கம்பீரமான பாறை குகையோடு, குகையின் தரையோடு பொருந்திக் கிடப்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

"நப்பின்னை கொங்கைமேல் / வைத்துக்கிடந்த மலர்மார்பா" என்று ஏற்கனவே ஆண்டாள் சொன்னதுதான். இங்கேயும் அதனைச் சொல்கிறாள்.

அறிதுயில் என்ற பொய்த் தூக்கமன்றோ அது! உறங்குவான் போல் யோகு செய்யும் பெருமாள் அவன்! கிடந்ததோர் கிடக்கை அல்லவோ இந்த இருப்பு! அவன் தூங்குவது தூக்கமல்ல. யோக நித்திரை என்றன்றோ இதனைச் சொல்கிறார்கள்.

"சீரிய சிங்கம்" என்று கண்ணனை சிங்கத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறாள் ஆண்டாள். மிருகராஜனான சிங்கத்துக்கு வந்தபெருமை இயற்கையிலேயே இருப்பது. கற்பிக்கப்பட்ட பெருமை அல்ல.

தேவர்களுக்கெல்லாம் தேவன் திருமால். திருமாலுக்கு உள்ள பெருமை வேதங்களாலும் ஆகமங்களாலும் கொட்டி முழக்கப்படுகிறது. சங்ககாலம் தொட்டு இந்தக் காலம் வரை சகல சான்றோர்களாலும் போற்றக்கூடிய அவன் புகழ் இயற்கையானது.

"யசோதை இளஞ்சிங்கம்" என்று முதல் பாட்டிலேயே இந்த வார்த்தை (சீரிய சிங்கம்) முத்திரை குத்தப்பட்டு விட்டது.

"சீரிய சிங்கம்" சிங்கம் தூங்குகிறதே என்று எதிரில் எந்த மிருகங்களும் துணிந்து போக முடியாது. கண்ணன் என்ற சிங்கத்தை நினைத்தாலே கம்சன் போன்ற அசுரர்கள் மனதில் எழும் அச்சத்தை அளவிட முடியாது.

"அறிவுற்று" காலம் கனியும் போது அறிதுயில் கலைபவன். தன்னை எழுப்புவதற்கு யாதொன்று மில்லை யாதலால் தானாகவே தன் ஆதிக்கத்தை நடத்துபவன்.

திருப்பள்ளியெழுச்சியோ, சுப்ரபாதமோ பாடித்தான் அவன் எழ வேண்டும் என்ற அவசியமில்லை. ஒன்று சொல்லித்தான் அவன் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை சர்வ ஞானமும் குறைவறப் படைத்த அவனுக்கு இல்லை.

பக்தர்களின் ஆவலை அறிபவன்; காலம் கனிய அவர்களின் ஆவலைத் தீர்ப்பவன் அவன். ஆனால், நம்முடைய ஆசை அவன் பள்ளியெழும் அழகை அனுபவிப்பது அல்லவா?

"தீவிழித்து" தீமை செய்யாத கோபமும் ஒரு புருஷலட்சணம் தான். சினம் கொண்டதுபோல் சிவக்கப்பார்ப்பதும் ஆடவர்களுக்கு ஓர் அழகு. ஆடவர்க்கெல்லாம் ஆடவன் என்று பேசப்படும் புருஷோத்தமனின் அந்த விழியழகின் சிவப்பினை என்ன சொல்லி வர்ணிப்பது?

அந்தச் சிவப்பு எழிலைக் காணப் பிரியப்படுகிறார்கள். சாமான்ய பலா



பலன்கள் எதுவும் எதிர்பார்க்காத பக்தர்களுக்கு இறைவனின் எந்த நிலையும் மகிழ்ச்சிக்கு உரியதாகவே இருக்கும்.

"வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி" சிங்கத்துக்குப் பிடரி மயிர் அழகாக இருக்கும். அந்த முடியும் பரிமள வாசனையுடன் சுகந்தமாக இருக்கிறது.

"சர்வ கந்தக" என்று வேதம் அவனைப் போற்றுகிறது. இந்த வாசனை இயற்கையாக உள்ளது. அடுத்து அதன் கம்பீரம். அரங்கன் நான்கு கதிகளைக் காண்பிக்கிறான். சிம்ம கதி, கஜகதி, வ்யாக்ர கதி, சர்ப்ப கதி இப்படிப்பல நடையழகுகள்.

தூங்கிய சிங்கம் நிமிர்ந்து அப்படி இப்படி எனத் தலையை ஓர் ஆட்டு ஆட்டும்போது, அந்தப் பிடரிமயிரும்

பொங்கிச் சிலிர்த்துக் கலைந்து அசந்து எழும். அப்பபடிப்பட்ட ஒரு நிலையும் இங்கே பேசப்படுகிறது.

"எப்பாடும் பேர்ந்து உதறி" என்கிறாள் ஆண்டாள்.

அலுப்புதீர சிங்கம் எழுந்து, உடலைச் சிலிர்க்கிற பொழுது அதன் அசைவில் அந்த குகையே ஆடும். சர்வேஸ்வரனின் அசைவில் அகில உலகங்களும் அசையும். எந்தத் திசையும் சற்று நடுங்கவே செய்யும்.

"மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு" பரப்பிரம்மம் அவன். உடல்மிசை உயிரெனக்கரந்து எங்கும் பரந்துள்ளவன். சுடர்மிகு சுருதியாக இருப்பவன். சேதன அசேதனங்களாகவும் இருப்பவன். ஈஸ்வரனுக்கு அவயங்களாகப் பிரகிருகியிலுள்ள அத்தனை பொருட்களும் இருக்கின்றன. அவன் நிமிரும்போது அத்தனையும் நிமிர்கின்றன.



சிங்கம் எழுந்து, பிடரிமயிரைச் சிலிர்த்து, உடலைச் சோம்பல் முறித்து, கம்பீரமாக நின்று, தீவிழி விழித்து அந்தக் குகையே அதிரும்படியாகக் கர்ஜனை முழக்கிப் புறப்பட்டுவிட்டது. கண்ணனும் அப்படி எழுந்து புறப்பட்டு விட்டான். கண்ணுக்கும் காதுக்குமாக, ஒளியும் ஒலியும் போலே நாம் அனுபவிக்கும் பேறாக அல்லவா அவன் இருக்கிறான்.

"போதருமா போலே" குகையிலிருந்து சிங்கம் பிடரிமயிர் சிலிர்த்து எழுந்தது போலே நாம் காண நீ எழுந்தருள வேண்டும். எங்களின் உள்ளத்தை, நீ சிம்மம் போல் எழுந்து புறப்படும் கம்பீரம் ஆட்கொள்ள வேண்டும். சர்வ உலகங்களுக்கும் சுவாமி நீ என்பதைப் போலே கம்பீரமாக எழுந்தருள வேண்டும்.

"பூவைப் பூவண்ணா" காயம்பூ மேனி வண்ணன் என்று கண்ணனின் நிற அழகை வர்ணிப்பார்கள். நீல வண்ணம் என்பது மனத் துயரை நீக்கிப் பாது காப்பை அளிக்கும் வண்ணம் என்று இன்றைய அறிவியலாளர்களும் கருதுகின்றனர். கரு வண்ணம் கருணைக்கு இருப்பிடமான மேகத்தை ஒத்திருக்கிறது. ஆழி மழைக் கண்ணா! என்று மழைக்கு இறைவனை அழைத்தாலும், அவனுக்கும் உள்ளே விளங்குபவன் அந்தர்யாமியான அச்சுதன் அல்லவோ!

முன்பு கம்பீரத்துக்குச் சிங்கத்தைச் சொன்னார்கள். அந்தக் கடுமைக்கு நேரான மென்மையை இங்கே சொல்கிறார்கள். எதிரிடையான இரண்டு பொருள்களுமாக அவன் இருக்கிறான். எப்பொருளுமாக இருப்பவன் இறைவனல்லவா? என்ற தத்துவமும் இங்கே உணரத்தகும்.

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், இருக்கும் இடத்தில் மெல்லிய இதயமும் கருணைவிழிகளும் கலந்திருக்கின்ற புதுமை கண்ணனிடம் மட்டுமே காண முடியும் என்பது ஆண்டாள் நாச்சியாரின் நம்பிக்கை. உண்மையில், ஓர் உதாரணத்திற்கு சிங்கத்தையும் பூவையும் ஒப்பிட்டார்களே தவிர, ஒப்பு ஒன்று இல்லாத உயர்வான அவனைச் சொல்ல எந்த மொழியும் வார்த்தைகளும் இல்லை.

"உன் கோயில் நின்று இங்ஙனே போந்தருளி" நந்த கோபனுடைய கோயில் என்று முன்னால் (முன் பாசுரத்தில்) நந்த கோபனின் அரண்மனையைச் சொன்னார்கள். இங்கு உன் கோயில் என்று நேரடியாக, இது உன் அரண்மனை என்று சொல்கிறார்கள்.

நந்தகோபன் அரண்மனை கண்ணனின் அரண்மனைதான். ப்ரணவத்திற்குள் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுக்குள் ஒன்றாக இருக்கின்றன. நந்தகோபன் ஜீவாத்மா. கண்ணன் பரமாத்மா. அரண்மனை உண்மையில் ஜீவாத்மாவான நந்த கோபனுக்குச் சொந்தமானதல்ல. அப்படிச் சொல்லியது ஓர் உபசாரத்திற்காக. உண்மையில், அது பரமாத்மாவாகிய கண்ணனுக்குச் சொந்தமானது. இருவருக்கும் பொது என்பதால் உன்கோயில் என்று அழுத்தமாகச் சொல்வதில் குறை இல்லை.

"நமக்கு பதம், பரமபதம்!" கண்ணனின் இடமும் பரமபதம் (அவன் எங்கிருந்தாலும் ஆயர்பாடியில் இருந்தாலும்)! இரண்டுமே சரிதானே. உன் கோயிலின்

முன்னே நாங்கள் நிற்கிறோமே, எங்களுக்கு முன்னே நீ நடையழகு காண்பிக்க வேண்டும் என்று வேண்டுகிறார்கள்.

அற்புதமான நால்வகை நடையழகையும் திருவரங்கத்திலே இன்றும் காண்பிக்கவில்லையா! உன் சிம்ம நடையை நாங்கள் பார்க்கப் பிரியப்பட்டு உன் கோயில் வாசல் வந்து காத்துக்கிடக்கிறோம். உள்ளே நப்பின்னை மார்பிலே பள்ளி கொண்டுள்ள நீ எழுந்து, கம்பீரமாக எங்கள் முன்னே வரவேண்டும்.

வானவர்கள், வானவர் உலகத்து அழகிய மங்கைகளும் கண்டு நாணும் உன் நடையழகையும் வடிவழகையும் எங்களுக்குக் காட்ட வேண்டும். கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து கண்ணா! நீ கிடக்கும் அழகையும், நடக்குமழகையும், நிற்குமழகையும் காட்டினால் மட்டும் போதாது. நிற்கும் போதும், நடக்கும் போதும் ஏதாவது காரியம் ஆக வேண்டும் என்று சொன்னாலும் ஆகாது. நீ வீற்றிருக்கும் அழகையும் காண வேண்டும். அதன்பின் நாங்கள் வந்த காரியத்தை நீ கேட்டு ஆராய வேண்டும்.

கோப்புடைய சீரிய சிங்காதனம் என்ற வாக்கியத்தின் கோப்புடைய என்ற சொல்லினால், உபய விபூதி நிர்வாகத்தின் (விண்ணாடு மற்றும் மண்ணாடு) பெருமை பேசப்படுகிறது.

சீரிய சிங்கம் அவன். அப்புறம் அவன் வீற்றிருக்க வேண்டிய இடம் மட்டும் சாதாரணமான இருக்கையாக இருக்கலாமா? அதுவும் சீரிய சிங்காதனம்.

கிருஷ்ணனுக்குப் பொய் நம்பி என்ற பெயர் உண்டு. ஏதாவது ஒன்று கேட்பான். பின் சொல்லவில்லை என்று சாதித்து விடுவான். ஏலாப் பொய்கள் உரைக்கும் அவனே இந்த மாதிரி குறை கேட்கும் பொறுப்பில் இருக்கும்போது, விளையாட்டாக எதுவும் செய்துவிட முடியாது அல்லவா! அதுதான் சிங்காசனத்தின் சீர்மை. போர்க்களத்தில் தேர்த்தட்டில் கண்ணன் கீதையைச் சொன்னான். கடற்கரையில் இராமன் சரமசுலோகத்தைச் (வீடண அடைக்கலம்) சொன்னான். இங்கே கோப்புடைய சீரிய சிங்காசனத்தில் அமர்ந்து சொல்லும் போது எந்த வார்த்தையும் முக்கியத்துவம் பெறும்.

“யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்” யாம் வந்த காரியம் என்று சொன்னார்களே தவிர, என்ன காரியம் என்பதைச் சொல்லவில்லை. நாளுக்கொரு பாட்டாக இருபத்தியிரண்டு பாடல் இதற்கு முன் இருந்திருக்கிறது. அதில்தான், ஒருவரை ஒருவர் எழுப்பி, ஒன்றாக வந்து வாயிற்காப்பானை எழுப்பி, நந்தகோபரை எழுப்பி, யசோதையை எழுப்பி, பலராமரை எழுப்பி, நப்பின்னையை எழுப்பி என எவ்வளவோ பாடுபட்டிருக்கிறார்கள். இப்போது கண்ணனைச் சந்திக்கும் நேரம். அவன் வந்து கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் வீற்றிருக்கும் நேரம். அன்புடன் இவர்களை விசாரிக்கும் நேரம். சபாமண்டபத்தில் ஆசனத்தில் வீற்றிருந்து குறைகேட்கும் காலம்.

இப்படிப்பட்ட இனிய நேரமான இப்பொழுது அவன் வந்து விசாரித்து அருள வேண்டும் என்கிறார்கள்.

ஆற்றாது வந்த அடிபணிகிறார்கள் இவர்கள். அப்படி நம் அடியார்களை இருக்க வைத்து விட்டோமே என்று பரம கருணையை இயற்கையாகக் கொண்ட அவன் கவலைப்படுகிறான்.

உண்மையான பக்தன் இறைவனை எண்ணித் தவிக்கிறான். இறைவனோ, உண்மையான பக்தனைத் தேடித் தவிக்கிறான். இவன் தவிப்பை அவன் உணர்வான்; அவன் தவிப்பை இவர்கள் உணர்வார்கள்.

இப்பாசுரத்தில் உயிர்ச் சொல் ‘ஆராய்ந்து அருள்’ என்பது. இறைவா! நாங்கள் கேட்டு விடுகிறோம் என்பதற்காகவே எங்களுக்குத் தகுதி இல்லாத ஒன்றை நீ தந்து விட வேண்டாம்.

எங்களுக்கு எது தேவை என்பது குறைந்த அறிவு படைத்த எங்களைவிட நிறைந்த நல் ஞான மூர்த்தியான உனக்கு விளங்கும். எனவே, எங்கள் ஆசைக்கு நீ அருளாது, எங்கள் தேவையை ஆராய்ந்து அருள்செய். குழந்தை அழத்தான் செய்யும். அது எதற்காக அழுகிறது என்பது யாருக்கும் தெரியாது. அந்த குழந்தையின் தாய்க்கு மட்டுமே தெரியும். அதைப்போல இவர்கள் இறைவனிடம் சென்று பலவாறு பலவற்றைக் கேட்கலாம். ஆனால், இவர்கள் கோரிக்கையை ஆராய்ந்து அருள் செய்ய வேண்டியது அவனுடைய பொறுப்பு. எத்தனை அழகான ஆன்மீகச் செய்தி இது.

நப்பின்னைப் பிராட்டியின் தகவுரை (புருஷகாரம்) பெற்று வந்திருக்கும் இவர்களுக்கு அருள, கண்ணன் காத்திருக்கிறான் என்பதை மிகவும் நயமாக இந்தப் பாசுரம் வெளிப்படுத்துகிறது. ●

கட்டுரை

கரிக்கிணற்றில் கருகும் மானிடப் பிஞ்சுகள்





பேரா. தி. இராசகோபாலன்

இந்தியாவிலேயே சுற்றுச்சூழல் மாசுபட்டதில் முதலிடம் பெற்றது ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள 'ஜாரியா' என்ற நகரமாகும். நிலக்கரி கனிமத்தைத் தருவதில் சிறந்து நிற்கும் நகரமும் அதுவே. 19.4 பில்லியன் டன் நிலக்கரியை ஆண்டுதோறும் வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. 1916–ஆம் ஆண்டு ஒரு நிலக்கரிச் சுரங்கத்தின் அடியில் பற்றிய தீ, இன்னும் எரிந்து கொண்டிருக்கிறது.

அந்நகரில் நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் உரிமத்தைப் "பாரத் கோகிங் கோல் லிமிடெட்" நிறுவனம் பெற்றிருக்கிறது. ஜாரியாவில் பதினோராயிரம் வீடுகளில் வாழும் தொழிலாளர்களுக்கு, பாரத் நிறுவனம் நிலக்கரியை வெட்டி எடுப்பதில் வேலைவாய்ப்புகளை வழங்கி வருகின்றது. என்றாலும், பீகாரிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காகப் பசி, பட்டினியால் வாடிக் கொண்டிருந்த 65 விழுக்காட்டுப் பட்டியலினத்தார், ஜாரியாவில் பதுங்கிப் பதுங்கி வாழ்ந்து வருகின்றனர். அந்திப் பொழுதில் கள்ளத்தனமாகத் திருடும் நிலக்கரிதாம், அவர்களுடைய அடுப்புக்கே கோதுமை ஆகிறது.

நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து வெளியேறும் மெத்தேன், கார்பன் மோனோ ஆக்சைட், சல்பர்–டை–ஆக்சைடு போன்ற நச்சு வாயுக்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையை முற்றாகக் கெடுத்து வருகின்றன. இங்கு வாழும் மக்கள் காசநோய், ஆஸ்துமா, நுரையீரலைப் பற்றும் நோய்கள், தோல் நோய்கள் முதலியவற்றால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். இந்த நோய்கள் கருப்பை வரை தாக்குவதால் பிறக்கின்ற குழந்தைகள், மாற்றுத் திறனாளிகளாகவும், முழு வளர்ச்சியில்லாதவையாகவும் பிறக்கின்றன. 25 வயதுக்குள்ளேயே மாண்டு போகின்றவர்கள் எண்ணிக்கை மிகுதி!

பீகாரிலிருந்து 70000 கூலிகள் கள்ளத்தனமாக நிலக்கரிக் கிணறுகளைச் சூழ்ந்து குடியேறியிருக்கிறார்கள். பாரத் கோகிங் நிறுவனத்தார் சுரங்கங்கள் வழியாக நிலக்கரியை எடுத்த பின்னர், சுரங்கங்களின் வாயிலை மூடிச் செல்ல வேண்டும். ஆனால் பெரும்பாலான நேரங்களில் சுரங்கங்களின் வாயிலை மூடாமல் சென்று விடுவார்கள்.

முறையான தொழிலாளர்கள் வெளியேறிய பின், பீகாரிகள் திறந்து கிடக்கும் நிலக்கரிக் கிணறுகளின் வாயிலருகே தங்களுடைய 15 வயதுக்குட்பட்ட பிள்ளைகளை அழைத்துக் கொண்டு வருவார்கள். கிணறுகளின் குறுகிய வாயில்கள் வழியே தாங்கள் இறங்க முடியாது என்பதால் பிள்ளைகளின் கையில் கூடைகளைக் கொடுத்து உள்ளே இறக்குவார்கள்.

நெருப்பு கனன்று கொண்டிருக்கும் கிணறுகளில் அடியில் இறக்கி விடப்படும் பிள்ளைகள், பல நேரங்களில் கருகி மடிந்து விடுவதுண்டு. வருடந்தோறும் 25 பிள்ளைகள் நெருப்புக்கு இரையாகி விடுவதுண்டு.

கடந்த ஐந்தாண்டுகளில் 130 பிள்ளைகள் சுரங்கத்தின் அடியில் கருகிச் செத்திருக்கிறார்கள். ஏறத்தாழ 20000 பிள்ளைகள் கள்ளத்தனமாகக் கரிகளை அள்ளி வருவதற்காகப் பணிக்கப்படுகிறார்கள்.

18 வயதுக்கு உட்பட்ட எந்தச் சிறுவர்களையும் பணியில் அமர்த்தக் கூடாது என்று குழந்தைப் பராமரிப்பு (லேபர் ஆக்ட்) கூறுகின்றது. ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக நிலக்கரியும், மைகாவும் சேகரிக்கும் சிறுவர்கள் யாவரும் 16 வயதுக்கு உட்பட்டவர்களே! கரிக்கிணறுகளில் கருகும் மானிடப் பிஞ்சுகளின் மேல் கழிவிரக்கப்பட்டு ஏப்ரல் 5–ஆம் தேதி ‘இந்துப் பத்திரிகை’ ஒரு கட்டுரை வெளியிட்டது. அந்தக் கட்டுரையின் வெளிச்சத்தில் இந்த மானுட அவலம் பொறுப்புள்ளவர்களின் பார்வையில் தென்படலாயிற்று.

‘இந்து பத்திரிகை’க் கோடிட்டுக் காட்டிய கருத்துக்களின் அடிப்படையில் தேசிய மனித உரிமை ஆணையம் ஜார்கண்ட் மாநிலத்தின் முதன்மைச் செயலாளர் அசோக்குமார் சிங்கிற்கு அழுத்தமான குரலில் ஓர் மடல் எழுதியது. “ஹஷரியாபாக் மாவட்டத்தில் சட்டத்திற்குட்பட்டு எத்தனை சுரங்கங்கள் செயல்படுகின்றன? சட்டத்தின் கண்களுக்குத் தெரியாமல் எத்தனைச் சுரங்கங்கள் செயல்படுகின்றன? 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் எத்தனை பேர் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்? கரிக்கிணறுகளில் கருகிய சிறுவர் சிறுமிகள் எத்தனை பேர்? 100 நாட்களுக்கு வேலை தரும் மகாத்மா காந்தி தேசிய கிராம அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தாதது ஏன்? இதன் விபரங்களை 4 வாரத்தில் ஆணையத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும்” என எழுதப்பட்ட மடல் கிடப்பிலே போடப்பட்டது.

சில சமயம் இரவில் வலம்வரும் காவலர்களின் கையில் பிடிபடும்போது “ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?” என அவர்கள் கண்டிப்பார்கள். அதற்கு அந்தப் பீகாரிகள் “பசி பட்டினியால் சாவதைவிட, இப்படிப் பிழைப்பதற்குரிய விபத்துக்களில் சாவதுமேல்” எனக் கூறுகின்றனர். விபத்துக்குள்ளாகுபவர்கள் வெளி மாநிலத்தார் என்பதால், ஜார்கண்ட் அரசும் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. பீகார் அரசும், ஜாரியாவுக்கு ஓடியவர்கள் பட்டியல் இனத்தார் என்பதால் கவலைப்படுவதில்லை.

2018–ஆம் ஆண்டு மருத்துவர் குழு ஒன்று ‘கனிமப் பொருட்களைக் கவர்ந்து வருகின்ற சிறார்களைத் (6 வயதிலிருந்து 14 வயதுக்குட்பட்டவர்கள்) தேர்ந்தெடுத்துச் சோதனையிட்டதில் 650 பிள்ளைகள் வளர்ச்சிக் குன்றிச் சூம்பிப் போனவர்களாகத் (சோமாலியா சிறுவர்களைப் போன்று) தென்பட்டனர். 150 பிள்ளைகள் மூளை வளர்ச்சிக் குறைந்தவர்களாக இருந்தனர்.

2017–ஆம் ஆண்டு நடத்திய சோதனையில் 550 சிறுவர், சிறுமியர் மூளைவளர்ச்சிக் குன்றியவர்களாகக் காணப்பட்டனர். வயதுக் கட்டுப்பாட்டைத் தளர்த்திவிட்டுச் சோதனை செய்திருந்தால், பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருந்திருக்கும்’ என்று அந்தக் குழுவினர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

காலுக்குக் காலுறையோ, செருப்போ இல்லாமல் சுரங்கத்தினுள் இறங்கும் பிள்ளைகள் கள்ளத்தனமாகக் கூடையில் சுமந்து வந்த நிலக்கரியைப் பெற்றோர்கள் சுமந்துபோய், அதனை மலிவுவிலையில் வாங்குவதற்கென்றே காத்திருக்கும் வியாபாரிகளிடம் விற்று வருவர். சின்னஞ்சிறிய உணவுச்சாலை உரிமையாளர்கள், செங்கற்சூளை வியாபாரிகள் சொற்ப விலைக்கு அக் கரிக் கூடைகளை வாங்குவர்.

பாரத் கோகிங் நிறுவனம் 11000 தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு களைக் கட்டித் தந்திருந்தாலும் தொழி லாளர்கள் நச்சுக் காற்றால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். பாரத் கோகிங் நிறுவனம் தொழிலா ளர்கள் நலத்திற்காக அடிக்கடி மருத்துவ முகாம்களை நடத்தி, மருந்துப் பொருட் களை வழங்கி வந்தாலும், தொழிலாளர் கள் அந்த முகாம்களுக்குப் போவதில்லை.

பகற்பொழுதிலும் அனற்காற்று வீசிக் கொண்டிருப்பதால், தொழிலாளர் களின் குழந்தைகளும் நிர்வாகம் நடத் தும் பள்ளிகளுக்குப் போவதில்லை. நச்சுக் காற்றாலும், நச்சு நீராலும் பாதிக் கப்பட்ட தொழிலாளர் குடும்பத்திற்கு மறுவாழ்வுத் தர, “ஜாரியா மறுவாழ்வு அபிவிருத்தி வாரியமும்”, “பாரத் கோகிங் நிறுவனமும்” ஒரு திட்டத்தைத் தயாரித்தனர். அதன்படி 12 ஆண்டு களில் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்குப் புனர்வாழ்வு தர முடிவு செய் யப்பட்டது. மேற்கு வங்கத்திலிருந்து 11 இடங்கள் உட்பட 595 இடங்களைத் தேர்வு செய்தனர். 79000 குடும்பங்களை இடப்பெயர்ச்சி செய்ய ரூ.70 பில்லியன் களும் ஒதுக்கப்பட்டன.

திட்டம் தீவிரமாகத் தீட்டப் பட்டதே தவிர, அது நத்தை வேகத்தில் நகர்ந்து, நீர்த்துப் போயிற்று. பதினொரு ஆண்டுகளில் 3000 குடும்பங்களுக்குப் புனர்வாழ்வு தர “பெல்கோரியா” எனும் புதுநகர் உருவாக்கப்பட்டது.

நிலக்கரிச் சுரங்கங்களில் அடிக்கடி ஏற்படும் தீ வெடிப்புக்களால், ஜாரியா வைச் சுற்றியிருக்கும் சிற்றூர்களிலும் பாலைவனம் போல் அனற்காற்று வீசிக் கொண்டே இருக்கும். வீசும் காற்றில் கரித்தூள்கள் அட்டை அட்டையாய் ஒட்டிக் கொண்டிருப்பதால், வீடுகளில் இருப்பவர்களுக்கும் அடிக்கடி மூச் சடைப்பு ஏற்படுகின்றது. கனமான காற்றுப் புகையோடு வீசுவதால், குடும் பத்தினர் மூச்சுத் திணறலுக்கு உள்ளா கின்றனர். நாளடைவில் அவர்களுடைய முகங்கள் எல்லாம் கறுத்து விடுகின்றன.

அந்திப்பொழுது வருகின்ற போதெல்லாம் வீடுகளில் வசிப்போர் திகில் அடைந்து விடுகின்றனர். கரியை வெட்டியெடுத்த பிறகு சுரங்கத்தின்



வாயிலைத் தார்ப்பாயைப் போட்டு மூடி, அதன்மேல் தண்ணீரைத் தெளித்துவிட்டால், கரிக்காற்று வீசாது என்று சுரங்க நிர்வாகிகள் கூறு கின்றனர். பெரும்பாலும் அதனை அவர்கள் செய்வதில்லை.

நிலக்கரி, அனல் மின்சாரத் தொழிற் சாலைகளுக்கும், இரும்புருக்கித் தொழிற் சாலைகளுக்கும் மூலாதாரமாகப் பயன்படுவதால், நிலக்கரிச் சுரங்கங்கள், பணப்பெட்டிகளாகத் திகழ்கின்றன. சுற்றுச்சூழல் மாசுபடுத்தப்பட்டு மனித உயிர்கள் மரணக்குழிகளுக்குச் செல் வதைப் பற்றிக் கார்ப்பரேட் கம்பெனி கள் கவலைப்படுவதில்லை.

பீகாரில் பிழைப்பதற்கு வழியில்லாமல், பசி, பட்டினியால் வாடும் பாமர மக்கள், நிலக்கரி திருடுவதைத் தவிர வேறு வழிகளை எண்ணிப் பார்ப்பதில்லை. அந்த மக்களின் வயிற்றுப் பிழைப்புக்கு மாநில அரசுகளும் வழி தேடுவதில்லை. வயிற்றுப் பிழைப்புக்காகப் பெற்ற பிள்ளைகளையே மரணக் குழிகளில் இறக்குவதற்குப் பெற்றோர்கள் தயங்குவதில்லை. மனித உயிர்கள் மலிவுப் பதிப்புக்களாக மாறுவதைக் கண்டு நல்லவர்கள் நெஞ்சம் நடுங்குகின்றன. இன்னும் வெட்டி எடுக்கப் பட வேண்டிய நிலக்கரியின் மதிப்பு ரூ.60000 கோடி என்பதால் காண்டிராக்டர்களின் ஆசை அடங்கவில்லை.

நிலக்கரியை அடுத்து மானிடப் பிஞ்சுகளைக் கருக்கிப் போடுவது, மைகா எனும் கனிமம் ஆகும். பல ஆண்டுகளுக்கு முன்பேயே ஜார்கண்ட் மாநிலத்தில், மைகா தோண்டுவது தடை செய்யப்பட்டது என்றாலும், வெளியே தெரியாதவாறு காடுகளுக்கு இடையில் மைகா தோண்டுவது தலைமுறைவு வேலையாக நடந்து வருகிறது. மனித உயிர்களைப் போலக் காடுகளையும் மைகா பாழ்படுத்துவதால், 1980–ஆம் ஆண்டு காடுகள் பராமரிப்புச் சட்டத்தின்கீழ், மைகா தோண்டும் தொழில் மத்திய அரசால் தடை செய்யப்பட்டது.

ஜார்கண்டில் “கிரிடிக், கோடர்மா” மாவட்டங்களில் பசி பட்டினியால் வாடும் 5000 குடும்பங்கள் மைகா வெட்டும் தொழிலைச் செய்து வருகின்றனர். நிலக்கரிக் கிணறுகளின் வாயிலைப் போல் அல்லாமல், எலி வளைகளைப் போல் மைகா எடுக்கும் வாயில்கள் இருப்பதால், 16 வயதுக்குட்பட்ட சிறுவர்களையே இவ்வேலையில் ஈடுபடுத்தி வருகின்றனர்.

நிலக்கரியைக் காட்டிலும் பல மடங்கு கூடுதலாக நுரையீரல் வியாதிகளைத் தரக் கூடியது மைகா! மைகா வெட்டும் பணியில் ஈடுபடும் குடும்பங்களில் பலர் காசநோயால் மடிந்து வருகின்றனர்.

விமானத்தைக் கட்டமைக்கும் தகடுகளில் மைகா பயன்படுத்தப்படுவதால், இடைத்தரகர்களுக்கு இத்திருட்டுத் தொழில் பொன்முட்டையிடும் வாத்தாக அமைந்திருக்கின்றது. எலக்ட்ரானிக்கின் பாகங்களைத் தயாரிப்பதற்கும் வாசனைத் திரவியங்கள் தயாரிப்பதற்கும் மைகாக் கனிமம் பெரிதும் பயன்படுகிறது. ஜார்கண்டிலிருந்து கொல்கத்தா வழியாகச் சீனாவுக்கு இக் கனிமம் கடத்தப்படுகிறது. இரு சக்கர வாகனங்கள் 4 சக்கர வாகனங்களின் பாகங்களைத் தயாரிப்பதற்குச் சீனா மைகாவையே பயன்படுத்தி வருகிறது.

“மைகா தோண்டுவது சில தலைமுறைகளுக்கு முன்பே தடை செய்யப் பட்டிருந்தாலும், கள்ள வியாபாரிகள் இதனை அடர்த்தியான காடுகளிலேயே நடத்தி வருகின்றனர். அற்பக் கூலியைக் கொடுத்துவிட்டு, இடைத்தரகர்கள் கொள்ளை இலாபத்தைக் குவித்து வருகின்றனர்” என இந்திய தேசியச் சுரங்கத் தொழில் துறையின் செயலர் ரிஷிகேஷ் மிஸ்ரா, அரசாங்கத்திற்கு அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்.

“இப்படி மாசுபட்ட சுற்றுச்சூழல், ஜாரியாவும், கிரிடிக் கோடர்மாவையும் சூழ்ந்து கொண்டே போனால், எதிர் காலத்தில் “ஜாரியா” என்ற நகரமே இருக்காது. நச்சுப்பட்ட சுற்றுச்சூழல் எல்லாவற்றையும் தின்று, ஜாரியா இருந்ததற்குரிய நிழல்கூட இல்லாமற் போய்விடும்” என உறுப்பினர் சர்மாஜி அபாயச்சங்கை ஊதியிருக்கிறார்.

இந்நேரத்தில் “புஞ்சையுண்டு, நஞ்சையுண்டு, பொங்கிவரும் கங்கையுண்டு, பஞ்சம் மட்டும் இன்னும் இங்கு மாறவில்லை, எங்கள் பாரதத்தில் சோற்றுச் சண்டை தீரவில்லை” எனும் கவிதையை ஒருமுறை ஓங்கி ஒலிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

●

வாழ்விக்க வந்த பாரதி – 9

வாணி பூசைக்கு உரியவை...

கிருங்கை சேதுபதி



“செந்தமிழ் மணி நாட்டிடை உள்ளீர்! சேர்ந்து இத்தேவை வணங்குவம் வாரீர்” என்று பாரதி காட்டி வணங்கச் சொல்லும் வானவள். அதனால்தான்,

“வெஞ்ச மர்க்கு உயிராகிய கொல்லர் / வித்தை ஓர்ந்திடு சிற்பியர், தச்சர், / மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர், / வீர மன்னர் பின் வேதியர் யாரும் / தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்” என்று பாரதி பாடிக் காட்டுகிறார்.



இவை யாவும் சமயநெறி நின்று பௌராணிகர்கள் காட்டும் சரஸ்வதியின் அடையாளங்கள். அதே சமயம், ஆண்டு தவறாமல் அனைவரும் கொண்டாடும் ஆயுத பூசையை ஏற்கும் சரஸ்வதி தேவி அனைவருக்கும் பொது தெய்வமாவது, தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்.

‘தானே ஒரு தெய்வமாகவும் தரணியின் மீதுள்ள எல்லா தெய்வங்களையும் உண்டு என்றும் அது ஒன்று என்றும் உணர்ந்து உணர்த்திடும் தெய்வமாகவும்’ இது திகழ்வதை உணர்ந்த பாரதி, ‘தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்’ என்று குறிப்பிடுகிறார்.

அது வெள்ளைத் தாமரையில் பெண்ணுருக் கொண்டு வீற்றிருக்கிறது; வீணை செய்யும் ஒலியில் இருக்கிறது; கவிதைகூறும் பாவலர் உள்ளத்திலும், உணர்ந்து ஓதும் வேதத்தின் உள்ளும் இருந்து ஒளிர்கிறது. அத்தெய்வத்தை அன்னை என்று போற்றும் பாரதி, அவளுக்கு ‘வாணி’ என்று நாமம் சூட்டுகிறார்.

அவள் வஞ்சமற்றுத் தொழில் புரிந்து அதனால் பெறும் வருவாயால் உண்டு வாழ்கிற மாந்தர்களுக்கெல்லாம் குலதெய்வமாக விளங்குகிறவள்; குற்றம் அகன்ற தொழில்களாகிய சித்திரம், கோபுரம், கோயில் முதலிய அழகிய கலைச் சின்னங்களில் இன்பமே வடிவமாக இலங்குகின்றவள்.

அவளின் இருப்பிடத்தை நீள நினைந்து பாடும் பாரதி, மாதர்கள் பாடுகிற இனிய பாடலில் மட்டுமல்லாது, கீதம் பாடுகிற குயிலின் குரலிலும், கொஞ்சிப் பேசும் கிளியின் நாவிலும் இருப்பதாகச் சொல்கிறார்; மக்கள் பேசும் மழலையில் உள்ளாள் என்றும் காட்டுகிறார்.

இவளின் உன்னத நிலைப்பாடு, அறிவின் வெளிப்பாடு. அறிவு உலகப் பொது. அறிவு வந்தபிறகு, எது தீமை என்று தெரிந்துவிடும்; அதனைக் கொண்டு அத்தீமையை விலக்கிக் கொள்ள இயலும்; செய்தொழிலில் செம்மை நாடுவார்க்கும், உய்வழி தேடும் உள்ளத்தார்க்கும் உயிரினுக்கு உயிராக நின்று உதவிடும்.

உள்நின்ற அறிவாகிச் செயல்படுத்தும் இத்தெய்வம், “கைவருந்தி உழைப்பவர்

தெய்வம்; / கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம்" ஆகவும் விளங்குகிறது.

கடவுளர் தெய்வமாக, இத் தெய்வத்தை அடையாளம் காட்டுகிற சாக்கில், கைவருந்தி உழைப்பவர்களை யும், கவிஞர்களையும் தெய்வமாக்கி விடுகிறது, பாரதியின் அருள்வாக்கு.

படைத்தல் தொழில் புரியும் பிரமனுக்கு உற்ற துணையாக இவளை நிறுத்திக் காட்டுகிறது இந்திய மரபு. அதன்படி, இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வோரும் எந்திரங்கள் வகுத்திடுவோரும், கரும்பைச் சாறு பிழிந்திடுவோரும், கடலில் மூழ்கி நன்முத்தெடுப்போரும், அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவி மேல் ஆயிரம் தொழில் செய்திடு வோரும், மண்ணெடுத்துக் குடங்கள் செய்வோரும், மரத்தை வெட்டி மனை செய்வோரும், உண்ணக் காய்கனி தந்திடுவோரும், உழுது நன்செய்ப் பயிரிடுவோரும், எண்ணெய், பால் நெய் கொணர்ந்திடுவோரும், இழையை நூற்று நல்லாடை செய்வோரும், பாட்டும் செய்யுளும் கோத்திடுவோரும், பரதநாட்டியக் கூத்திடுவோரும் பிரம தேவனின் கலை என்று காட்டித் தெய்வ மாகப் போற்றிப் பாடுகிறார் பாரதி.

அந்தந்தத் தொழில்களுக்கு உரிய தன்மைகளையெல்லாம் பயிற்றுவிக்கும் அறிவாகிய தெய்வம் கலைவாணி அல் லவா? அவள் யாவர்க்கும் பொது வானவள் அல்லவா?

அவளுக்கு இதுவரை செய்துவந்த பூசனைகள் இனிச் செல்லுபடியாகாது; **'வந்தனம் இவட்குச் செய்வது என்றால், அஃது இங்கு எளிதன்று கண்டீர்'** என்று இந்தப் பாடலில் சொல்லுகிறார். "செந்த மிழ்மணி நாட்டிடை யுள்ளீர்! சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!" என்று அழைக்கிற பாரதி இத்தெய்வத்தை எவ்வாறு வணங்குவது என்றும் விளக்குகிறார்.

"வீடு தோறும் கலையின் விளக்கம், வீதி தோறும் இரண்டொரு பள்ளி; நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள் / நகர்கள் எங்கும் பலபல பள்ளி;" இவையெல் லாம் பாரதி பாடுங்காலத்தில் இல்லை. அவர் பாடியதற்குப் பின்போ, இல்லாமல் இல்லை என்கிற நிலை. அறம் பாடிய அக்கவியின் அருள் வாக்குப் பலித்ததன் பலன். ஆயினும் அவை தருகின்ற கல்வி அவர் கனவு கண்டதுபோல் இருக்கிறதா? என்பதுதான் அடிப்படைக் கேள்வி.

அது **தேடு கல்வி** என்று தெரிவிக் கிறார் பாரதி. அதன் அடிப்படைப் பண்பு, கேடு தீர்ப்பது; அது, தனக்கும் உலகுக்கும் பொதுவான உன்னதத்தைத் தந்து உயிர் வளர்ப்பது; நாளும் வளர் வது. அத்தகு கல்விக்குரிய தெய்வம் தான் அன்னையாகிய கலைவாணி. அவளை **'என் அன்னை'** என்று உரிமை யோடு பாடுகிற பாரதி, **அவள் கேண்மை கொள்ள வழி இவை** என்றும் கூறுகிறார்.

உரிமையுடனாகிய நட்புக்கு உரிய பெயர் கேண்மை. **'ஆய்ந்தாய்ந்து கொள் ளாதான் கேண்மை கடைமுறை தான் சாந் துயரம் தரும்'** என்று எச்சரிக்கிறது திருக்குறள். பலகாலும், பலவற்றானும் ஆராய்ந்துகொள்ள வேண்டியது நட்பு மட்டுமா? எல்லாச் செயல்களும் தானே. அவற்றுள் கல்வி முதன்மை யானது அல்லவா?

எல்லா வளங்களையும், எல்லா நலன்களையும் எல்லார்க்கும் பொது வாக்கி உயர்த்தவல்ல உன்னதமாகத் திகழ வேண்டும் என்பதால்தான், **'தேடு கல்வி'** என்று தெளிவிக்கிறார். அது இல்லாத ஊரே இருக்கலாகாது என்கிற ஆவேசத்தில்,

"தேடு கல்வியி லாததொர் ஊரைத் தீயி னுக்கிரை யாக மடுத்தல்" என்று தெரிவிக்கிறார். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழ மொழிக்கு மாற்றாக, 'தேடு கல்வி யில்லாததோர் ஊரைத் தீயினுக்கு இரை யாக மடுப்போம்' என்கிறார்.

இதற்கு 'தேடு, கல்வியிலாத ஊரை; அதனைத் தீயினுக்கு இரையாக மடுப் பதற்கு' என்று பொருள் சொல்வோரும் உண்டு.

'அதைத் தீவட்டி ஆக்கிவிடலா காது' என்று வேடிக்கையாகச் சொல் வார் ஜெயகாந்தன். அத் தீ எது என் பதைத் தெரிந்துகொள்ள, பாரதியின் வசன கவிதை பெரிதும் உதவும்.

"அறத்தீ, அறிவுத் தீ, உயிர்த்தீ, விரதத்தீ, வேள்வித் தீ / சினத்தீ, பகைத் தீ, கொடுமைத் தீ / இவையனைத்தையும் தொழுகின்றோம் / இவற்றைக் காக்கின் றோம்/ இவற்றை ஆளுகின்றோம் / தீயே, நீ எமது உயிர்த்தோழன்" என்கிற பாரதி,

"தீயே, நின்னைப்போல, எமதுள்ளம் சுடர்விடுக; தீயே நின்னைப்போல, எமதறிவு கனலுக" என்று தீயினுக்குத் தீபாராதனை காட்டித் தெரிவிக்கும் போது, தீயின் பரிமாணம் திவ்வியமான தாய், தீமையற்றதாய், நன்மை புரிவதாய், வணங்கத்தக்க அருட்பிழம்பாய் ஒளிர்வதைத் தரிசிக்கிறோம்.

'எங்கள் வேள்விக் கூடமதில் ஏறுதே தீ' என்று வேதப்பொருள் விளங்கப் பாடிய பாரதி, "தீ வளர்த்திடுவோம், பெருந்தீ வளர்த்திடுவோம்" என்று முழக்கமும் இடுகிறார்.

இப்பாடலில், 'ஆவியின் உள்ளும் அறிவின் இடையிலும் அன்பை வளர்த்து, விண்ணின் ஆசை வளர்த்து, களி ஆவல் வளர்த்து, தேவியின் மகனும் திறமைக் கடவுளும் ஆகிய தீயெனும் தேவனைப் போற்றிடுவோம்' என்று காட்டுகிறபோது, இத்தீ வேதியர் வளர்க் கும் முத்தீயினும் பெரிதாய் மூண் டெழுந்து, அறியாமை இருளை அறவே பொசுக்கிவிடுகிறது.

இந்த அக்கினிக் குஞ்சைத்தான், 'ஆங்கொரு காட்டினில் பொந்திடை வைத்து, காடனைத்தும் வெந்து தணிந்திட, தழல் வீரத்தில் குஞ்சென் றும் மூப்பென்றும் உண்டோ?' என்று பாடி, 'தத்தத்தரிகிட தித்தோம்' என்று வெறி கொண்டு ஆடுகிறார். இந்த



'அக்கினிக்குஞ்சு' பெண் கல்வியின் பெருங்குறியீடு என்பதைத் தனித்து விளக்க வேண்டும். அது ஞானத்தின் பெருவிளக்கமாகச் சுடர வேண்டும் என்பது பாரதியின் பேரவா.

புவி பேணி வளர்த்திடும் ஈசன், அதற்கு ஆதாரமாகிய ஞானத்தைப் பத்திரப்படுத்தி வைக்கத் தேர்ந்தது பெண்ணைத்தான். "பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்" என்பது பாரதியின் வாக்கு.

'அவள்வழி அனைவருக்கும் இந்த ஞானம் பரவும்; புவி பேணுதல் எளி தாகும்' என்பது இறைவன் கணக்கு. ஆனால், என்னாயிற்று?

'மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்' *விளைவு அஞ்ஞான இருளில் உலகம் மூழ்கிற்று. அதனை மீட்டெடுக்கத்தான் இந்த அக்கினிக்குஞ்சை அடையாளப் படுத்துகிறார் பாரதி. இது விடுதலை முத்தம்மாவின் கதைக்குள் இடம் பெறும் கவிதை. மண் விடுதலைக்கு வழிகாட்டும் பெண்கல்விக்கு வித்திடும் கனல் கவிதை.*

விடுதலை முழக்கத்தை மும்முறை எழுப்பும் பாரதியின் பிறிதொரு பாடல், ***'திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே'*** *என்று உறுதியளிக்கிறது.*

இந்தத் தேர்ந்த கல்விதான், 'சரஸ்வதிதேவியின் புகழ்' பாடலில் தேடு கல்வியாகப் பதிவாகிறது; அது திறமை கொண்ட, தீமையற்ற தொழிலாகச் சொல்லப்படுகிறது; அது ஞானம் எய்தி வாழ்வதற்கு வழிகாட்டி வளர்கிறது.

இதனைத் துணைக்கொண்டு உணர்ந்துகொள்ள, இதே பாடலில் இடம்பெறும், **'வஞ்சமற்ற தொழில்,** (குற்றம் ஆகிய) **கோது அகன்ற தொழில்'** என்ற தொடர்களையும் நெஞ்சகத்தில் கொள்வது நல்லது.

இது எண்ணும் எழுத்தும் மட்டுமே அறிவிக்கின்ற கல்வியாக முடங்கி விடாமல், எண்ணற்ற கலைகளையும் தொழில்களையும் வல்லமைகளையும் கொண்டுவந்து சேர்க்கின்ற கல்வியாக ஓங்க வேண்டும் என்பது பாரதியின் வேட்கை.

வயிற்றுப் பசிக்குச் சோறு எத்துணை இன்றியமையாததோ, அதை விடவும் வாழ்க்கைத் தேவைக்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது என்பது பாரதியின் துணிபு. அதனால்தான், முரசு பாடலில்,

"வயிற்றுச் சோறிட வேண்டும் / இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் / பயிற்றிப் பல கல்வி தந்து / இந்தப் பாரை உயர்த்திடவேண்டும்" என்று தெரிவிக்கிறார்.

இந்தப் **பல கல்வி** பலருக்குமான கல்வியாக இருக்க வேண்டும். இத்தகு கல்வி இந்த உலகின் பலநாடுகளிலும் சிறந்திருக்க, அடிமை இந்தியாவில் மட்டும் அவலம் உடையதாக இருப்பது கண்டு உள்ளம் குமுறுகிறார். ஓங்கு கல்வி, உழைப்பு எல்லாமும் மறக்கடிக்கப்பட்ட நிலையில் இந்தியா இருக்க, வளர்ந்த நாடுகள் இந்தக் கல்வியை எவ்வாறெல்லாம் வளர்த்தன என்பதைப் பாமரரும் ஏற்கும்படி இப்பாடலில் தருகிறார்.

ஊணர் தேசம் – ஆங்கிலேயர்களின் இங்கிலாந்து; **யவனர்தம் தேசம்** – கிரேக்கர்களின் கிரேக்கம்; **உதய ஞாயிற்று ஒளிபெறு நாடு** – ஜப்பான்; **சேண் அகன்றதோர் சிற்றடிச் சீனம்** – சீனம்; **செல்வப் பாரசிகப் பழந்தேசம்** – பாரசீகம்; **தோள்நலத்த துருக்கம்** – துருக்கி தேசம்; **மிசிரம்** – எகிப்து.

"சூழ்கடற்புறத்தில் இன்னும் / காணும் பற்பல நாட்டிடை எல்லாம் / கல்வித்தேவியின் ஒளிமிகுந்தோங்க" என்று வளரும் இப்பாடலின் பல்லவி மீளவும், "வெள்ளைத் தாமரைப் பூவினில் இருப்பாள்; வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்" என்று இணைகிறது.

பாடும் முறைமையில் இது மரபு என்றாலும் பாடும்போது புதிதாய் ஒரு பொருள் எழுந்து பாரதியின் ஏக்கத்தைப் பின்வருமாறு முன்வைக்கிறது.

உலக நாடுகளில் கல்வித்தேவதையாகக் கலைமகள் திருவோலக்கம் கொண்டிருக்க, உள்நாட்டில் மட்டும் இத்தேவி இன்னமும், வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள், வீணை செய்யும் ஒலியில் இருப்பாள் என்றால் இது வளர்ச்சியா? அவள் எழுந்து எல்லாரையும் எழுப்பிக் கல்வி வாயிலாக ஞானம் வழங்க வேண்டாமா? அதற்கான பூசனையைச் சிறப்பாகச் செய்ய வேண்டாமா? வேண்டும் என்று விரும்புகிறவர்கள், அதற்காக இங்கே எத்தனை கோயில்கள் எழுப்பிட வேண்டும்? என்னென்ன தருமங்கள் செய்திட வேண்டும்? என்று கேட்டிருப்பார்கள் போலும்.

அதனால்தான், அனைத்துத் தருமங்களையும் பட்டியலிட்ட பாரதி அவை அனைத்துக்கும் மேலான புண்ணியம் தரும் பொறுப்பான பணியினை, வாணி பூசைக்கு உரிய வழியினை அடுத்த பாடலில் கொடுக்கிறார்.

உலக நாடுகளில் உயர்ந்து ஓங்கி வளர்ந்து வரும் கல்வியைப் போல, தேடு கல்வியாக, பல கல்வியாக, இந்தியாவிலும் பயிற்றுவிக்கப்பெறுதலுக்கு அடிப்படையாகச் செய்ய வேண்டியதைக் கவித்துவமாகக் காட்டும் பாரதியின் பாடல் பலராலும் பல இடங்களிலும் மேற்கோள் காட்டப்பெற்று வருகிறது. எனினும் அதற்கு மேல்விளக்கமும் உண்டு என்பதை, பாரதியின் உரைநடைப் பதிவு நமக்கு உணர்த்தி நிற்கிறது. ●

கட்டுரை


காந்தியைப் பதிவுசெய்த மகாதேவ் தேசாய்

ஈரோடு ஜீவா




மகாதேவ் தேசாய், காந்தியின் நிழலாக வாழ்ந்து அவரது பேச்சுக்களையும், எழுத்துக்களையும், நிகழ்வுகளையும் பதிவிட்டவர். அவரது இந்த அருஞ் சேவை இல்லாது போயிருந்தால், மகாத்மா பற்றிய பல அரிய செய்திகள் தெரியாமலே போயிருக்கும்.

மகாதேவ் தேசாய், காந்திஜியின் காந்தி கதை பாடிப் புகழ்பரப்பிய நாராயண தேசாயின் தந்தையாவார். நாராயண தேசாய் மகாத்மாவின் வாழ்வை, “எனது வாழ்வே எனது செய்தி” என்ற தலைப்பில் நான்கு



100 தொகுதிகளுக்குப் பெரும் ஆதாரமாக உதவின. மகாதேவ் தேசாய் மகாத்மாவின் அன்புக்குரிய செயலாளராகவே கால் நூற்றாண்டுக் காலம் நிழலாக வாழ்ந்து சேவை செய்த பேறு பெற்றவர்.

மகாத்மாவுடன் தான் வாழ்ந்த ஒவ்வொரு நாளையும் அவர் தமது நாட்குறிப்பில் துல்லியமாகப் பதிவு செய்திருந்தார். அவற்றைப் பின் ‘நவஜீவன் பதிப்பகம்’ பல தொகுப்புகளாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து



காந்திஜியும்
மகாதேவ் தேசாயும்

தொகுதிகளாக எழுதியுள்ளார். அவை பெரும்பாலும் மகாதேவ் தேசாய் தொகுத்து வைத்திருந்த காந்திஜியின் தினசரி நிகழ்வுகள், கடிதங்கள், உரையாடல், கட்டுரைகள் எனத் தமது 25 ஆண்டுக் கால நெருங்கிய அமைதியான அர்ப்பணிப்புமிக்க தொண்டு வாழ்வின் சேமிப்புகளாகும்.

காந்திஜி குஜராத்தியிலும், இந்தியிலும் பேசிய, உரையாடிய நிகழ்வுகளைத் துல்லியமாகப் பதிவுசெய்து, பாதுகாத்து வைத்திருந்த தகவல் களஞ்சியங்களே, மகாத்மாவின்

வெளியிட்டது. அது காந்திஜியின் வாழ்வுக் குறிப்பு மட்டுமல்ல; இந்திய விடுதலைப் போராட்டத்தின் நெருக்கமான, விலைமதிப்பற்ற பதிவுமாகும்.

காந்திஜியின் புயல்சூழ்ந்த போராட்ட வாழ்வின் பதிவானது, அது இந்திய விடுதலைப் போரின் ‘வாட்டர்லூ’வான ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டக் காலப் பதிவு. ‘செய் அல்லது செத்துமடி’ என்று தேசத்திற்கு மகாத்மா கட்டளையிட்ட அறப்போராட்டத்தின் உச்சகாலப் பதிவுமாகும்.

மகாதேவ் தேசாய் ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றவர். அவர் 1915–இல் முதன் முதலாக காந்திஜியைச் சந்தித்தார். 1917 நவம்பர் 11 அன்று தன்னைக் காந்திஜியின் சேவகனாக, செயலாளராக அர்ப்பணித்துக் கொண்டார். தன் மரண காலம் வரை மகாத்மாவின் நிழலாகத் தொடர்ந்தார். அவர் தனது நாட்குறிப்பில் தன்னைப் பற்றி இல்லாமல், காந்திஜியின் தினசரி செயல்பாடுகளையே துல்லியமாகப் பதிவுசெய்து வைத்திருந்தார்.

எனவே, இவரை சாக்ரடீசுக்குக் கிடைத்த பிளேட்டோ, விவேகானந் தருக்கு வாய்த்த குட்வின். புத்தருக்குக் கிடைத்த ஆனந்தர் என்றே குறிப் பிடுவர். அவரது நாட்குறிப்புகள் 23 சுமார் 9500 பக்கங்கள் கொண்டது. 1936 முதல் 1942 வரையான டைரிகள் மட்டும் இன்னும் பதிப்பைக் காணாத ஆவணமாக உறங்குகின்றன.

அன்றைய இந்திய மற்ற சர்வதேச நிகழ்வுகள் பற்றியும், அவை குறித்த காந்திஜியின் கருத்துக்களும் அவற்றில் உள்ளன. மகாதேவ் பெர்சிய மொழி கற்கவும் முயன்றுள்ளார். சுருக்கெழுத்து மூலம் காந்தியின் விரைவான பேச்சுக் களை மட்டுமல்ல, அவர் வாய் வழி யாகச் சொன்னவற்றைக் கடிதங்களாக எழுதியவர். மகாத்மாவின் மனதில் பிரதிபலிப்பாக வாழ்ந்தவர்.

இதுபற்றி காந்தி, "அவர் எழுதி எழுதிக் குவித்த பல்லாண்டு காலப் பதிவுகளை ஒருவர் சீர்படுத்தித் தொகுக்கப் பல ஆண்டுகள் கடினமாக உழைத்தாக வேண்டும். தானே அதைச் சீர்படுத்தும் பணியையும் செய்ய விருப் பப்பட்டார். அவரைத் தவிர வேறு யாரும் செய்ய முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. தன் மரணத் திற்கு முந்திய நாள் இரவுவரை அவர் அப்பதிவுப் பணியைச் செய்து முடித்திருந்தார். நாம் அவற்றை இனி எப்படிப் பயன்படுத்தப் போகிறோம்?" என்று டாக்டர் சுசீலா நய்யாரிடம் காந்தி வேதனையுடன் கூறியுள்ளார்.

'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தை அறிந்த காந்தி 1942 ஆகஸ்ட் 8 அன்று கைது செய்யப்பட்டு, அகாகான் மாளிகையில் சிறை வைக்கப் பட்டார். அவருடன் கஸ்தூரிபாவும், மகாதேவ் தேசாயும் கைது செய்யப் பட்டனர்.

மகாதேவ் தேசாயின் காந்திஜி பற்றிய நாட்குறிப்பு புகழ்பெற்ற காந்தி ஜியின் முதலாவது பெரும் போராட் டமான சம்பரான் விவசாயிகளின் உரி மைப் போர் காலத்தில் தொடங்குகிறது. பெரிதும் அறியப்படாத புதியவராக இந்திய அரசியலில் நுழைந்த காந்தியை, இந்தியா அறிவதற்காக அறிமுகமாக இந்த அறப்போரும், அதன் வெற்றியும் அமைந்தன.

மகாதேவ் தேசாயின் எழுத்து பற்றி, "அவர் முதலில் காந்திஜியின் கடிதங் களை எழுதுபவராகவே இருந்தார். பின் காந்திஜியின் செயல்களையும், நிகழ்வு களையும் பதிவு செய்பவரானார். அவரது நாட்குறிப்புகள் அந்த எல்லை கடந்து வரலாற்றுப் பதிவானது. காந்தி தன் வாழ்நாளில் சந்தித்த பிரச்சினை கள், சவால்கள், கேள்விகள் அதற்கு அவர் கண்ட தீர்வு, விடைகாணும் முறை முதலியவற்றை உணர்த்துவதா கவும் இருந்தது. அறிமுகமற்ற சாதாரண மனிதராக இந்தியாவில் நுழைந்து, தன் பொதுவாழ்வைத் தொடங்கிய காந்தி யின் பரிணாம வளர்ச்சியின் படிகளை இப்பதிவில் காணலாம்" என்றார் மகாதேவ் தேசாயின் குஜராத்தி நாட் குறிப்புகள் நூலுக்கு முன்னுரை எழுதிய அவரது நண்பர் நார்ஹரி பரீக்.

சம்பரானில் போராடச் சென்ற காந்தி, ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி தரும் கடமையையும் ஏற்கிறார். அப் போது அங்கு அவர் தொடங்கிய பள்ளியை நிர்வகிக்கும் பொறுப்பையும் மகாதேவ்வும் அவரது துணைவியார் துர்கா பென்னும் ஏற்கிறார்கள். மெல்ல மெல்லக் கல்வி என்ற எல்லை தாண்டி உடல்நலம், கிராம நலம், தூய்மை, உணவு என அவர்களது கல்வி பல வழிகளில் விரிந்து சென்றது.

மகாதேவ் இறந்ததற்காக 'ஹரிஜன்' சிறப்பு அஞ்சலிச் செய்தியை வெளி யிட்டது. மகாதேவ் தேசாய் விட்டுச் சென்ற ஆசிரியர் பொறுப்பை காந்தி யின் மகன் பியாரிலால் ஏற்றார். அவர், "சூறாவளி வீசிய காலகட்டத்தில் உலகப் போர், ரௌலட் சட்ட எதிர்ப்புப்

போராட்ட வேளையில் மகாதேவ், நிழலாக பாபுஜியைத் தொடர்ந்தார். மௌனமான துணையாக ஊன்று கோல் போலத் திகழ்ந்தார்” என்று எழுதினார்.

பின் கிலாபத் இயக்கமும், ஒத்துழை யாமை இயக்கமும் நாட்டையே புரட்டிப் போட்டன. மகாத்மாவின் போராட்டத்திற்கு இணையாக மகா தேவ்வின் பதிவுப் பணியும் தொடர்ந் தது. மகாதேவின் நினைவாற்றல் வியக் கத்தக்கது. நாள் முழுவதும் பலருடன் பல்வேறு தலைப்புகளில் நடக்கும் விவாதங்கள், நிகழ்வுகளை எவ்விதக் குறிப்புமின்றி, அப்படியே பதிவு செய்யும் நினைவாற்றலும், திறமையும் அவருக்கு இருந்தது.

காங்கிரஸ் கமிட்டியின் தனிப்பட்ட செயற்குழுக் கூட்டங்களில் யார் யார் எதை எதிர்த்தும், ஆதரித்தும் பேசினர் என்பது மகாதேவ் தேசாயின் பதிவு இல்லாமல் போயிருந்தால், நாம் இன்று அவற்றைச் சரியாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாது போயிருக்கும்.

சமயத்தில் குறிப்பெடுக்கக் காகிதம் இல்லாது போனபோது, செய்தித் தாளின் ஓரத்தில்கூடக் குறிப்பெடுப் பார். சமயத்தில் ரூபாய் நோட்டும், உள்ளங்கையும் கூடப் பதிவுத்தாளாகி விடும். காந்திஜியின் உறுதியான நம்பத் தக்க ஆவணப் பதிவு மகாதேவ் என்றால் மிகையல்ல. காந்தி பேசியதை யாராவது தவறாக மேற்கோள் காட்டி னால், அது சரியா, தவறா என்று சரி பார்க்கும் இறுதி ஆவணமாக மகாதேவ் தேசாயின் பதிவே இருக்கும்” என்கிறார் பியாரிலால்.

மகாதேவ் ஓர் இதழியலாளராகவும் இருந்தார். காந்திஜியின் ‘ஹரிஜன்’, ‘நவ ஜீவன்’, ‘யங் இந்தியா’ போன்றவற்றின் ஆசிரியர் பொறுப்பை வகித்துள்ளார். ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ ஏட்டில் கட்டு ரைகளும் எழுதியுள்ளார்.

மகாதேவ் தேசாயின் மரணம் குறித்துப் புகழஞ்சலி எழுதிய பியாரிலால், “மகாதேவ், மகாத்மாவின் அனைத்துமாக இருந்தார். அவரது பயணம், சிறை செல்லல் முதலிய ஒவ்வொரு நிகழ்விலும் அவரது உடை, படுக்கை, உணவு, கைத்தடி, கழிப்புப் பெட்டி, காகிதங்கள் என அனைத்தை யும் குறைவின்றி ஏற்பாடு செய்பவர் அவரே. மிகச் சிறந்த கண்டிப்பான செய லாளராகவும் இருந்தார்.


போராட்டக் களத்தில் காந்திஜி

“அளவின்றி வரும் பார்வையாளர் களை வகைப்படுத்தி எப்படி, எத்தனை மணித்துளி என்று திட்டமிட்டு அனுப்பு வார். ஆசிரம நிர்வாகத்தைச் சீர்படுத்தி, சிக்கலின்றி நடத்தும் பொறுப்பும் அவரு டையதே. காந்திஜியின் பயணங்கள், உணவு நேரம், கடிதங்களை முறைப் படுத்துபவரும் அவரே. விருந்தினரைச் சேவா கிராமிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள மகன்வாடியில் குறைவின்றித் தங்கவைக்கக் கொளுத் தும் வெய்யிலிலும் ஓய்வின்றி அலைவார்.

“மகாதேவ், காந்திஜியின் செயலர் மட்டுமல்ல; சேவகர், பாதுகாவலர் என அனைத்துமாக வாழ்ந்தவர். அவரது நாள் காந்திஜி விழிக்கும்முன் தொடங்கி, அவர் உறங்கிய பின்னும் தொடர்ந்தது. அவருக்குப் பின் அவர் போல ஓர் உற்ற துணை காந்திஜிக்குக் கிடைக்கவே இல்லை” என்று எழுதினார்.

காந்திஜி, கஸ்தூரிபாவின் மரணத் தின் போதுகூடக் கண்ணீர் சிந்தாமல், உறைந்துபோய் விரக்தியில் அமர்ந்திருந் தார். ஆனால், மாரடைப்பால் திடீ ரென ஒருநாள் காலை இறந்த அவரது உடலின் அருகில் அமர்ந்து, “மகாதேவ்... மகாதேவ்...” என்று தட்டி எழுப்பிப் புலம்பினார். “மகாதேவ் என் குரலைக் கேட்டிருந்தால் நிச்சயம் எழுந்து வந் திருப்பார்” என்று புலம்பும் அளவுக்கு அன்பும் பாசமும் கொண்டவராக மகா தேவ் தேசாய் மகாத்மாவின் வாழ்வில் இடம்பெற்றிருந்தார். ●

இம்மாதத ராசி பலன்

**“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”**

1.1.2021 அன்று கோள்கள் நிலை

	செவ்வாய்	ராகு	
	3.1.2021 சுக்கிரன்–தனுசு 4.1.2021 புதன் – மகரம் 14.1.2021 சூரியன்–மகரம் 25.1.2021 புதன் – கும்பம் 27.1.2021 சுக்கிரன்–மகரம்		சந்திரன்
குரு சனி			
சூரியன் புதன்	சுக்கிரன் கேது		

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

மேஷம்



இம்மாதம் முற்பாதியில் சூரியன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், எந்த ஒரு காரியத்திலும் ஒன்றுக்கும் மேற்பட்ட முயற்சிகளால் வெற்றி பெறலாம். மாதத்தின் பிற்பாதியில் காரிய சித்தி ஏற்படும். நினைத்த காரியம் நிறைவேறும். தொழில் உத்யோகத் துறைகளில் ஈடுபாடு கொள்ளலாம். நன்மை உண்டாகும். தனம், பொருள் சேர்க்கை உண்டாகும். ராசி மீது செவ்வாய் சஞ்சரிப்பதால் முன்கோபத்தால் பிரச்சினைகள் உண்டாகலாம். சுக்கிரன் – கேது மாதத்தின் முதல் மூன்று நாள்களில் சில உடல் உபத்திரவங்களை ஏற்படுத்தலாம். சர்க்கரை பாதிப்பு உள்ளவர்கள், கவனமாக இருக்க வேண்டும்.

3–ஆம் தேதி முதல் சுக்கிரன் 9–இல் சஞ்சரிப்பதால் அபூர்வ வஸ்துக்கள் வாங்கலாம். குரு 10–இல் சஞ்சரிப்பதால் தனவரவு உண்டு. அதேசமயம் சிலர் செய்யும் தொழிலை விட்டுவிட எண்ணம் கொள்வர். 2–இல் ராகு சஞ்சரிப்பதால் முதலீடுகள் செய்வதில் கவனம் தேவை. வரம்பு மீறி வாக்குக் கொடுக்க வேண்டாம். திருமணம் முதலிய சுப காரியங்கள் ஈடேற வாய்ப்பில்லை. சனி 10–இல் சஞ்சரிப்பதால் பணியாட்கள் பிரச்சினை இருந்து வரலாம்.

ரிஷபம்



சூரியன் மாதத்தின் முற்பாதியில் எதிர்பாராத செலவுகள், பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் சிரமங்கள் அகன்றுவிடும். பெரியோர் சந்திப்பு, பயண அனுகூலம், தர்ம காரியங்களில் ஈடுபடுதல் முதலிய பலன்களை ஏற்படுத்தலாம். அவ்வப்போது சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும், பிறரது செல்வாக்கு மூலமாகக் காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். செவ்வாய் 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இயற்கையாக ஞாபக மறதியால் செய்யப்படும் காரியங்களால் விரயம் ஏற்படலாம். சிலர் சரியானத் தூக்கமின்றி அல்லல்படுவர். சனி – குரு சேர்க்கை 9–ஆம் வீட்டில் ஏற்படுவதால் செல்வாக்குப் பெறலாம்.

தூர தேசத் தொடர்புகளால் நன்மை உண்டாகும். ஆன்மீக நாட்டம் சிலருக்கு அதிகப்படும். சுக்கிரன் 8–இல் சஞ்சரிப்பதால் ஆடம்பரப் பொருள் பின்னம் ஏற்படலாம். வாகனங்களைக் கையாள்வதில் கவனம் தேவை. ராகு உங்கள் ராசி மீது குறிப்பாக மிருகசீரிடம் நட்சத்திரக்காரர்

களுக்கு உபாதைகள் ஏற்பட்டு நிவர்த்தியாகும். திருமணக் காரியங்கள் ஜனன ஜாதகத்தை ஆய்வு செய்து நடந்து கொள்ளலாம்.



இம்மாதம் சிறப்பானது அல்ல. மாதத்தின் முற்பாதியில் ரத்த சம்பந்தப்பட்ட உறவினர்களால் நன்மை, தீமை உண்டு. மாதத்தின் பிற்பாதியில் முயற்சியின் பேரில் சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தொழில்துறை சம்பந்தமாக இம்மாதம் எவ்வித முடிவையும் எடுப்பது கூடாது. செவ்வாய் 11–இல் சஞ்சரிப்பதால் உத்யோகஸ்தர்கள், அரசியல், அரசாங்கப் பிரமுகர்கள், சகோதர வர்க்கத்தார் மூலம் அனுகூலம் உண்டு. 8–இல் குரு – சனி சஞ்சரிப்பதால் இம்மாதம் சுப காரியங்களில் ஈடுபடுவது நல்ல பலனைக் கொடுக்காது. இவ்வருடம் திருமணக் காரியங்களும் தடைப்படும்.

ராகு 12–இல் சஞ்சரிப்பதால் தொடர்ந்து குல தெய்வ வழிபாடு தேவை. 6–இல் கேது சஞ்சரிப்பதால் உங்களது வசதி வாய்ப்புகள் சீராக அதிகரிக்கும். அடுத்த 1 1/2 ஆண்டுகள் சிறப்பானவை. 7–இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால், ஒருசிலர் பெண்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க வாய்ப்புண்டு. புதன் 7–இல் சஞ்சரிப்பதால் உறவினர்கள், தொழில் கூட்டாளிகள் வகையில் மிகுந்த எச்சரிக்கையுடன் பழக வேண்டும். தடைகள் அவ்வப்போது ஏற்பட வாய்ப்புள்ளதால் முயற்சிகள் அதிகம் வேண்டும்.



கடக ராசி அன்பர்கள் மாதத்தின் முற்பாதியில் குதூகலம் அடையலாம். சூரியன் 6–இல் சஞ்சரிப்பதால் தொழில், உத்யோகத் துறைகளிலும், பொருளாதார விஷயங்களிலும் நினைத்ததைச் சாதிக்கலாம். எதிர்ப்புகள் அகன்றுவிடும். ஆனால், மாதத்தின் பிற்பாதியில் சில பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். புதிய கூட்டாளிகள், கூட்டுத் தொழில்களில் இறங்க ஒருசிலர் முனையக் கூடும். ஏற்கனவே தொடர்புகளில் இருந்த கூட்டுத் தொழில்களிலிருந்து விடுபட்டு உங்களைவிட வசதியான, வயதானவர்களுடன் தொழில் உறவு ஏற்படலாம்.

சுபகாரியங்களில் சாதகமான சூழ்நிலைகள் ஏற்படும் வாய்ப்புண்டு. ஒரு சிலருக்கு இந்த ஆண்டு திருமண வாய்ப்புக் கூடி வரலாம். செவ்வாய் 10–இல் சந்திப்பதால் உங்களில் ஒருசிலர் புதிய அந்தஸ்து, அதிகாரம் கூட வாய்ப்புண்டு. சுக்கிரன் 6–இல் சஞ்சரிப்பதால் குடும்பப் பிரச்சினைகளைச் சிலர் ஏற்படுத்துவர். பெண்களை எதிரியாகப் பார்ப்பர். புதன் 6–இல் சஞ்சரிப்பதால் உறவினர்கள் சந்திப்பு ஏற்படும். புதிய தொழில் ஒப்பந்தங்களைச் சிலர் அடைவர்.



இம்மாதம் முற்பாதியில் முடிவெடுத்துச் செயல்பட இயலாது. இருப்பினும் சுக்கிரன் 5–இல் சஞ்சரிப்பதால், சில அதிர்ஷ்டங்கள் தேடி வரலாம். தனம், மன மகிழ்ச்சியான சம்பவங்கள் ஏற்படலாம். சூரியன் மாதத்தின் பிற்பாதியில் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தொழில், உத்யோகத் துறைகளில் அனுகூலம் ஏற்படும். முயற்சிகள் பலிதமாகும். சனி – குரு 6–இல் சஞ்சரிப்பதால் உடல் நலனில் அக்கறை வேண்டும். உறவினர்கள் வகையில் கருத்து பேதம் இந்த ஆண்டில் ஏற்பட வாய்ப்புண்டு. குரு நீசம் அடைந்திருப்பதால், திருமணம் முதலிய சுபகாரியங்களை ஓராண்டிற்கு அதாவது 2021 நவம்பர் வரை தள்ளிப் போடுவது நல்லது.

10–இல் ராகு சஞ்சரிப்பதால் தொழில் மாற்றம் குறித்த சிந்தனைகளே வரும் காலங்களில் உங்களிடம் அதிகம் காணப்படும். ஆனால் மாற்றங்கள் நடைபெறுமா என்பது கேள்விக்குறி. கேது 4–இல் சஞ்சரிப்பதால் தாய்வழி உறவினர் பாதிப்படையக் கூடும். புதிய முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்கலாம். கடன்பெற்றுச் சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். தொழில் துறையில் சிறிது நாட்கள் தடைகள், பாதிப்புகள் இருந்து வரும்.

இம்மாதம் முற்பாதியில் அலைச்சல் உண்டு. வீண்விரயம் ஏற்படும். வீடு, தோட்டம், மனைப் பராமரிப்பில் செலவு செய்ய நேரிடும். மாதத்தின் பிற்பாதியில் குழந்தைகளைப் பற்றிக் கவலைப்பட


கன்னி



நேரிடும். தொழில் உத்தி யோகத் துறைகளில் நிம்மதிக் குறைவு ஏற்படும். சனி – குரு – சூரியன் இணைவு ஏற்படுவ தால், அரசாங்கக் காரியங் களில் கவனம் வேண்டும். வாழ்க்கைத் துணைவருக்கு இம்மாதம் நன்மையாயினும் உடல் நலக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. திரு மணம் முதலிய சுபகாரியங்களில் எச்சரிக்கை யுடன் ஈடுபட வேண்டும். குரு நீசம் பெற்றிருப்ப தால், இவ்வாறான திருமணங்களில் நடைபெறும் திருமணங்கள் திருப்திகரமாக அமைவதில்லை.

8–இல் செவ்வாய் சஞ்சரிப்பதால் வம்பு வீடு தேடி வரும். நீங்கள் பொறுமையாக இருந்தாலும் சச்சரவுகளுக்கு வாய்ப்புண்டு. ராகு 9–இல் சஞ் சரிப்பதால், இந்த ராசியில் பிறந்த பெண்கள் குறிப் பாகக் கருவுற்ற பெண்கள் மருத்துவ ஆலோசனை களைக் கேட்டு நடப்பது நல்லது. வசதி வாய்ப்பு கள் மெல்ல அதிகரிக்கும். தாய்மாமன் வர்க்கத் தார் இவ்வருடம் சோதனைகளை அனுபவிப்பர். சிலர் முதியோர் இல்லம், ஆசிரமம் நோக்கிச் செல்லக் கூடும். புது முயற்சிகள் வேண்டாம். ▲


துலாம்



மாதத்தின் முற்பாதியில் சூரி யன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்ப தால், தொழில் உத்தியோகத் துறைகளில் அனுகூலம் உண் டாகும். தனவசதி கூடும். எடுத்த காரியங்கள் நிறை வேறும். மாதத்தின் பிற்பாதியில் வீடு, நிலம் சீர்திருத்தம் கருதிச் செலவு செய்வீர் கள். சிலரது சகோதர வர்க்கத்தார் சிரமங்களை வரும் ஓராண்டில் அடையக்கூடும். வயது முதிர்ந்த வர்கள் இருப்பின் அவர்களுக்கும் பாதிப்பு நேரக் கூடும். சுக்கிரன் 3–ஆம் வீட்டில் 3–ஆம் தேதி முதல் சஞ்சரிப்பதால் சுகபோக இச்சைகள் மிகும். 2–இல் கேது சஞ்சரிப்பதால், சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் உண்டு.

ராகு 8–இல் சஞ்சரிப்பதால் எதிர்பாராமல் தனவரவும் செலவுகளும் உண்டாகும். ராகு திசை நடப்பில் இருப்பவர்களுக்குச் சட்டச் சிக்கல் ஏற் படும் வாய்ப்புண்டு. திருமணக் காரியங்கள் தள்ளிப் போகலாம். சனி 4–ஆம் வீட்டில் சஞ்சரிப் பதால், குடும்பச் சிக்கல்கள் கவலை கொடுக்கலாம். சிக்கல்கள் உடனடியாகத் தீர வாய்ப்பில்லை. செவ்வாய் 7–இல் சஞ்சரிப்பதால் கணவன் – மனைவி சண்டைச் சச்சரவு ஏற்படும். கோபதாபங்களை அடக்கிக் கொள்வது நல்லது. புது முயற்சிகள் வரும் பங்குனி மாதம் தொடங்க லாம். தை, மாசி உங்களுக்கு ஆகாது. ▲

விருச்சிகம்



சூரியன் மாதத்தின் முற்பாதி யில் தொழில்வழி வருமானத் தைக் கூட்டும் வாய்ப்புண்டு. உங்கள் வாக்கு வன்மையால் காரியம் சாதிப்பீர்கள். மாதத் தின் பிற்பாதியில் தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில் உத்யோகம் சிறப்படை யும். தனம், பொருள் லாபமாகும். நல்ல தோற்றம், நல்ல செய்கையை வெளிப்படுத்துவீர்கள். செவ் வாய் 6–இல் சஞ்சரிப்பதால் அறுசுவை உணவை உண்பீர்கள். கார உணவுகள் அதிகம் சாப்பிடுவீர் கள். தலையிலும், வயிற்றிலும் சிலருக்கு எரிச்சல் ஏற்படலாம். யார் மீதாவது வழக்குத் தொடுக்க விரும்பினால் தாராளமாக இறங்கலாம்.

ராகு 7–இல் சஞ்சரிப்பதால் மாற்று மதக் காரர்கள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் பழக வேண்டும். மேலும் தகுதி குறைந்தவர்களால் உங் கள் வாழ்க்கைப் பாதையில் குறுக்கீடுகள் வரலாம். கேது ராசி மீது சஞ்சரிப்பதால், மறைபொருள் விஞ்ஞானத்தில் நாட்டம் வரும். ஞான மார்க்கத் தில் இருப்பவர்கள் அதீத சிந்தனைகளுக்கு ஆட் படுவர். தன்னிலை மறப்பர். சுக்கிரன் 2–இல் 3–ஆம் தேதி முதல் சஞ்சரிப்பதால் கைவிட்டுப் போன பொருள் திரும்பக் கிடைக்கும். மாதத்தின் பிற்பாதி புது முயற்சிக்கு ஏற்றது. ▲

தனுசு



தனுசு ராசி நேயர்களுக்கு இம்மாதம் முற்பாதியில் சிரசு வலி, ரோகம், மனச்சஞ்சலம், குழப்பம் நிலவக் கூடும். தேவை யற்ற மனஉளைச்சல் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் குழப் பங்கள் அகன்றுவிடும். பண வரவு, தொழில் உத்தியோக நன்மை ஏற்படும். நினைத்த காரியங்கள் நிறைவடையும். செவ்வாய் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் முடிவெடுப்பதில் சிரமம் ஏற்படும். உங்கள் முடிவுகளை அடிக்கடி மாற்றிக்கொள்ள வேண்டாம். சுக்கிரன் 3–ஆம்

தேதி முதல் ராசி மீது சஞ்சரிப்பதால் பகட்டாகக் காட்சியளிப்பீர்கள். ஏற்கெனவே நோய் நொடிகளுக்கு ஆளானவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

குரு 2–ஆம் வீட்டில் சனியுடன் சேர்ந்து சஞ்சரிப்பதால், சுப காரியங்களில் ஈடுபாடு கொள் ளலாம். உங்களிடம் கடந்த 2 1/2 ஆண்டுகளில் காணப்பட்டு வந்த சோர்வு, மனக்கஷ்டம், உடல் கஷ்டம் அகன்றுவிடும். 6–இல் ராகு சஞ்சரிப் பதால் ஆஸ்தி, அந்தஸ்து கூடும். எதிர்ப்புகள் மறைந்துவிடும். பிறரது சொத்து சுகங்களைப் பரா மரிக்கும் யோகம் உண்டு. கேது 12–இல் சஞ்சரிப் பதால் வித்தியாசமான கனவுகள் தோன்றும். அரிய பொருள் வாங்கலாம். திருமணம் முதலிய சுப காரியங்கள் ஈடேற வாய்ப்புண்டு.

மகரம்



சூரியன் மாதத்தின் முற்பாதியில் அரசாங்க உபத்திரவங்களை ஏற்படுத்தலாம். வீண்விரயம், பயணம், அலைச்சல் மிகும். மாதத்தின் பிற்பாதியில் தேவையற்ற பிரச்சினைகளில் இறங்கி வம்பு விவகாரங்களை அடைவீர்கள். நிதானமாகவும், அமைதியாகவும் செயல்படுவது நல்லது. சுக்கிரன் 3–ஆம் தேதி முதல் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், புத்திர வர்க்கத்தார் தேவையற்ற சட்டச் சிக்கல்களில் சிலர் சிக்கிக் கொள்ளவும் வாய்ப்புண்டு. செவ் வாய் 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இளைஞர் களின் நடத்தை விரும்பத் தகாததாகவும், பெரி யோர்களின் அபவாதத்தை அடையும் விதமாகவும் அமையும் வாய்ப்புண்டு.

ராகு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் போட்டித் தேர்வு எழுதும் மாணவர்கள், கணிப்பொறி, உயிரியல் தொடர்புடைய கல்வி கற்க விரும்புபவர் களுக்கு அனுகூலம் உண்டு. கேது 11–இல் சஞ் சரிப்பதால் ஞானவான்கள், பெரியோர்கள், சாதுக் கள் தொடர்பும், நட்பும், ஆலோசனையும் நன்மை பயக்கும். ராசி மீது குரு, சனி சஞ்சரிப்பதால் கட்டுப்பாடான, விருப்பமில்லாத நிலையில் பணி செய்ய வேண்டியதிருக்கும். திருமணம் இவ் வருடம் சந்தர்ப்பம் இல்லை.

கும்பம்



இம்மாதம் சூரியன் கலப்பான யோகத்தை ஏற்படுத்தக் கூடும். மாதத்தின் முற்பாதியில் பொருள் வரவும், பிற்பாதியில் அத்தியாவசியச் செலவும் ஏற்படும். அரசாங்க இடையூறுகள் ஒருசிலருக்கு ஏற்பட வாய்ப் புண்டு. சனி – குரு 12–இல் சேர்க்கைப் பெறுவதால், தர்மார்த்த காரியங்களில் ஈடுபட வாய்ப்புண்டு. ஒரு சிலர் வாழ்க்கையில் விரக்தி, வெறுப்பு காரணமாகத் தொலைத் தூரங்களுக்குச் செல்லவும் வாய்ப்புண்டு. 2–இல் செவ்வாய் சஞ் சரிப்பதால், சகோர வர்க்கத்தாரால் அல்லது நிலம், வீடும், வாகனம் தொடர்பான நன்மைகளை அடையலாம்.

ராகு 4–இல் சஞ்சரிப்பதால் போக்குவரத்து களிலும், நாற்கால் பிராணிகளிடமும் கவனம் வேண்டும். 10–இல் கேது சஞ்சரிப்பதால் தொழில் உத்யோகத் துறைகளில் பெரிய யோகங்களை அடைய இயலாது. ஏதோ ஒரு வகையில் கட்டுப் பட்ட சூழ்நிலையே இன்னும் சிறிது காலம் நிலவி வரும். சுக்கிரன் 11–இல் இம்மாதம் சஞ்சரிப்பதால் ஒருசிலர் பெற்றோரால் நன்மை அடைவர். திரு மணக் காரியங்கள் இவ்வருடம் நடைபெறும் வாய்ப்புக் குறைவு.

மீனம்




மீன ராசி அன்பர்களுக்கு இம் மாதம் அனுகூலமானதே. நண்பர்கள் உதவியும், பொருள் வரவும், தொழில் வகை உயர் வும் உண்டாகும். நினைத்த காரியங்கள் நிறைவடையும். தொழில்வழிப் பயணங்கள், குரு மார்கள் ஆதாயமும் உண்டு. செவ்வாய் 2–இல் சஞ்சரிப்பதால் சில நேரங்களில் உங்கள் பேச்சில் உஷ்ணம் கலந்திருக்கும். சில தண்டச் செலவுகளும் உண்டு. விவாதங்கள் ஏற்பட்டு வெற்றி கிடைக்கும்.

ராகு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சிறு குறு பயணங்கள் சிலருக்கு ஏற்படும். துணிவுடன் காரியமாற்றுவது நன்மை தரும். கல்யாணக் காரியங்களில் இறங்கலாம். இந்த ஆண்டு இந்த ராசிக்காரர்களுக்கு நன்மை ஏற்படும். ஒரு சில அன்பர்களுக்கு வயது முதிர்ந்தவர்களுடன் நட்புறவு ஏற்படும். ஏற்கனவே வழக்கு விவகாரங் களைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் விவகார வெற்றி அடைவர். புது முயற்சிகளை மார்கழி மாதமே தொடங்கலாம். வெற்றி கிட்டும். யோக மான மாதம்.

கட்டுரை

இந்து மதமும் மற்ற மதங்களும்

எஸ். ஆரோக்கியசாமி





இந்து மதம் என்றாலே சிலருக்குக் கசக்கிறது. இந்து மதத்தின் சிறப்பை அயல்நாட்டு அறிஞர்கள் புகழ்ந்துரைக்கிறார்கள். சகிப்புத் தன்மை நிறைந்த மதம் ‘இந்து மதம்’ என்று போற்றுகிறார்கள். அறம் சார்ந்த வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த மதம் இந்து மதம் என்கிறார்கள். ஆனால் இந்தியர்களில் சிலர் எப்போதும் இந்து மதத்திற்கு எதிராக அவதூறு கிளப்புகிறார்கள்.

இந்து மதத்திற்கு எதிராக அவதூறு பேசுபவர்கள் காந்தியக் காலத்திலும் இருந்தார்கள். காந்தியைச் சனாதனவாதி என்றுகூடக் குறை கூறினார்கள். அவதூறு கிளப்பியவர்களுக்கு அன்றே, மதங்களை எப்படிப் பார்க்க வேண்டுமென்பதற்கான விளக்கத்தை அளித்துள்ளார் தேசப்பிதா காந்தி.


“வேதங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதிகள், இராமாயணம், மகாபாரதம் யாவும் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை. அவற்றில் இடைச்செருகல்கள், திரிபுகள் நிறைய நடந்துள்ளன. அவற்றிலுள்ள மோசமான கருத்துக்களைக் கடவுளின் சொல்லாகக் கருத முடியாது. நல்லவற்றை மட்டுமே ஏற்க வேண்டும். அவற்றை மட்டுமே பின்பற்றத்தக்க முன்மாதிரியாகப் பயன்படுத்த வேண்டும்’’ என்கிறார் காந்தி. அந்த அளவுகோலை வைத்துப் பார்த்தால், இப்போது நல்லன மட்டுமே நடைமுறையில் உள்ளன.

இதிகாசங்களையும் புராணங்களையும் மதிப்பிடுவதற்கு அவை பிறந்த காலத்தில் நிலவிய சமூகக் கட்டமைப்பு முக்கியமானது. புராதனப் பொதுவுடைமைச் சமூகம், அடிமைச் சமூகம், நிலவுடமைச் சமூகம், முதலாளித்துவ சமூகம் என நான்கு வகையான சமூக அமைப்புகளை இது வரை கண்டுள்ளது மனிதகுலம்.

ஒவ்வொரு சமூக அமைப்புக்கும் ஏற்றவாறு மனிதகுலம் பின்பற்றிய கலாச்சாரம், பண்பாடு, உணவு, உடை எல்லாம் மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. மாறும் என்ற விதியைத் தவிர அனைத்தும் மாறும் என்று மார்க்ஸ் குறிப்பிட்டது இதைத்தான்.

புராதனப் பொதுவுடமைச் சமூகத்தில் போர் உள்பட அனைத்தையும் தலைமையேற்று நடத்தியவள் பெண். அதைப் ‘பெண்வழிச் சமுதாயம்’ என்றும் அழைத்தார்கள். கருவுருதல், பிள்ளை பெறுதல், குழந்தை வளர்ப்பு, மாதவிடாய் முதலிய இயற்கையின் விளைவாகப் பெண் தலைமை ஏற்பதில் தடங்கல் ஏற்பட்டது. ஆண் தலைமை ஏற்றுக் கொண்டான்.

அப்போதிலிருந்து ஆணுக்கு அடுத்த நிலையிலேயே பெண் இருந்து வருகிறாள். சிவனுக்கு அடுத்த நிலையில் பார்வதியையும், இராமனுக்கு அடுத்த நிலையில் சீதையையும் வைத்துப் பூஜிப்பது வழக்கமாகிவிட்டது. பைபிளும், குரானும் பெண்களை ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயே வைக்கின்றன. பைபிளில் கூறப்படுவதாவது :–


காந்திஜி


அம்பேத்கர்

“தமது சாயலாகவும் தமது உருவமாகவும் அந்தத் தேவன் பூமியின் மண்ணிலிருந்து மனிதனை உருவாக்கி, அவனது நாசியிலே அவரது மூச்சுக் காற்றை ஊதினார். ஆதாம் என்ற முதல் மனிதன் உருவானான். மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல. அவனுக்கு ஒரு துணை தேவை என்பதால், ஆதாம் என்ற முதல் மனிதனைத் தூங்க வைத்தார். அவன் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தபோது, அவனது விலா எலும்புகளில் ஒன்றை உருவி எடுத்தார். அந்த விலா எலும்புக்குத் தேவன் உயிரூட்டினார். அது ரத்தமும் தசையும் கொண்ட அழகிய பெண்ணாய் உருமாறிற்று.”

ஆணுக்குத் துணையாகவே பெண்ணைப் படைத்தார் இறைவன் என்கிறது பைபிள். இறைவனின் இந்தப் படைப்பு இலக்கணத்தை இஸ்லாமும் ஒத்துக் கொள்கிறது. உங்களிலிருந்து (ஆண்) உங்களுக்காகப் பெண்ணைப் படைத்தான் அல்லாக் குரான் (குரான் 16:72) என்றும் ஆண்கள் தான் பெண்களை நிர்வகிக்கக் கூடியவர்கள் (குரான் 4:34) என்றும் குரான் கூறுகிறது.

இதற்கு மேலும் விளக்கம் தரும் இஸ்லாமியப் பண்டிதர்கள், “இந்த வசனத்திற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. காரணம், பெண்கள் இயல்பிலேயே ஆண்களைவிடச் சக்தி பலம் குறைந்தவர்கள். ஆண்கள் செய்யும் வேலையைப் பெண்களால் செய்ய முடியாது. இப்படிக் கடமையில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்திக் காட்டிய இஸ்லாம், பெண்கள் சக்தி குறைந்தவர்கள் என்பதற்காக அவர்களை அடிமைப்படுத்தக் கூடாது என்று எச்சரிக்கிறது இஸ்லாம்” என்கிறார்கள்.


பாரதி


ராஜாஜி

பௌத்தத்தில் ஆண் துறவிகளை மட்டுமே அனுமதித்தார் புத்தர். பெண்களைப் பௌத்த துறவிகளாக்க வேண்டாம் என்று எச்சரித்தார். ஆக, அனைத்து மதங்களும் பெண்களை ஆண்களுக்கு அடுத்த நிலையிலேயேதான் வைத்தன.

மனு தர்மம் தடுத்திருந்தால், சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் இலட்சக்கணக்கான பெண்கள் பங்கேற்றது எப்படி? இந்திரா காந்தியும், மாயாவதியும், மம்தா பானர்ஜியும், உமாபாரதியும், ஜெயலலிதாவும் ஆடவர்களை எல்லாம் விரட்டி விரட்டி வேலை வாங்கினார்களே அது எப்படி?


ஊராட்சிப் பதவிகளில் இலட்சக்கணக்கானப் பெண்கள் கோலோச்சுகிறார்களே, எப்படி? ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., டாக்டர்கள், பொறியாளர்கள், விஞ்ஞானிகள் அதிகாரம் செலுத்துகிறார்களே எப்படி? இந்நிலையில், பெண் கல்வியை மறுக்கிறது மனுதர்மம், பெண்ணை இழிவுபடுத்துகிறது மனுதர்மம் என்று சொல்வது எந்த விதத்திலும் நியாயமில்லையே!


பாரதி கண்ட புதுமைப் பெண்ணைத் திருக்குறளில் தேடினால் ஏமாந்து போவோம். கற்பு நிலை என்று சொல்ல வந்தால் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்ற இன்றைய கருத்தை சிலப்பதிகாரத்தில் தேடக் கூடாது. இன்றைய அரசியல் சட்டத்தின் அம்சங்களை மனுதர்மத்தில் தேடினால் அது அறியாமை. ஏனெனில், காலங்களின் சமூகக் கட்டமைப்புகள் வெவ்வேறானவை.

பட்டியலினத்தைச் சேர்ந்த நீதிபதிகள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., டாக்டர்கள் என ஆயிரக்கணக்கில் பதவியில் அமர்ந்து அதிகாரம் செலுத்துகிறார்கள். நாடாளுமன்றத்தில் 148 பேர் பட்டியலினத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். பட்டியலினத்தவர்களைக் கல்வி கற்க கூடாது, உயர்ந்த பதவிகளுக்கு வரக் கூடாது என்று மனுதர்மம் தடுத்திருந்தால், இவர்கள் எல்லாம் எப்படி உயர்ந்திருக்க முடியும்?

தகுதியும் திறமையும் இருந்தும்கூட பீமராவ் ராம்ஜிக்குக் கல்வி கற்கத் தடைகள் ஏற்பட்டபோது, அந்தத் தடைகளை உடைத்து அவருக்கு உதவிக்கரம் நீட்டியது

அம்பேத்கர் என்ற பிராமணர்தானே! அந்த நன்றிக்காகவே தன் பெயரையே அம்பேத்கர் என்று மாற்றிக் கொண்டார், பீமராவ் ராம்ஜி.







25.11.1949 இல் அரசியல் சட்ட வரைவினை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த டாக்டர் அம்பேத்கர், “என்னைவிட அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் போன்ற திறமைவாய்ந்த சிறந்த பெரிய மனிதர்கள் வரைவுக் குழுவில் இருக்கும் போது, வரைவுக் குழுத் தலைவர் பொறுப்பு என்னிடம் ஒப்படைத்தது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது” என்று கூறினார். அவரை ஆச்சரியப்பட வைத்ததற்கு யார் காரணம்? தாழ்ந்து கிடந்த ஒரு சமூகத்திலிருந்து உயர்ந்து வந்த ஒருவரை மேலும் உயர்த்திப் பார்க்க வேண்டுமென்ற காந்தியின் ஆசைதானே இதற்குக் காரணம்.

அரசியலமைப்புச் சட்டம் வரைவுக் குழுத் தலைவராக டாக்டர் அம்பேத்கர் இருந்தார். இந்தக் குழுவில் கே.எம். முன்ஷி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டி.டி. கிருஷ்ணமாச்சாரி, என்.கோபால்சாமி அய்யங்கார், முகமது சாதுல்லா என்கிற அறுவரில் நான்கு பேர் பிராமணர்கள். இவர்களின் ஒத்துழைப்பு இல்லை என்றால், இவ்வளவு சிறப்பான சட்டத்தை இயற்றியிருக்க முடியாது என்று அந்த நான்கு பிராமணர்களையும் புகழ்ந்துரைக்கிறார் டாக்டர் அம்பேத்கர்.

அந்த நான்கு பிராமணர்களின் ஒத்துழைப்போடுதான் பட்டியலினத்தவர்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் இடஒதுக்கீடு கிடைத்தது. நேரு, ராஜாஜி இவர்களின் கொள்கையால் கிடைத்ததுதானே இடஒதுக்கீடு. இவர்களை எல்லாம் மனுதர்மவாதிகள் என்று சொல்வது நியாயமாகுமா?

எதிர்வினையாளர்களின் கூற்றுப்படி, மனுதர்மம் உருவாக்கியதல்ல வர்ணம், சாதி, தீண்டாமை. நிலவுடமைச் சமூகம் தன் தேவைக்காகத் தானே உருவாக்கிக் கொண்டவையே இவை. ஆன்மீகம், அரசாட்சி, வணிகம், உடலுழைப்பு இல்லாமல் ஒரு சமூகம் இயங்க முடியாது. இது இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் நான்கு வர்ணங்கள் இருந்தன. இப்போதும் இருக்கின்றன. அனைத்து மதங்களும் இதை அங்கீகரிக்கின்றன. திருக்குறள், தொல்காப்பியம் மற்றும் நமது இலக்கியங்கள் அனைத்திலும் இந்த நான்கு வர்ண சமூகக் கட்டமைப்பு பிரதிபலிக்கிறது.

வேலைப் பிரிவினையால் உண்டான நான்கு வர்ணங்கள் போலவே, தொழில் வேறுபாட்டால் சாதிகள் உண்டாயின. தொழில் பெருகப் பெருகச் சாதிகளும் பெருகின. தொழில் பெயரே சாதிப் பெயராக மாறின. பட்டியலினத்தில் மட்டுமே இருக்கும் சுமார் 1200 சாதிகள் உட்பட சுமார் 7000 சாதிகள் இந்தியாவில் உள்ளன. இந்த 7000 சாதிகளையும் மனு உருவாக்கினார் என்பது நம்பும்படியாக இல்லையே! அவர்தான் நான்கு வர்ணங்களையும் 7000 சாதிகளையும் உருவாக்கினார் என்றால் அத்தனை பெரும் சக்தி கொண்டவரா மனு, ஒத்துக் கொள்கிறோமா?

‘இந்தியாவில் சாதிகள்’ என்ற டாக்டர் அம்பேத்கரின் நூலில் “வர்ணம், சாதி, தீண்டாமையை மனு உருவாக்கவில்லை. மனுதர்மம் எழுதுவதற்கு முன்பே அது உருவாகிவிட்டது” என்று தெளிவாகக் கூறுகிறார். அவரின் ஆய்வைக்கூட ஏற்றுக்கொள்ள மாட்டோமா?

வர்ணம், சாதி தீண்டாமை, விதவை மறுமணம், அடிமைமுறை, குழந்தைத் திருமணம், கட்டுக் கதைகள், மூடநம்பிக்கைகள் என அனைத்தும் உலகம் முழுமைக்கும் பொதுவானவை. இதற்கான ஆதாரங்கள் பைபிள், குரான் உலக இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன. இதை இந்து மதத்தைக் குறை கூறுவோர் புரிந்துகொள்ள வேண்டும்.

இவையாவும் அக்காலச் சமூகக் கட்டமைப்பின் வெளிப்பாடு என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். தேசப்பிதா காந்தி வழிகாட்டியபடி மதங்களிலிருந்து நல்லனவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும். மற்றதை இடைச் செருகல் என்று விட்டுவிட வேண்டும்.

தேசியத் தலைமை வேறு! கட்சித் தலைமை வேறு!

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

அகில இந்திய காங்கிரஸ் கட்சி தற்போது சரியான தலைமை இல்லாமல் தடுமாறி வருவது அனைவரும் அறிந்த ஒன்று. அதற்காகத் தற்போதைய தலைமை தவிர்த்து அக்கட்சியில் உள்ள 23 தலைவர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கலாம் என்றால், மற்ற தலைவர்கள் ஏகமனதாக அவரை ஏற்கமாட்டார்கள். ஆகவே, காங்கிரஸ் பேரியக்கத்திற்குத் தலைமை ஏற்கத் தயங்கும் பிரியங்கா காந்திக்கு ஊக்கமும், முழு ஆதரவும் அனைத்துக் காங்கிரஸ்காரர்களும் கொடுத்து, அவரை அகில இந்தியத் தலைமையில் அமர்த்த வேண்டும். எதிர்காலத்தில் அவர் தேசியத் தலைமைக்கு ஏற்றவராகக்கூட மாறக்கூடும்.

– **கோ.செ.மு. கந்தசாமி பாண்டியன்,** திருப்பூர்.

மத்திய அரசின் 12 திட்டங்கள், மாநில அரசுகளின் 52 திட்டங்கள், 28 விளையாட்டுக்கள், 19 விளையாட்டு அரங்குகள், 5 விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள், 98 கல்வி நிறுவனங்கள், 51 தேசிய விருதுகள், 15 உதவித்தொகை நிதிகள், 16 தேசிய சரணாலயங்கள், 39 மருத்துவக் கல்வி நிலையங்கள், 74 நெடுஞ்சாலைத் திட்டங்கள் எல்லாவற்றிலும் நேரு குடும்பத்தினர் பெயர்கள் தான் உள்ளன. இருந்தும் பயனில்லை. காங்கிரஸ் இனி வளர்வதற்கு வாய்ப்பில்லை. காங்கிரஸ் அதன் வீழ்ச்சியிலிருந்து இனி மீளவே இயலாது.

– **இரா.கல்யாணசுந்தரம்,** மதுரை.

நாடு சுதந்திரமடைவதற்காகத் தன்னுயிரை ஈந்து பல தியாகங்களைச் செய்த தேசத் தலைவர்களால் கட்டமைக்கப்பட்ட பாரம்பரியமிக்கது காங்கிரஸ் கட்சி. அண்ணல் காந்திக்குப் பின் நேரு தலைமை ஏற்றுப் புதிய இந்தியாவை நிர்மாணிக்க அரும்பாடுபட்டார். அவருக்குப் பின் இந்திராகாந்தி தலைமை ஏற்றுப் பல அரிய செயல் திட்டங்களை நிறைவேற்றி, இறுதியில் மிசா சட்டத்தைக் கொண்டுவந்து நற்பெயரை இழந்தார். இதற்குபின் வந்தவர்களின் செயல்பாடுகளாலும், புரிந்த ஊழல்களினாலும் மக்கள் மத்தியில் காங்கிரஸ் செல்வாக்கை இழந்துவிட்டது. சோனியா காந்தி, பிரியங்கா மற்றும் ராகுலாலும் இனிக் காங்கிரஸை ஒருக்காலும் தூக்கி நிறுத்த முடியாது.

– **பே.சண்முகம்,** செங்கோட்டை.

காங்கிரஸ் பேரியக்கத்தைக் கட்டிக் காப்பாற்றிய நேரு, இந்திராகாந்தி போன்றவர்களின் அரசியல் அர்ப்பணிப்பும் நிர்வாகத்திறனும் அகிலம் அறிந்தது! தொடர்ந்து அந்தப் பொறுப்புக்கு வந்த ராஜீவ்காந்தியால் தன் மூதாதையர் வழியைப் பின்பற்றி நல்லாட்சி தருவதற்கு முயன்று தோல்விகளையே சந்தித்தார். அவரது படுகொலைக்குப் பின்னர் தலைமை இடத்துக்கு வந்த ராகுல்காந்தி இளையவர், அறிவுமுதிர்ச்சி அனுபவமின்மையால் தன்தோன்றித்தனமான கருத்துக்களை அள்ளி வீசுகிறார் என்ற அவப்பெயரும் அவருக்கு வந்தது. இதற்கிடையே சகோதரி பிரியங்கா காந்தி கட்சியில் இணைந்தபோது, அது குடும்பக் கட்சியாக வாரிசு அரசியலாக்கம் செய்யப்பட்டு, அடுத்தடுத்து வந்த தேர்தல்களில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது. கட்சியைத் துக்கி நிறுத்துவதற்கான சூழல் அருகிவருவதாகத்தான் தெரிகிறது.

– **நவீன்குமார்,** நடுவிக்கோட்டை.

வாரிசு அரசியல் இருக்கும்வரை காங்கிரஸ் வீழ்ச்சியிலிருந்து மீண்டு எழ முடியாது. ராகுல் காந்தி தலைமையை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நடந்து முடிந்த இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களின் மூலம் தெளிவாகிறது. காங்கிரஸ் கடசியின் மூத்த தலைவர்கள் ஒன்றுகூடி மக்களிடையே செல்வாக்கும், ஆளுமையும், நாட்டுப்பற்றும், பணம், பதவிகளில் பற்றற்ற சேவை மனப்பான்மையை இலட்சியமாகக் கொண்ட ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் தலைமை ஏற்கச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் மீண்டும் காங்கிரஸ் கட்சி வலுப்பெற்றுப் பயணத்தைத் தொடர வாய்ப்பிருக்கிறது. இதற்கு வலுவான எதிர்க்கட்சி தேவை.

– **மு.கணபதி,** பெருந்துறை.

காங்கிரஸ் என்றால் இன்றைய கண்ணோட்டத்தில் சோனியாவும் பிரியங்காவும்தான்

என்பதுவும் இவர்களில் எவரொருவராவது இந்திய தேசத்திற்கு நேருஜிக்குச் சமமான இந்திராஜிக்குச் சமமான ஒரு தேசியத் தலைவரைத் தர முடியாது என்பதுவும் உண்மைதான். ஆனால் தலைமையை மாற்றினால் அது மீண்டும் எழுச்சியுடன் தன் பயணத்தைத் தொடங்க முடியும். மோடி ஒரு சில நல்ல காரியங்களைச் செய்திருக்கிறார். ஆனால் அவரின் பண மதிப்பிழப்பு நடவடிக்கை, சரக்கு மற்றும் சேவை வரியை அமல்படுத்தியது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. அவர் கொண்டுவந்த வேளாண் சட்டத்திற்குக் கடும் எதிர்ப்பு இருந்தும் அதை விடாப்பிடியாக அமலாக்கத் துடிப்பது நன்றன்று. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, மதவாத அரசியல் நடத்தி வரும் மோடி ஒருபோதும் தேசியத் தலைவராக முடியாது.

– **உ.மு.ந.ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

'**தே**சியத் தலைமை வேறு, கட்சித் தலைமை வேறு' என்பது உண்மையில்லை. கட்சி என்பதே தேசிய நாட்டில் பலர் ஒரு மனதாக உருவாக்கப் பட்டதுதானே? அப்படி இருக்க தேசியத் தலைமை, கட்சித் தலைமை என வேறுபடுத்துவது எதற்கு? காங்கிரஸ் என்றாலே சோனியா, ராகுல், பிரியங்கா நினைவிற்கு வருவது அந்தக் கட்சிக்கு அடித்தளம் அமைத்தவர்களுக்குக் கிடைத்த வெற்றி. அதற் கான தலைமையை மாற்றுவதால் எந்த வெற்றியும் வந்துவிடாது. தலைமையை மாற்றாமலே இவர் களாலேயே காங்கிரஸ் கட்சியை நல்ல நிலைக்குக் கொண்டுவர முடியும்.

– **உஷாமுத்துராமன்**, திருநகர்.



எதிர்க்கட்சி அந்தஸ்தை என்றைக்குக் காங் கிரஸ் இழந்ததோ, அன்றைக்கே அதன் அஸ்த மனம் தொடங்கிவிட்டதாக அர்த்தம். தலை மைக்கு இது தெரியவில்லையே! வழிநடத்தத் தெரியும் தலைமை தானாக வரவேண்டும். வலிந்து கொண்டு வர முடியாது. வாரிசும் தலைமை தர முடியாது. இதற்குத் தமிழக வெற்றிடமே சாட்சி! ஆனால் முன்பு நேருஜியின் இடத்தைச் சிறிய இடைவெளிக்குப் பின் இந்திராஜி பிடித்தார் என்ப தையும் மறுக்க முடியாது. அதற்குப்பின் ஒரு தேசியத் தலைமையாக ஜோதிபாசு உருவாகி இருக்க முடியும். கட்சியின் கரங்கள் அதை இறுக்கிவிட்டன. இனி காங்கிரஸ் இயக்கத்தில் உள்ள இளையவர் எல்லாம் இணைந்து ஒரு புதிய தேசியத் தலைமையைக் கண்டுபிடித்தால் தான் இந்த நாட்டுக்கு நல்லது! அதாவது காங்கிரஸ் இயக்கத்தில் முதியவர்கள் ஆலோசகர்கள் ஆகி இளையவர்கள் திரண்டு புதிய இயக்கம் உரு வாக்க வேண்டும் என்பது காந்திய, நேதாஜி சிந்தனை உள்ளவர்களின் பேராசை!

– **சீத்தலைச்சாத்தன்**, திருப்பத்தூர்.

இந்திய நாட்டின் முதல் பிரதமர் ஜவகர்லால் நேருவும், தமிழ்நாட்டின் முதல்வாரன காமராஜரும் பொற்கால ஆட்சிசெய்த புனிதத் தலைவர்கள். பாரதீய ஜனதா கட்சியின் நரேந்திர மோடி குஜராத் தின் முதல்வராக இருந்தவர். இன்று இந்தியப் பிரதமராக இருந்து வருகிறார். பாரதீய ஜனதாக் கட்சிக்குப்பின் ஆட்சி மாறிக் காங்கிரஸ் கட்சி வந்து நல்லாட்சி தர வேண்டும். அடுத்து சோனியா காந்தியின் புதல்வி பிரியங்கா காந்தியோ, மகன் ராகுல் காந்தியோ பிரதமராக ஆக வேண்டும்.

– **அர.கோ.குப்புசாமி**, தாதம்பட்டி.

காங்கிரஸ் கட்சி தன்னை முன்போல் நிலை நிறுத்த வாரிசுத் தலைமையை ஒழித்துக் கவர்ச்சி யும் திறமையும் அர்ப்பணிப்பும் உடைய இளந் தலைவரைத் தேர்ந்தெடுத்து அவரைப் பிரபலப் படுத்த வேண்டும். ஆனால் இது மோடியின் தற்சமய அலையினால் சாத்தியமில்லை. இலவு காத்த கிளி போலக் காத்திருக்கலாம்!

– **அ. அழகையா**, மதுரை.


கட்சித் தலைமை என்பது ஒரே கட்சி ஆட்சி யில் இருந்தால் மட்டுமே தேசியத் தலைமைக்குக் கட்டுப்படும். சிறந்த கட்சி என்பது மக்களின் நலனில் அக்கறை கொண்டு அணுக வேண்டும். நேருஜியின் ஸ்திரத்தன்மையும் இந்திராஜியின் தொலைநோக்குக் கொண்ட தைரியமும் இன்றைய ஆட்சியாளர்களிடம் இல்லாதது பெருங்குறை. இந்தியப் பாரதக் கண்டத்தில் 1947

அட்டைப்பட விளக்கம்

ஜனவரி 12 : ஞான சூரியன் சுவாமி விவேகானந்தர் உதித்த தினம். புதிய சிந்தனைகள் பிறக்கட்டும்!

உலகம் முழுவதையும் இனிவரும் 200 ஆண்டுகளுக்கும் உண்மையான சமயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தூண்டிய தத்துவஞானி சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் ஜனவரி 12. அவருடைய பிரசித்திபெற்ற தலைப்பாகைப் படத்தைத்தான் அநேகம் பேர் பார்த்திருப்பார்கள். அட்டைப் படத்திலுள்ள மற்ற படங்கள், அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள மக்கள் அவரை இந்தந்தக் கோலங்களில் பார்த்து வணங்கியுள்ளனர்.

இவற்றையெல்லாம் உள்வாங்கி நெஞ்சில் கல்வெட்டுப் போலப் பதித் திருந்த பிரபல கார்ட்டூனிஸ்ட் மதி அவர்கள் 'ஓம் சக்தி'க்காக வரைந்து அட்டைப் பட ஓவியத்தை வழங்கியுள்ளார்.



சுதந்திரத் துக்குப் பின் ஒரு புதிய நாட்டை உருவாக்கிய பெருமை இந்திராஜிக்கு உண்டு. இப்படிப்பட்ட சிறந்த தலைவர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியில் தற்போதைய தலைவர்கள் பெரும்பாலும் சுயநலவாதிகளாகவே இருக்கிறார்கள்.

– **தி.இராதாகிருட்டிணன்,** அரூர்.

கட்சியைத் தன் கட்டுக்குள் வைத்திருக்கும் தலைவரால்தான் நாட்டின் தலைவராகப் பரிண மிக்க முடியும். காந்தியண்ணல் கட்சியைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால்தான் நேதாஜி யின் எதிர்ப்பை மிக எளிதாக முறியடித்தார். அதைப் போலத்தான் நேருவும் தேசத் தலைவராக உயர்ந்தார். அவரைத் தொடர்ந்து இந்திராவும் இரும்புப் பெண்மணி எனப் புகழுமாறு இமாலயச் சாதனைகளை எளிதாகச் செய்து முடித்தார். இப் போது கட்சியையே தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்க இயலாதவர் எப்படி நாட்டின் தலைவராகத் திகழ முடியும். அதனால்தான் காங்கிரசுக்கு இந்த நிலைமை. தேசியப் பிரச்னைகளை முன்னெடுத்து மக்களுடன் போராட வேண்டும். ராகுல் தன்னுள் இருக்கும் அச்சத்தை, இயலாமையை உதறித் தள்ளி, முடியும் என்ற தன்னம்பிக்கையோடு நேரு வின் பரந்த மனப்பான்மையுடன் இந்திராவின் துணிச்சலுடனும் செயல்பட முன் வந்தால், காங் கிரசின் வீழ்ச்சியை ஒருவேளை தடுக்கலாம்.

– **புலவர் கருமலைத்தமிழாழன்,** ஒசூர்.

தேசியத் தலைமை வேறு; கட்சித் தலைமை வேறு எனப் பிரித்துக் கூறிய பான்மை சரியானதே. பண்டித நேரு உலக அரசியல் அளவில் தலைவர். அத்துடன் தேசியத் தலைவரும் ஆவார். விவாதக் கட்டுரை கூறும் காங்கிரஸின் தலைதூக்காத பலவீனத்தைச் செய்தவர் இந்திரா என்பதால், நூல் அறுந்த பட்டம் போல் தலைமை பறிபோய்விட்டது அவருக்கு! மோடி அவர்கள் அப்பழுக்கற்ற நல்ல தொரு துறவி போன்றவர்தான் என்றாலும் கடி தோச்சி மெல்ல எறியும் ஆளுமையும் அரவ ணைப்பும் வளரவளரவே இந்தியாவுக்கான புதுத் தலைமைக்கு அவர் இலக்கணம் ஆவார் என்பதே உண்மை.

– **தெ.முருகசாமி,** புதுச்சேரி.

குடும்ப அரசியலோ, வாரிசு அரசியலோ தேசியத் தலைமையை உருவாக்க இயலாது என் பதைக் காலம் நமக்கு உணர்த்தியுள்ளது. இன் றைய நிலையில், கண்ணிற்கும் கருத்திற்கும் எட்டிய வகையில் எந்த தேசியத் தலைமையும் உரு வானதாகவோ உருவாவதாகவோ தெரியவில்லை. உருப்படியான, ஒழுங்கான தேசியத் தலைமை ஒன்று உருவாகி வரும்வரை பொறுமையுடன் காத் திருப்பதைத் தவிர இந்திய மக்களுக்கு வேறு வழியில்லை.

– **மேலை. தமிழ்க்குமரன்,** முத்தரசநல்லூர்.

இன்றைய ராகுல் காந்தி, சோனியாஜி, பிரியங்கா போனறவர்கள் நேருஜி, இந்திராகாந்தி யின் வழிவந்தவர்கள். இவர்களெல்லாம் காங்கிரஸ் கட்சியில் தோல்வியைத்தான் காண முடிந்தது. மக்களைத் தமது பின்னால் கொண்டு வர இயலவில்லை. மோடிஜி பதவிக்கு வந்த உடனே தன்னைப் பலப்படுத்திக் கொண்டார். மக்கள் மோடி மீது பற்று வைத்திருந்தாலும் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல் குளறுபடிகளைச் செய்து வருவதாலும் கட்சியில் நீடிக்க வழியில்லை. வலதுசாரிகளும் இடதுசாரி களும் வரவாய்ப்பில்லை.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
4.4.4
FORCE
GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை–18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940



இரா. பொன்னாண்டான்

உழவனே நம் தெய்வம்...



உழவன் வயலை உழுதால்தான்
உலகோர் உலை பொங்கும்.
ஆனால் –
உழவன் மனமோ தினமும்
போராட்டத்தால் பொங்குகிறதே...

கத்தரிப் பூவைக் களவாட வந்த
காய்ப்புழுவிடம் போராட்டம்!

நெல் கதிர் வரும் நேரத்தில்
அதன்
கர்ப்பத்தைக் கலைக்கத் துடிக்கும்
நோயிடம் போராட்டம்!

வாழைத் தார் ஈன்று
கைக்குழந்தையுடன் நிற்கும் ஒரு நாளில்
அதன்
கழுத்தை நெரிக்க வரும்
காற்றுடன் போராட்டம்!

விளைந்த கரும்பின்
இனிக்கும் சாறைப் பிழிந்து
கசக்கும் விலையோடு போராட்டம்!

இப்படி
விளைந்த தானியத்தை
வீட்டுக்குக் கொண்டு செல்வதற்குள்
பறவைகளோடும் விலங்குகளோடும்
போராட்டம்!

சந்தை வீதிக்கு
சந்தோசத்தோடு சென்றால்
விலைக்கும் செலவுக்கும்
வித்தியாசமில்லாதப் போராட்டம்!

உலகோரே வாருங்கள்!
உண்ண உணவு கொடுத்த
உழவனே நம் கடவுளாய் எண்ணி
உயர் பொங்கல் செய்வோம்!

போராட்டப் பொங்கலெல்லாம்
போகியோடு போகட்டும்
அன்னம் படைத்தவன் மனமெல்லாம்
ஆனந்தத்தில் பொங்கட்டும்!





விமலா ரமணி

சிறுகதை

பூர்ணிமா

அப்பா இறந்து விட்டார். நம்ப முடியாவிட்டாலும் இது உண்மை. நடைப்பயிற்சியும், உடல் பயிற்சியும் செய்தவர். ஆனால் மனப் பயிற்சியின்றி மாண்டு போனார்.

''என் மூஞ்சியிலே முழிக்காதே'' என்னை ஆசிர்வதித்தவர்.

காலை விழித்தெழுந்த தூக்கக் கண்களுடன் என் மனைவி என் அருகில் நைட்டியுடன் வந்து அமர்ந்தாள்.

''அப்பா இந்தியாவிலே இறந்து போயிட்டாராம்... மெயில் வந்திருக்கு.''

''எப்போ கிளம்பறீங்க ராஜ்?''

''நோ... நான் போக முடியாது.''

''இட் ஈஸ் நாட் பேர்... என்னதான் கோபமிருந்தாலும்...''

''கோபமில்லை, பரிதாபம்தான். எனக்கு லீவு இல்லை. ரெண்டு ப்ரசண்டேஷன் சப்மிட் பண்ணணும். டெலிகேட்ஸ் வராங்க. லண்டன் போகணும். தகவல் அனுப்பிட்டேன். முடிஞ்சா ஸ்கைப்பிலே இறுதிச் சடங்குகளைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி இருக்கேன். டீடெய்ல்ஸ் அனுப்பி இருக்கேன்.''

ஸ்கைப்பில் அப்பாவின் இறுதி யாத்திரைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''வெளியே போ...'' என்று வாசலைச் சுட்டிக்காட்டிய விரல்கள் கட்டப்பட்டிருந்தன.



''அண்ணா... நீதான் என்னைக் காப்பாத்தணும். அப்பா என்னை வீட்டைவிட்டுத் துரத்திட்டார்.'' அழுதாள்... ஈகோ நிறைந்த சிவசங்கரன் என்கிற இந்துவின் மகள் ஓர் அந்நியனைக் காதலித்த குற்றத்திற்காக...

நடைப்பயிற்சி பயின்ற கால்கள் அசைவற்றுக் கிடந்தன. கோபக் கனலைக் கக்கிய வாய்கள் கட்டப்பட்டு எல்லோருக்கும் நடக்கும் இறுதி யாத்திரைக் காட்சிதான். ஆனால்...? காமிரா அவர் முகத்தைக் காட்டியபோது...? என்னுள் பல நினைவுகள்... சிவசங்கரன் என்ற மனிதரின்... பழைய கதைகள்...

எனக்கும் என் தங்கை அபிராமிக்கும் அப்பா தான் எல்லாம். அம்மாவைப் பற்றிய நினைப்பே இல்லை. அம்மாவின் பேர்கூட எங்களுக்குத் தெரியாது. அம்மா என்றால் சமையல் அறை மூலையில் புகையின் நடுவே ஒரு வியர்வை முகம் மட்டுமே தெரியும். அப்பாவும் அம்மாவை ''ஏய்... இந்தா...'' என்ற விளிச் சொற்களால் மட்டுமே அழைப்பார்.

அம்மாவின் பெயர் சிவகாமி என்பதுகூட ஒருமுறை அம்மாவிற்கு மணி ஆர்டர் வந்தபோதுதான் தெரிந்தது. சிவகாமி என்று போஸ்ட்மேன் கேட்டபோது, அப்பா கை காட்ட அம்மா வந்து கையெழுத்துப் போட்டுப் பணத்தை வாங்கினாள்.

அந்த மணிஆர்டர் வந்தபிறகு அம்மா கோவிலுக்குப் போவது அதிகமாயிற்று என்று நினைக்கிறேன். கோவில் கடைகளில் கண்ணாடி வளையல்கள் வாங்குவாள். எனக்குப் பாட்டரி வைத்த விளையாட்டு மோட்டார் கார், அபிராமிக்குப் பழுக்கா சொப்புக்கள் வாங்கித் தந்தாள். மரச் சொப்புக்கள். அதில் அடுப்பு, சமையல் பாத்திரங்கள், தோசைக் கல்... சின்னச்சின்னக் கரண்டிகள்... எல்லாமே இருக்கும். அபிராமி அதில் பொய்யாகச்

சமைத்து விருந்து படைப்பாள். இப்படித்தான் அம்மாவும் ஒரு பொய்யான வாழ்வு வாழ்ந்தாளோ?

ரொம்ப நாட்களுக்குப் பிறகுதான் நான் சிந்தித்தேன். கிராமத்தில் தாத்தா இறந்த பிறகு, அம்மாவின் பங்காக அந்த ஆயிரம் ரூபாய் மணி ஆர்டர் வந்தது என்பதும் நான் பிறகு அறிந்த உண்மைகள். அம்மா எதையும் எங்களிடம் சொன்னதில்லை. கேட்டால்தானே சொல்வதற்கு. எல்லாவற்றிற்கும் அப்பா முன் நின்றே பழக்கப் பட்டவர்கள் நாங்கள். இப்படிப்பட்ட அம்மா ஒருநாள் துளசி மடத்தின் அருகே பூஜை செய்த படியே மரணித்துப் போனாள்.

“புண்யாத்மா, சுமங்கலியா போயிட்டா” என்று ஊர்கூடி பரணி பாடியதே தவிர, அந்த ஜீவன் கடைசி விநாடிகளில் எப்படித் துடித்திருக்கும் என்பதையோ, மரண விநாடிகளில் நெஞ்சுவலி வந்து உதவ யாருமில்லாமல் எத்தனை ஜீவ மரணப் போராட்டம் நிகழ்ந்திருக்கும் என்பதையோ யாருமே நினைக்கவில்லை. நானும் காலம் தாழ்த்தி நினைத்தவன்தான்.

அப்பா என்னை கெட்அவுட் என்று சொன்ன போதுதான், நான் ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தேன். சென்னையில் என் பட்டப் படிப்பு தொடர்ந்த நேரத்தில் கல்லூரி ஹாஸ்டலில் நான் தங்கிப் படித்துக் கொண்டிருந்த சமயம். அபிராமி எங்கள் ஊரிலேயே பள்ளி இறுதியாண்டுப் படித்துக் கொண்டிருந்தாள்.

அன்று – என்னைத் தேடி ஹாஸ்டலுக்கு வந்தாள் அவள்.

“அண்ணா... நீதான் என்னைக் காப்பாத் தணும். அப்பா என்னை வீட்டைவிட்டுத் துரத் திட்டார்.”

அழுதாள்... ஈகோ நிறைந்த சிவசங்கரன் என்கிற இந்துவின் மகள் ஓர் அந்நியனைக் காத லித்த குற்றத்திற்காக...

இந்தச் சமூகத்தில் எத்தனையோ சம உரிமைகள் பெற்ற பெண்களுக்கு இன்னமும் சமூகநீதிகள் சரியாக வழங்கப்படவில்லை. சமூகக் கட்டுப்பாடு, மதம், சாதி, இனம் என்பன வற்றின் அடிப்படையில் சுய கணிப்புக்குப் பதி லாக, நம் தீர்மானத்தைப் பெண்களின் மீது திணிக்கும் செயலும் ஒரு வன்முறையே.

மானுடத்திற்கும் சமூகத்திற்குமான போராட் டம் இன்னமும் முடிவு பெற வில்லை. பாரம்பரியம், பண்புகள் போன்றவற்றால் சுய அடையாளம் இழந்த சிவகாமி, அபிராமிகள் எத்தனையோ நிஜத் துக்கும் கற்பனைக்குமான இடைப்பட்ட வாழ்வு மிகக் கொடுமையானது.

அபிராமிக்கு ஆறுதல் சொல்லி, அவர்களின் திருமணத்தைப் பதிவுத் திருமணமாகச் சட்டப்படி செய்து, கோவிலில் தாலி கட்டவைத்து, சர்ச்சில் மோதிரம் மாற்றி, நண்பர்கள் புடைசூழ விருந் துடன் திருமணம் செய்து முடித்தேன். அந்த லீவிற்கு ஊர் போனபோது, அப்பா என்னைப் பார்த்து “உள்ளே நுழையாதே. கெட்–அவுட்” என்றார்.

அன்று வெளியேறியவன்தான். எங்கெங்கோ சுற்றி ஸ்காலர்ஷிப்பில் படிப்பு முடித்து, காம்பஸ் இன்டர்வ்யூவில் செலக்ட் ஆகி, கார்ப்பரேட் கம்பெனியில் பதவிபெற்று யூ.எஸ். டிரெயினிங் போய் எஸ்தரைக் காதலித்து, அவளுக்குப் பெற்றோர் யாருமில்லாததால், எங்கள் காதல் நிறைவேறித் திருமணம் செய்து, நான் அமெரிக்கா வின் குடியுரிமை பெற்றபின் சுத்தமாக என் தந்தையை மறந்தே போனேன்.

எஸ்தரும் நல்ல பதவியில் இருந்தாள். நான் ஒரு வங்கியின் வைஸ் பிரஸிடெண்ட். பாதி நாள் இருவருமே சந்தித்துக்கொள்ள மாட்டோம். இன்று அதிசயமாக இருவருமே வீட்டில் வீக் எண்டில் இணைந்திருக்கிறோம்.

ஸ்கைப்பில் அப்பாவின் இறுதி யாத்திரைக் காட்சிகள்... ஈர உடையுடன் என் தந்தையின் சடலத்தின் முன் வந்து அமர்ந்த அவன்....?

இவன் அபிராமி காதலித்தவன் தானே? நான் திருமணம் செய்து வைத்தவன். எத்தனை வருடங் களுக்குப் பிறகு சந்திக்கிறேன்? அபிராமி எங்கே?

அப்போது என் அருகே அமர்ந்த படி, அந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த என் மனைவி எஸ்தர்... “இது என் பிரதர் ஜேம்ஸ்? இவன் எங்கே வந்தான்?” என்றாள்.

நான் திகைத்தேன். காலம் மனிதர்களை எப்படியெல்லாம் சேர்க்கிறது?

எஸ்தர் விவரித்தாள். ஒயில்ட் லைப் போட்டோகிராபி படித்த ஜேம்ஸ், தோளில் காமிராவுடன் நாடு நாடாக அலையும் கலைஞன். எஸ்தரின் தந்தைக்கு இதில் விருப்பமில்லை. அதுவும் அவன் இந்தியா வந்து ஓர் இந்துப் பெண்ணைக் காதலிப்பதாகச் சொன்னபோது, “நீ அவளைக் காதலிச்சுட்டு இந்தியாவிலேயே இரு, இங்கே வராதே...” என்று சொல்லிவிட்டாராம்.

எஸ்தர் சிறுமி, தந்தையின் மரணத்திற்குப் பிறகு படிப்பு, வேலை என்று அவள் வாழ்க்கை மாறிப் போனது. கடந்த காலச் சுவடுகள் எதுவும் அவளிடம் இல்லாமல் போனது. காலம் தாழ்த்தி நடந்த எங்கள் திருமணம் ஒரு பாலம் மட்டுமே. பகிர்தல் ஏதுமில்லை.

எனக்குத் தகவல் அனுப்பிய தந்தையின் நண்பருக்கு ஜேம்ஸ் பற்றிய விபரம் கேட்டு என்னைத் தொடர்புகொள்ள வேண்டிய விலாசத்தையும் தந்திருந்தேன்.

என் அபிராமி என்னவானாள்? எத்தனையோ கேள்விகள் என்னுள் மௌன விநாடிகளாக முடங்கிக் கிடந்தன... மனிதக் கடமைகளில் மனைவிக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் சேராதா? பெயர்கள் ஓர் அடையாளமா? ஆணவமா?

வாழ்வில் வண்ணங்களின்றி, ருசியின்றி, தன் விருப்பு வெறுப்பின்றி வாழ வேண்டிய கட்டாயத்தைப் பெண்களுக்குச் சுமத்தியது யார்?

அன்று – கொரியரில் ஒரு வீடியோ சி.டி. வந்தது. உயிர்ப்பித்தேன்.

கையில் அஸ்திக் கலசத்துடன் ஜேம்ஸ் ஆங்கிலத்தில் பேசினான்.

''பிரதர், உங்களை மறுபடியும் பாக்கறதுலே மகிழ்ச்சி. ஆனா முதல் சந்திப்பு திருமணத்திலேயும், இந்தச் சந்திப்பு மரணத்திலேயும் அமைந்தது என் விதி. அபிராமியும் நானும் சந்தோஷமாக இருந்தோம். அவள் நர்ஸ் டிரெயினிங் முடித்து வேலைக்குப் போனாள். உங்களை மாதிரி நாங்கள் வசதி படைத்தவர்கள் இல்லை. ஆனால் மகிழ்ச்சியாக இருந்தோம். சாதி, மத வேறுபாடின்றி மனிதத்துடன் வாழ்ந்தோம். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற பேதமின்றி அனைவரையும் மனிதர்களாக மதித்தோம். அவர்கள் உணர்வுகளை மதித்தோம்.

அதுவும் அபிராமி நர்ஸ் ஆனபிறகு அவளின் இயற்பெயரே மறந்துவிட்டது. அனைவருக்கும் அவள் சிஸ்டர்தான். தாயாய், தங்கையாய், சிநேகிதியாய், தாதியாய் வாழ்ந்தாள்.

இந்நிலையில்தான் உங்கள் தந்தை உடல் நலம் பாதிக்கப்பட்டு அந்த மருத்துவமனையின் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஆனால் அப்போதும்கூட அவரின் கோபம் தணியவில்லை. ''நீ என்னைத் தொட்டா, நான் வேறு ஆஸ்பத்திரி போயிடுவேன்'' என்றார்.

அபிராமி அமைதியானாள். ஆனால் அவருக்குக் கிட்னி பெயிலியர். யாருக்கும் தெரியாமல் தன் கிட்னியைத் தந்தாள் அபிராமி. எல்லா டெஸ்டுகளையும் ரகசியமாய் சீப் டாக்டரின் உதவியுடன் செய்து முடித்து, அவரைப் பத்திரமாய் வீடு திரும்பச் செய்தாள். ஆனால் கிட்னி தந்ததால், இவளுக்கு ஏதோ இன்பெக்ஷன் ஆகி இறந்து போனாள்...''

ஜேம்ஸ் அழுதான்.

''பிரதர், உங்கள் தந்தை அபிராமியை வெறுத்தார். ஆனால் அவர் உடல், அவளின் பாகத்தை ஏற்றுக் கொண்டது. ரொம்ப நாட்களுக்குப் பிறகு தன்னை கிட்னி கொடுத்துக் காப்பாற்றியது, தன் மகள்தான் என்பதை அறிந்த அவர், என் வீடு தேடி, விலாசம் தேடி வந்து எங்களைத் தன் இல்லம் அழைத்துப் போகக் கையில் பூங்கொத்துடன் வந்தவரைக் கண்ணாடிச் சிறைக்குள் மாலையுடன் வீற்றிருந்த அபிராமி வரவேற்றாள்.

''காலம்கடந்த யாசிப்புகள் கடமைகள் ஆகாது. தனிமை கொடியது. நான்தான் அவரை எங்கள் இல்லம் அழைத்து வந்து ஆதரவளித்தேன் அபிராமியுடன் அன்பாக வாழ வேண்டியவர். அனாதையாக வாழ்ந்தார். தன் மரணத்திற்குப் பிறகு தன் அஸ்தியைக் கங்கையில் கரைக்க வேண்டிக் கொண்டார். நான் காசி கிளம்பிக் கொண்டிருக்கிறேன்...'' ஜேம்ஸ் வீடியோவில் பேசிக் கொண்டே இருந்தான். என் எதிரே கலங்கிய கண்களுடன் வயிறு உப்பிய நிலையில் எஸ்தர் (மெட்டர்னிடி லீவில் இருக்கிறாள்).

''ஸ்கேனிலே பெண் குழந்தைன்னு தெரிஞ்சு போச்சு... என்ன பேர் வைக்கலாம்...?''

கோவில் கிளிகள்

கோவில்களில் பெரும்பாலும் புறாக்கள்தான் இருக்கும். அதுவும் மாடப்புறா. ஆனால், சனித் திருத்தலமான திருவாதவூரில் கிளிகள் நூற்றுக்கணக்கில் கோட்டைச் சுவர்களில், கோபுரத்தில் இருப்பது மிகவும் அரிய காணக்கிடைக்காத காட்சியாகும்.

– ஆர்.கே. லிங்கேசன்



எஸ்தர் கேட்கிறாள்... கல்லூரி நாட்களில் நான் படித்த கவிக்கோவின் கவிதை நினைவுக்கு வருகிறது...

“அரன் என்றாலும் வரம் தருவாய். அரி என்றாலும் சரி என்பாய். கர்த்தர் என்றாலும் அர்த்தம் நீயே. அல்லா எனில் நீ இல்லாமல் வேறு யார்? சொந்தப் பெயர் ஒன்றில்லாத உன்னை எந்தப் பெயரால் அழைப் பேன்?” நான் எஸ்தரைப் பார்க்கிறேன்.

பெயரற்ற சிவகாமியும் அபிராமியும் என்னுள் தோன்ற, முனை தெரியாத ஒரு வட்டத்திலிருந்து விடுபட்ட நான் சொல்கிறேன்...

“பூர்ணிமா.”

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்!



ஜோதி பெருமாள்

அன்பு அழகானது
அம்மா எனும் ஒற்றைச்
சொல்லைப் போல.

கட்டிவைக்க இயலாதது
காற்றைப் போல.
அடைத்து வைக்க இயலாதது
ஆழியைப் போல.
அளவிட முடியாதது வானத்தின்
பரப்பைப் போல.
கொடுக்கக் கொடுக்கத் தீராதது
மழையைப் போல.
கொடுத்தாலும் பெருகுவது
கல்வியைப் போல.
இறைக்க இறைக்கச் சுரப்பது
நீரைப் போல.
மறைக்க மறைக்க வெளிப்படுவது
பூவின் நறுமணம்போல.

இதோ...
அன்பினை மழையாய்ப்
பொழிகிறேன்
தீராத தாகத்தைத்
தணித்துக்கொள்.
மருந்தாய் உனக்கு
வருகிறேன்
காயத்தை என்னில்
ஆற்றிக்கொள்.
தீபமாய் எரிந்து
ஒளிர்கிறேன்
இருளில் என்னை
ஏற்றிக்கொள்.
மலரின் மணமாய் வீசுகிறேன்
மனதினில்
மகிழ்ச்சியாய்ப்
பூட்டிக்கொள்.
சொற்களாய் செவியினில்
நுழைகிறேன்
சுகமாய் ஆறுதல்
பெற்றுக்கொள்.
கனிவைப் பார்வையால்
தருகிறேன்
கவலையை முகத்தில்
மாற்றிக்கொள்.

விழிநீர் கீழே விழுமுன்
விரலாய் நானும்
இருக்கிறேன்
தோளாய் உன்னுடன்
இருக்கிறேன்
துவளாமல் என்னைப்
பற்றிக்கொள்.
குடையென விரிந்தே
உடன்வந்து
வெயிலில் மழையில்
காத்திடுவேன்.
சுமையுடன் நீயும்
நடக்கையில்
பாரம் குறைத்திட
நான்வருவேன்.
அன்பெனும் விதைகளைத்
தூவுகிறேன்
அறுவடை செய்தே
எடுத்துக்கொள்.

பழகியவரை வாழ்த்துவதும்
பாசங் கொள்ளுதலும்
இல்லத்து உறவிற்காக உயிர்
துடித்தலும்
இல்லார்க்கு ஈதலும்
அன்பின் அடையாளம்.

எதிரிக்கும் இன்னல்
நினையாதிருத்தலும்
முகமறியாதவர்க்காக
மனங்கலங்குதலும்
அன்பின் ஒருவகை.

மரணத்தின் விளிம்பில்
உயிர் வலியில் அவதியுறும்
தாயோ தந்தையோ விரைந்து
மரணிக்க
உள்ளத்தைக் கல்லாக்கி
வேண்டுவதும்
அன்பின் உச்சமன்றோ?
அன்பிற்கு ஏது
கட்டுப்பாடு?





19.12.2020 அன்று கோவை சிரவை ஆதீனத்தில் உலகத் தமிழாய்வு இரண்டாம் மாநாடு நடத்திய இசைத்தமிழ் ஆய்வரங்கத்தில் காட்சிக்கு வைக்கப்பட்ட 70 வகையான பழந்தமிழ் தாளவகை இசைக் கருவிகளையும், சங்கு இசைக் கருவிகளையும் பார்வையிடும் பேரூராதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் திருப்பெருந்திரு குமரகுருபர சுவாமிகள்.

பேரூராதீனம், சிரவை ஆதீனம், தமிழாய்வு அறக்கட்டளை இணைந்து நடத்திய இசைத்தமிழ் ஆய்வரங்கம்



மாநாட்டில் கலந்துகொண்ட ஆய்வறிஞர்களுடன் சிரவை ஆதீனம் திருப்பெருந்திரு குமரகுருபர சுவாமிகள்.

சென்ற இதழ் தொடர்ச்சி

பயணக் கட்டுரை

கார்ட்டூனிஸ்ட் மதி



பேலூர் பயணம்



ஸ்ரீ ராமகிருஷ்ணர் வீட்டின் வாசல்



அவரது வீட்டின் அருகே ஸ்ரீ ராமகிருஷ்ணரால் நடப்பட்ட மாமரம்

கிட்டத்தட்ட 5 ரோல் புகைப்படங்கள் எடுத்து இருக்கிறீர்கள். மொத்தம் இருநூறு இருக்கலாம். ஆனால் எங்களுடன் மொத்தமே 15 புகைப்படங்களைத் தான் பகிர்ந்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் வெளியிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் எனச் சில வாசகர்கள் ஆதங்கப்பட்டிருந்தார்கள். அருட்செல்வர் ஆரம்பித்த பத்திரிகை ஆயிற்றே. அதனால் 'ஓம் சக்தி' வாசகர்களும் அருள்நாட்டம் உடையவர்களாக இருப்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

எனவே, சென்ற இதழில் வெளியான எனது பேலூர் பயணம் புகைப்படக் கட்டுரை இந்த இதழிலும் தொடர்கிறது. அருட்செல்வர் பற்றி இங்குக் குறிப்பிட்டதுமே எனக்குக் காந்தியடிகள் பற்றிய நினைவு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. எனவே ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பற்றிய காந்தியடிகளின் கருத்தை முதலிலேயே இங்குப் பதிவுசெய்து கொள்கிறேன்.

"ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் வாழ்க்கை வரலாறு பரம்பொருளைக் காணற்குரிய பயிற்சியின் வரலாறு எனலாம். அவர்தம் வாழ்க்கை, இறைவனை நாம் நேருக்குநேர் காணுமாறு செய்ய வல்லது. அவரது வரலாற்றைப் படிப்பவர்கள் கடவுள் ஒருவரே உண்மைப் பொருள், மற்ற அனைத்தும் மாயை, பொய்ப் பொருள் என்பதை உணராமற் போகார். தெய்வத்தின் திருவுருவாக வாழ்ந்தவர்; அவர் திருவாய் மொழிகள் வெறும் கல்விமானின் சொற்களல்ல. வாழ்வெனும் நூலின் பக்கங்கள். அவை, அவர்தம் சுய அனுபூதியின் வெளிப்பாடுகள்.

"எனவே அவர் அறிவுரைகள் படிப்போரின் உள்ளத்தில் தடுக்க முடியா வண்ணம் நேரே சென்று பதிகின்றன. எதையும் நம்ப மறுத்துச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் இந்நவீனக் காலத்தில் அறிவுபூர்வமானதும், உயிரோட்டம் மிக்கதுமான கோட்பாட்டிற்கு வாழ்விலக்கியமாகத் திகழ்கின்றார். ஆயிரக்கணக்கான ஆடவர், பெண்டிர், அவர் இல்லையெனின் ஆன்மிக ஒளி காணமாட்டாது வாழ்வில் அல்லல்பட்டு அழிந்து போயிருப்பர். இவர்களுக்கு ஆறுதல் தரும் வகையில் அவர் காட்டிய கொள்கை இலங்குகிறது.


"ஸ்ரீராமகிருஷ்ணரின் வரலாறு அஹிம்சை எனும் அறத்தைக் கற்றுக் கொடுக்கும் பாடமாகும். அவர் கொண்ட அன்பிற்கு ஊர், உலகம் எனும் எல்லைகளோ, வேறு வரையறைகளோ கிடையாது" என்கிறார் காந்தியடிகள்.



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தந்தை க்ஷுதிராம் வழிபட்ட குலதெய்வம் ஸ்ரீரகுவீர் சாளகிராமம் : ஒருமுறை க்ஷுதிராமின் கனவில் அவரது இஷ்டதெய்வமான ஸ்ரீராம சந்திரர் ஒரு சிறுவனின் வடிவில் அவர் முன் தோன்றினார். பேரழகுடன் திகழ்ந்த அவன் ஓர் இடத்தைச் சுட்டிக்காட்டி, "க்ஷுதிராம், நான் கவனிப்பார் யாருமின்றி, உண்ண உணவு எதுவுமின்றி வெகுகாலமாக இங்கே கிடக்கிறேன். என்னை உன் வீட்டிற்கு அழைத்துச் செல். உனது சேவையைப் பெற நான் மிகவும் ஆவலாக உள்ளேன்" என்று கெஞ்சும் குரலில் கூறினான். பதிலுக்கோ க்ஷுதிராம் "பிரபோ, நான் பரம ஏழை. பக்தி என்பது சிறிதும் இல்லாதவன். என் குடிசையில் உனக்கேற்றதாக நான் என்ன சேவை செய்ய முடியும்? சேவையில் தவறு ஏற்பட்டுவிட்டால் உன் கருணையை நான் இழக்க நேருமே! என்னை ஏன் இத்தகைய இக்கட்டான நிலையில் ஆழ்த்தி சோதிக்கிறாய்?" என்று கேட்டார். அந்தப் பாலகன் அவரை அருள்கனிய நோக்கியபடியே அன்புடன், "அஞ்சாதே க்ஷுதிராம், எந்த அபராதத்தையும் நான் பெரிதாக எண்ண மாட்டேன், என்னை அழைத்துச் செல்" என்று கூறினான். அவ்வாறு ஸ்ரீராமச்சந்திரர் கூறிய இடத்திற்குப் பதைபதைப்புடன் சென்று பார்த்தபோது கிடைத்ததுதான் இந்தச் சாளகிராமம்.

காந்தியடிகளின் இந்தக் கருத்து என்னைப் பொருத்தவரையில் 100% உண்மை. இந்தக் கருத்தை எனது வாழ்க்கையில் முற்றிலும் உணர்ந்து இருக்கிறேன். கிட்டத்தட்ட முப்பது வருடங்களில் இதுவரை 17000 கார்ட்டூன்கள் வரைந்திருக்கிறேன். வாழ்க்கையில் ஆகட்டும், எனது பத்திரிக்கைப் பணியில் ஆகட்டும், நான் சந்தித்த இன்னல்கள் எல்லாவற்றையும் எதிர்த்து நின்று சாதிக்க உதவியவை ஸ்ரீராம கிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் மற்றும் அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் அமுத மொழிகள்தான்.

"ஒரு கையினால் இறைவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையினால் உனது உலகக் கடமைகளை ஆற்றிக் கொண்டு வா, நீ எங்கும் தப்பிப் போக மாட்டாய்" என்று குருதேவர் கூறுவார். ஆம். அதைத்தான் நான் இத்தனை வருடங்கள் செய்து வந்திருக்கிறேன். ஒரு கையினால் குருதேவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு மற்றொரு கையினால்



ஜுகிக்களின் சிவன் கோவில் : ஒருநாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தாயார் சந்திரமணி தேவி தனது தோழி மற்றும் பணிப்பெண் ஆன தனியுடன் ஜுகிக்களின் சிவன் கோவிலின் முன் நின்று பேசிக் கொண்டிருக்கும்போது சிவலிங்கத்தில் இருந்து ஒரு பேரொளி கிளம்பிக் கோவிலெங்கும் பரவி, பின்னர் அவ்வொளி அவரை நோக்கி வந்து தனது வயிற்றில் புகுவதைக் கண்டார். அக்கணமே மயங்கி விழுந்த சந்திரமணிதேவி, மயக்கம் தெளிந்த பின் தன் கணவர் க்ஷுதிராமிடம் தான்கோவிலில் கண்ட காட்சிகளை விவரித்து, தான் இப்போது கருவுற்றிருப்பதாக உணர்கிறேன் என்று கூறினார். ஏற்கெனவே க்ஷுதிராமின் கனவில் சிவபெருமான் தோன்றி, விரைவில் உனக்கு மகனாகப் பிறக்கவுள்ளேன் என்று கூறியிருந்தார். எனவே தம்பதிகள் இருவரும் தங்களுக்கு ஒரு தெய்வக் குழந்தை பிறக்கப் போகிறது என மகிழ்ந்தனர்.



ஸ்ரீ ராமகிருஷ்ணரின் காலணிகள்

கார்ட்டூன்கள் வரைந்து கொண்டிருக்கிறேன்.

மேற்கு வங்காளத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் சம்பந்தப்பட்ட இடங்களுக்கெல்லாம் நானும் எனது இளம் மனைவியும் செல்கையில், அங்கு வந்திருந்த மற்ற பக்தர்கள் எங்களை மிக வியப்போடுதான் பார்த்தார்கள். ஏனெனில், பெரும்பாலானவர்கள் தங்களின் நடு வயதைக் கடந்து இருந்தவர்கள் அல்லது முதியவர்கள். திருமணமான கையோடு இங்குவந்து இருக்கிறீர்களா, என்று வியந்தவண்ணம் எங்களிடம் மிக அன்பு பாராட்டித் தங்களது ஆசீர்வாதங்களை அளித்தார்கள்.

ஆனால், தேனிலவு செல்வதை உதறிவிட்டு பேலூர் மடத்திற்குச் சென்றது எனக்கு எந்த வியப்பையும் தரவில்லை. சுமார் ஏழு பத்திரிகைகளில் பிரீலான்சர் ஆகக் கார்ட்டூன்கள் வரைந்து கொண்டிருந்தாலும், எஞ்சிய நேரத்தில் இந்தத் தெய்வத் திருமூவரின் (ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதை) வாழ்க்கையையும் போதனைகளையும் படிப்பது எனது பொழுதுபோக்காகவே மாறிவிட்டிருந்தது.

தேர்தல் காலங்கள் மற்றும் வேறு சில சமயங்களில் பணிச்சுமை காரணமாக இத்தகைய புத்தகங்களைத் தொடக்கூட நேரம் இருக்காது. ஆனால், அத்தகைய சமயங்களில் மறக்காமல் புத்தகங்களின் மீது ஓரிரண்டு பூக்கள் வைப்பது எனது வழக்கம். இந்தப் பழக்கத்திற்கும் குருதேவர்தான் காரணம். "அவதார புருஷர்கள் வேறு, அவர்களது வார்த்தைகள் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே" என்பார். எனவே அவர்களது போதனைகளை நான் வெறும் போதனைகளாகப் பார்க்கவில்லை. மாறாக அவர்களாகவே பார்த்தேன்.

சமயம் கிடைக்கும் பொழுதெல்லாம் மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்திற்குச் செல்வது வழக்கம். மடத்தில் பக்தர்கள் உட்காருவதற்கும், சன்னியாசிகள் உட்காருவதற்கும் வெவ்வேறு இடங்கள் ஒதுக்கப்பட்டு இருக்கும். குருதேவர் முன் சம்மணமிட்டுத் தியானத்தில் உட்கார்ந்து இருக்கும் அத்தகைய சன்னியாசிகளைப் பார்க்கும் பொழுதெல்லாம் இவ்வையகத்



தனி இல்லம் (தற்போது ஸ்ரீ ராமகிருஷ்ணரின் திருஉருவம் அங்கு வைக்கப்பட்டுள்ளது) : தனி, சந்திரமணிதேவியின் (ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தாயார்) தோழி. கதாதரனை வளர்ப்பதற்கு சந்திரமணி தேவிக்கு உதவியாகவும் இருந்தவர். அக்காலத்தில் உபநயனம் என்னும் பூணூல் அணிவிக்கும் சடங்கு அன்று பிகைஷ ஏற்றல் என்ற சடங்கும் நடக்கும். அப்போது பூணூல் அணிவிக்கப்பட்டவன் வேதியர் குலப் பெண்களிடம் பிகைஷ ஏற்பது தான் மரபு. ஆனால் கதாதரனோ தனது சிறு வயதிலேயே அத்தகைய பூணூல் சடங்கு அன்று தனியிடம் தான் பிகைஷ ஏற்பதாக அவளிடம் வாக்குக் கொடுத்திருந்தான். அப்போது கதாதரனுக்கு வயது ஒன்பது. உபநயனம் நாளும் வந்தது. தனது சகோதரன் ராம்குமாரிடம் தான் தனிக்குக் கொடுத்த வாக்குறுதி பற்றிச் சொன்னான். ராம்குமாரோ உறுதியாக இதற்கு வாய்ப்பில்லை என்று மறுத்தார். ஏனென்றால், தனி வேதியர் குலப் பெண் அல்ல. கொல்லர் இனத்தைச் சார்ந்தவள். பதிலுக்கு "அண்ணா, தனியிடமிருந்து பிகைஷ ஏற்கத் தவறினால் நான் சொன்ன சொல் தவறியவன் ஆவேன். சத்தியத்திலிருந்து வழுவிய ஒருவன் பூணூலை அணிந்துக் கொள்ளவே தகுதியற்றவன் ஆகிவிடுவான். எனவே நான் எப்படி பூணூல் அணிய முடியும்?" என்று வாதம் செய்தான். அந்த வாதத்தில் வெற்றி பெற்று இறுதியில் தனிக்குக் கொடுத்த வாக்குறுதியையும் காப்பாற்றினான். (பிற்காலத்தில் உண்மையான இறை பக்தர்களுக்கு ஜாதி என்பதே கிடையாது என்று போதித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். பூணூல் மற்றும் அகங்காரத்தை ஏற்படுத்தும் வேறு எந்த அடையாளச் சின்னங்களும் பக்தர்களுக்கு இருக்கவே கூடாது என்று உலகிற்குப் போதித்து" தானும் அதுபடியே வாழ்ந்தும் காண்பித்தார்)

தில் மிகப்பெரும் கோடீஸ்வரர்கள் இத்தகைய துறவிகள்தான் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும்.

ஏனென்றால் நூற்றுக்கு 99.99 சத விகிதம் பேர் இறைவனின் படைப்புகளில் மயங்கிக் கிடக்கிறோம். அல்லது அதன் பின் பணம், பொருள், பதவி... என ஓடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இத்தகைய துறவிகள் படைப்புகளை விட்டுவிட்டுப் படைப்பாளியைப் பிடித்துக் கொண்டிருக் கிறார்கள். இவர்களை விஞ்சிய கோடீஸ் வரர்கள் வேறு யார் இருக்க முடியும்? இத் தகைய கருத்துகள் என்னுள் மிகமிக ஆழப் பதிந்து இருந்ததால், எனக்கு இந்த வித்தி யாசமான தேனிலவு எந்த ஆச்சரியத் தையும் தரவில்லை.





காளிக் கோவில் வளாகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தங்கியிருந்த அறை

பஞ்சவடி (தற்போதைய தோற்றம்) : ஆல், அரசு, வில்வம், நெல்லி, அசோகம் ஆகிய ஐந்து மரங்கள் சூழ்ந்த பகுதியை பஞ்சவடி என்பர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் அடர்ந்த காடு போல் இருந்தது இந்த இடம். உள்ளே செல்லவே பலரும் பயப்படும் இந்த இடத்தில்தான் இரவு பகலாக ஸ்ரீராமகிருஷ்ணர் பல்வேறு யோக சாதனை களைச் செய்துவந்தார்.

மேலும் பக்தியைப் பொருத்தவரை யில் "அவனருளாலேயே அவன்தாள் பணிந்தேன்" என்ற திருமூலரின் வாக்கு மட்டுமே பேருண்மை என்ற கருத்தில் எனக்கு என்றும் சந்தேகம் இருந்ததில்லை. குருதேவர் அருளினாலே அவர் மீது எனக்குப் பக்தி வந்தது. பொதுவாகவே குருவைத் தேர்ந்தெடுக்கும் அறிவாற்றல் நமக்குக் கிடையாது. ஆற்றுப்படுகையில் இருக்கும் கூழாங்கற்களில் நமக்குத் தேவை யானவற்றைப் பொறுக்கி எடுப்பதுபோல், குருவே தனது பக்தர்களைத் தேர்ந்தெடுக் கிறார் என்பதுவே எனது திடமான எண்ணம்.

ஆனாலும் ஒரு சிரமம் இருந்தது. அது பேலூர் மடம் சென்று குருதேவரின் ஆசி களைப் பெறும்வரை திருமணம் ஆகியி ருந்தாலும், எங்களது இல்லற வாழ்க்கை யைத் தொடங்குவது இல்லை என்று ஒரு சங்கல்பம் செய்து இருந்தேன். என் மனைவியும் அதற்குச் சம்மதித்து இருந் தார்.

திருமணமான புதிது என்பதால், இங்கிருந்து கல்கத்தாவிற்குச் செல்வதற்கு ஹவுரா விரைவு ரயிலில் முதல் வகுப்பு கூபேவில் பயணச்சீட்டு எடுத்து இருந் தோம். ரயிலில் ஒரு தனி அறை போல் இருக்கும். நானும் மனைவியும் அந்த அறையில் தனியாகத்தான் பயணித்தாக வேண்டும். இம்மாதிரி சூழல் நான் எடுத்த சங்கல்பம் அந்தப் பயணத்தை ஓர் ஆ'சிரம' வாழ்க்கையாகவே மாற்றி யிருந்தது. வேறு ஒரு பெண்ணுடன்



பஞ்சவடியில் இருந்த குரங்குக் குடும்பம் ஒன்று! சொன்னால் நம்புங்கள், அத்தனை குரங்குகளும் பரம சாது!



நஹபத் : காளிக்கோயில் வளாகத்தில் அன்னை ஸ்ரீசாரதாதேவி தங்கியிருந்த அறை

தனியாக இம்மாதிரி பயணிப்பது என்பது எனக்கு எந்தச் சிரமத்தையும் அளித்து இருக்காது. ஆனால் கிட்டத்தட்ட ஒரு 8 அடிக்கு 6 அடி அறையில் மனைவியுடன் தனியாகப் பயணம் செய்வது என்பது சிரமமாகவே இருந்தது. சுவாமிஜி சொல்லுவது போல், பிரம்மச்சரியம் காப்பது என்பது கத்தி மேல் நடப்பதற்கு ஒப்பானதாகும் என் பதை நான் நன்றாக உணர்ந்த தருணம் அது!



ஜெயராம்பாடி – அன்னை சாரதாதேவி வீட்டின் வாசல்

எனக்குக் குருதேவர் மீதான பக்தி பல வருடங்களாக இருந்த ஒன்று. ஆனால் எனது மனைவி விஷயத்தில் அப்படி அல்ல. அவரது கல்லூரிப் படிப்பு முடிந்ததும் என்னைக் கரம்பிடித்தார். ஆனால், நான் எடுத்த சங்கல்பத்திற்கு அவரையும் பணிய வைக்கிறேன் என்ற குற்றஉணர்வும் நாங்கள் செல்லும் இடமெல்லாம் என்னுடன் பயணித்துக் கொண்டிருந்தது. இத்தகைய குற்ற உணர்வு ஏதும் உனக்குத் தேவையில்லை என்பதை அன்னை சாரதை எனக்குப் புரியவைத்தத் தருணம் ஒன்று வந்தது.



காங்குர்காச்சி கோவில் : ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அஸ்தி முதன்முதலாக வைக்கப்பட்டு வழிபடப்பட்ட கோவில்

அவர் பிறந்த கிராமமான ஜெயராம்பாடியில் இரண்டு நாள் தங்கி இருந்தோம். மதிய உணவிற்காக இலை போடப்பட்டது. சாதத்தோடும் காய்கறிகளோடும் ஒரு மீன் துண்டும் பரிமாறப்பட்டது. உலகம் முழுவதும் உள்ள ராமகிருஷ்ண மடங்களில் எந்த இடத்திலும் அசைவ உணவு கிடையாது. ஆனால் ஜெயராம்பாடியில் மட்டும் இது நிகழ்ந்தது. எனக்கு ஆச்சரியம். நானோ “எங்களுக்கு இது வேண்டாம், தயவு கூர்ந்து எடுத்து விடுங்கள், நாங்கள் சுத்த சைவம்” என்று கூறிவிட்டேன்.

ஹுக்ளி நதியிலிருந்து பேலூர் மடத்தின் அழகிய தோற்றம்



அவர்களும் அதை இலையிலிருந்து எடுத்துவிட்டார்கள். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது என் மனைவியின் அருகில் இருந்த ஒரு பக்தையிடம், “ஏன் இங்கு மட்டும் மீன் பரிமாறப்படுகிறது?” என்று என் மனைவி கேட்டிருப்பார் போலும். பதிலுக்கு அந்தப் பெண்மணி, “அன்னை சாரதைக்கு இந்த மீன் மிகவும் பிடித்தமான உணவு. ஆதலால் ஜெயராம்பாடியில் மட்டும் இந்த மீன் பரிமாறப்படுவது வழக்கம்” என்று கூறியுள்ளார்.

(அடுத்த இதழில் முடியும்)



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options
BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
Micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly®
TATA Sky
Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
D by sr printers 9843110277
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication 28.12. 2020

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - JANUARY - 2021